சரசுவதி மகால் நூலக வெளியீடு எண். 312.

மாமன்னர் சரபோசி

(ஆய்வுக் கோவை)

தொகுதி - 3.

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூ

சரசுவதி மகால் நூலக வெளியீடு எண். 312.

மாமன்னர் சரபோசி

(ஆய்வுக்கோவை தொகுதி III)

பதிப்பாசிரியர் :

பேராசிரியர் மு. சதாசிவம், எம். ஏ., எம். லிட்.,

இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.

வெளியீடு:

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

1990] [விலை ரூ. 25—00

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	...	Ma Mannar Serfoji
Editor	...	Director Sarasvati Mahal Library
Publisher	...	do.
Publication No.	...	312
Language	...	Tamil
Edition	...	I Edition
Date of Publication	...	Dec. 1990
Paper used	...	14·2 Kg. Seshasayee
Size of the Book	...	21 × 14 cm.
Printing Type used	...	12 pt.
Number of pages	...	198
No. of copies	...	1000
Price	...	Rs. 25/- (Rupees Twenty-five only)
Printer	...	Sarasvati Mahal Library Press
Binding	...	Card Board
Subject	...	History

முன்னுரை.

தஞ்சை சரசுவதி மகால் நூலகம் வரலாற்றுக்குத் துணைநிற்கும் இலக்கியங்களை ஏராளமாகப் பல்வேறு மொழிகளில் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை யாவரும் அறிவர். சுவடிகள் மற்றும் அரிய பல நூல்களையும் மாமன்னர் சரபோசி தம் ஆட்சிக்காலத்தில் சேகரித்து இந்நூலகத்தில் விட்டுச்சென்றுள்ளார். அம்மன்னர் போற்றி வளர்த்த பாங்கும், அவர் செலவிட்ட தொகையும் இந்நாட்டாரைமட்டுமின்றி வெளிநாட்டாரையும் பிரமிக்கச் செய்துள்ளது. ஆகவே, அவர் வழிவந்த அரச குடும்பத்தவர்களும், தமிழ்நாடு அரசும் கி. பி. 1918-ஆம் ஆண்டுமுதல் இந்நூலகம் பண்டிதர்முதல் பாமரர்வரை அனைவருக்கும் பயன்பட வேண்டுமெனக்கருதி, அரண்மனை நூலகமாக இருந்து வந்த இதனைப் பொது நூலகமாக அறிவித்து நிர்வகித்து வருகிறது. அந்நாள் முதற்கொண்டு அரிய சுவடிகளை அச்சிட்டும், ஆய்வு நூல்களைத் தயாரித்தும் இதுவரை முன்னூற்கும் மேற்பட்ட பதிப்புகளை வெளிக்கொணர்ந்து உள்ளது.

இரண்டாம் சரபோசி மன்னர் கி. பி. 1777-ஆம் ஆண்டு செப்டம்பர்த்திங்கள் 24-ஆம் நாள் பிறந்தார். இவருடைய பிறந்தநாள் விழா ஒவ்வொரு ஆண்டும்

நூலகத்தில் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டும் இம்மன்னர்தம் 213-வது பிறந்தநாள் விழா கடந்த செப்டம்பர்த்திங்கள் 23, 24-ஆம் தேதிகளில் கொண்டா டப்பட்டது. அந்தவிழாவில் மாமன்னர் சரபோசி ஆய்வுக் கோவை தொகுதி இரண்டு வெளியிடப்பட்டது. இத்தொகுதியில் மன்னர்தம் சிறப்பியல்புகள் வெவ்வேறு கோணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் எல்லாக் கட்டுரைகளையும் அச்சிட்டு அவ் விழாமலரில் வெளியிட இயலவில்லை. மேலும் மன்னர் சரபோசி தொடர்பான சில கட்டுரைகள் இந் நூலக வாயிலாக முன்பே வெளிவந்தவைகளாயினும், ஆய்வாளர்களுக்கு உதவியாக இருக்குமென்று கருதி, அவற்றையெல்லாம் ஒன்று திரட்டி இத்தொகுப்பினை "மன்னர் சரபோசி ஆய்வுக்கோவை - 3" என்ற தலைப்பின்கீழ் வெளியிட்டுள்ளோம். ஒவ்வொரு கட்டுரையின் கடைசியிலும் விபரம் கொடுக்கப்பட் டுள்ளது.

இம்மலரில் 14 கட்டுரைகள் வெளியிடப்பட்டு உள்ளன. அவற்றுள் திருவாளர்கள் தஞ்சை ஈ. ஏ. செல்வத்துரை; ஈரோடு பெ. சண்முகம்; கும்பகோணம் வே. மகாதேவன்; தஞ்சை கே. மணமலர்; சுந்தரவா தூலன் ஆகியோர் இம்மலருக்கு எழுதிய கட்டுரைகள் முதன்முதலில் வெளியிடப்படுகின்றன. ஏனைய எட்டுக் கட்டுரைகளும் முன்பே நூலகப் பருவஇதழ் வாயிலாக வெளிவந்தவைகள். அடுத்து இம்மன்னரின் 213-வது பிறந்தநாள் விழாவையொட்டிக் கவியரங்கம் ஒன்று சங்கீத மகாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குப் புலவர் சி. இளங்கோவன் அவர்கள் தலைமைதாங்கினார்.

பாவலரேறு ச. பாலசுந்தரனார், நாவலர் சி. அரசப்பனார், புலவர் வீ. சொக்கலிங்கசாமி ஆகியோர் தாம் புனைந்த கவிதைகளைக் கவியரங்கில் பாடினார்கள். அக் கவிதைகளை யாவரும் துய்த்தின்பம்கொள்ள வேண்டு மெனக் கருதி அப்பாக்களையும் இங்கு வெளியிட்டுள் ளோம். மேலும் இந்நூலக வாயிலாக வெளிவந்த நான்கு பதிப்புகளைப்பற்றிப் பாளையங்கோட்டை முனைவர் பா. வளன்அரசு திறனாய்வுசெய்து சரபோசி விழாக் கருத்தரங்கில் பேசினார். அதனையும் நூல் மதிப்புரைகள் என்ற தலைப்பின்கீழ் இறுதியில் அச்சிட்டுச் சேர்த்துள்ளோம். அவர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த பாராட்டுகளை உரித்தாக்குகிறோம்.

இம்மலர் செம்மையுற வெளிவரச் செயலாற்றிய நூலகர் திரு. எம். சீராளன் அவர்கட்கும், நன்முறை யில் அச்சிட்டுத்தந்த நூலக அச்சுப்பிரிவினர்களுக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இத்தொகுதி அச்சாகி வெளிவர ஆக்கம்தந்து ஆதரவு நல்கிய மைய அரசுக்கும் நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறோம்.

தஞ்சாவூர், மு. சதாசிவம்,

27—12—90. இயக்குநர்.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
31—12—90.

மு. சதாசிவம், எம்.ஏ.,எம்.லிட்.,
இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.

உள்ளுறை

*

பக்கம்

1.	The Maharaja Serfoji Scholar Prince ...	9
2.	கலை வளர்த்த காவலன் ...	18
3.	தஞ்சை மராத்திய அரசர்களும், கிறித்துவமும் (17, 18-ஆம் நூற்றாண்டுகளில்) ...	23
4.	மாமன்னர் சரபோஜியின் சாதனைகளும், சமயப் பணிகளும் ...	41
5.	Glimpses into our Modi Records Dhanvantari Mahal ...	61
6.	தஞ்சை சகசி மன்னர் ஆட்சியில் மலர்ந்த குறவஞ்சி இலக்கிய மலர்கள் ...	68
7.	இரண்டாம் சரபோஜியின் சமயப்பணிகள் ...	79
8.	சரபோஜி மன்னரும், மராத்தி இலக்கியமும் ...	102
9.	Raja Serfoji's Contribution to Technology ...	123
10.	சரபோஜி மன்னரும், கல்வெட்டுக்களும்	128
11.	கல்விக்காக உயிர்வாழ்ந்த மன்னன் ...	139
12.	மருத்துவத் துறையில் மன்னர் சரபோஜி	143

பக்கம்

13. Sidelights on the Annexation of the Tanjore Kingdom in 1855 A. D. ... 153

14. மாமன்னர் சரபோசி விழாக் கவியரங்கம் 161

15. நூல் மதிப்புரைகள்

(i) மனுவேல் எழுதிய அதிரியர் அம்மானை ... 177

(ii) வாதரோக சிகிச்சை ... 187

(iii) எண்ணெய் வாகடம் ... 189

(iv) வண்ணத் திரட்டு ... 191

The Maharaja Serfoji Scholar Prince

(1798 — 1832)

THULAJENDRA RAJAH SAHIB
Prince, Life Member,
T. M. S. S. M. Library, Thanjavur.

Maharaja Serfoji was born on 24—9—1777 A.D. He was adopted by Thulaja Maharaja of Thanjavur and was a descendant of Trimbukji, the son of Vittoji brother of Shahaji, father of Venkoji Chatrapathy the founder of the Thanjavur Maharatta Dynasty and half-brother of Chatrapathy Shivaji the Great.

Thulajaji adopted Serfoji with all the Ceremonies requisite to render it legal and valid and it was announced to the Governor of Madras. He placed his son in the hands of Mr. Schwartz excused himself and pointed out the dangers surrounding the young child knowing that there were competitors and parties in the Palace who aspire to the Government. Cabals and animosities would ensue more than the king thought of and there would be danger to the life of the boy and the Kingdom would be involved in confusion. The Raja asked him what method do you propose? Schwartz answered:

"You have a brother, deliver the child to him; charge him to educate and treat him as his own son, till he is grown up. His health and life may be preserved and the welfare of the country may be secured. During this time, one Dada Rao was a talented Maratha and served under Thulaja. He was selected by Danish Missionary Schwartz to take charge of the early education of Prince Serfoji. His heroic handling of a tiklish situation has saved the Library from destruction when the armies of the East India Company and the Nawab of the Karnatic when they wanted to remove the precious manuscripts in the Sarasvati Mahal Library and use it as powder Magazine. His success in impressing on the invaders the priceless worth of the treasures in the Library is a land mark in Tanjore history.

During Serfoji's minority Amarsingh was appointed Regent till the boy Serfoji came of age. But Amarsingh's intention was to usurp the throne and hence ill-treated Serfoji. Schwartz was responsible in deposing Amarsingh and reported to the company Government about the ill-treatment of Serfoji. He was declared to be the Ruler of Thanjavur in 1798. Serfoji devoted his time in pursuit of culture and learning and thus became great. He was an enlightend prince of that age, and his many sided genius with vast knowledge, wider sympathies, correct sense of proportions, clear foresight and a deep seated awareness that the growth of the human spirit is the most precious possession an individual, a country. or a world can know of. He dedicated his entire life towards serving knowledge and truth which would in their turn lead humanity to a higher plane of life than it is at present. He was an age of intellectual expansion which saw the development of the systematic study of nature and the emergence from their infancy of the modern sciences, the wonderful triumphs which have

revólutionised the world. It was then the wealth and value of Indian culture, commenced to captivate the great minds in the west. Here gratitude demands of me to give contemporary picture of Maharaja Serfoji, which would vividly bring his personality, reminding us, how he would have developed this famous library. Had circumstances permitted what a colossal intellectual edifice we would be having on the foundation laid with such a broad base. Existence of his historical and precious Library at Thanjavur located in the Sarasvati Mahal of the Thanjavur Palace to which many may have visited out of curiosity in the same way as one visits some of the important relics of the past, but beyond a mere passing visit as a piece of historic relics, many would not have given a thought over its greatness. The work of collections was begun from the days of the Naicks who were very great patrons of learning continued the work and the work of systematic collections was undertaken by the Scholar Ruler of Thanjavur Serfoji Maharaja who claimed to have proficiency not only in almost all oriental languages but also in some of the European and other Indian languages.

Bishop Heber, who visited Maharaja Serfoji in 1826, said on his return from the visit, "I have seen many crowned heads, but not one whose department was more princely". Besides Heber, several foreigners of great reputation and scholarship such as Dr. Balandinu Buchanan, Bishop Middleton and Lord Valentia who paid a visit to Thanjavur Court, have left very valuable impressions of the Raja and his cultural activities. Buchanan was very much impressed by seeing the College Raja had started for the education of Hindus, Mohammadans and Christians after hearing Rajah's bandsmen who played more than eight vinas with other native and foreign instruments and on examining the

valuable collections of the Sarasvati Mahal Library a list of which was presented to him by Maharaja Serfoji.

Lord Valentia who visited the East in the year 1803-06 gives a vivid pictures of Serfoji, and said "The Rajah's manner are excellent and good nature becomes from his countenance. The fecility and propriety with which impressed himself in English was to me a great satisfaction. It was the first time I had been able to converse with a native Prince except through an interpreter."

He was a great administrator and divided his departments into 16 Karkhanas and twelve Mahals each under a Superintendent called Dimmat. The Kharkanas were departments of the state while the Mahals were departments of the Royal household. Every paper must be presented to the Rajah only through the departmental Head and in some cases with the Sarkhel's recommendations. Breaches of this regulation were taken very serious notices of. Now and then Rajah Serfoji compiled codes of conduct and rules for all officers beginning from Harikars (messengers to that of Sarkhel) (Secretary-General.)

He is a multilinguist. Contemporary accounts tell that he was a scholar in English, French and German. His several works in Indian languages prove that he is a scholar in Telugu. Bishop Heber after his interview with Serfoji in 1825 records thus "Rajah of Tanjore Quotes Foncroy, Lavensier, Livnacus and Buffon fluently and has formed a more accurate judgement of poetical merits of Shakespeare's theme than that so felicitiously expressed by Lord Byron and has actually written very superior." English poetry.

He wrote hundreds of songs in Marathi and Telugu all set to Music and Dance and for recitals. He is the author of several dance pieces like Alarippu, Jateswar, Sabdham. Varnams, padams. He has composed numberless 'கவுத்துவம்' Slokavarnam and Prabhandas all adopted to Bharatanatyam, Swaras, Jatis and Shaithyas with their respective notations in Indian swaras are given for every item with meticulous care. His collection in Bharatanatya Dance is perhaps the largest in the whole of India. No where in India in one single place can be seen such a huge collection on sampradaya Natyam. Such rare types of dances like Jakkinu, Perani, Dhurpudam, Desi, Navapadam and Kuravai were in vogue and we have evidence of their being practiced at his court. These types of dances have now become absolute.

He is also credited by Lord Valentia who visited him in 1804 as capable of composing tunes in English and he is now training a English Band having brought together instruments from Europe and his orchestra comprised of several native and English instruments richly ornamented with Diamonds and pearls.

He composed songs in several Indian languages capable of orchestrations in western musical instruments. Indian tunes and ragas were set to European staff notations fit to be used in his orchestra. They are recorded in several of his music books. Bharatanatya was then at its peak and several prodigies whose compositions are now considered the best that South India has ever produced, flourished in his court. The traditional Bhagavata Mela to oldest type of dance drama of the South received, ampie support at his hand. Artists of the Bhagavatha mela of the villages of Saliamangalam, Theppermanallur, Orathanad, Needamangalam, Serfoji gave gifts of land and cash. To many

of his chatrams Bhagavathamelas were attached and provision was made for their up keep in the Chatram income. Similarly many dance teachers were given lands and houses and to some outstanding ones Royal parapharnalias (பிருதுகள்).

Serfoji devoted his attention not only towards revival of serious types of dance but introduced in Tanjore some lighter types of folk dances like Modi dances with bag pipers, Kanchin Nantch a kind of street dance drama with some adoptations from Kathak dance of North India and Dummy horse dance, a kind of folk dance on model of the nomadic religious mendicants of Maharashtra accompanied by sammel or Kirikatti like twin drum.

To Serfoji is ascribed the orgin of Tanjore Band. His band consisting of both European and Indian musical instruments was so famous that on a request from the Governor of Madras the Rajah sent his orchestra with his able Minister Varahappier who played the main Veena. They earned fame and name to Serfoji and since then such combined orchestra came to be known as Tanjore band.

Music was the main stay of Rajah Serfoji, for to him South India owe a great deal for the revival of Karnatic music in its purest form. In fact South India's greatest Musicians lived in his period and left a rich heritage of superior musical composition to posterity; and after him no composers of the calibre of Serfoji musicians appeared in musical tournament.

Such great genius like Venkatasubbiya, Anai and Ayya brothers, Vedanayagam, Ramadoss the Hindustani singer Paidala Gurumurthi, Veena Annachi Iyer,

Veena Subbukutti Iyer, Veena Kalashti Iyer-Thalanayer Krishnayyar; Palani Somu, Pallavi Gopala Iyer, Ayyanaiyyar, Thodi Sethuramayyar, Subbaraya Shastri, Sama Shastri's son Vaischari, Doraiswami Iyer, Erattai Pallani Sivarama Iyer, Chawkkam Seenuvaiyyangar and many others adorned his court.

Serfoji patronised poets and scholars. At regular intervals he used to call for Vidwat Sadas and delighted in hearing extempore poetry, panegerics and discussions on Tharka Shastra and Niti Sastra. Great Sanskrit and Marathi authors like Narayanasuri, Sabda Bhusana, Vancheesa Yagneswara Diksit, Virupaksha Govinda Kavi Rukmagi Sesha Kavi, Mukundaraj, Meruswami and a host of others adorned his court. Mathruboota Kair, Sivakolunthu Desikar, Vasudeva Pillai, Thirumangala Pillai Vallabhendrar and similar Tamil poets were patronised by Serfoji. Their works are legions and they deal with all branches of science and art. His period brimmed with literary activities. In fact such a renewal took place in the time of his illustrious ancestor Raja Sahaji and Serfoji's reign being a second spring after the efflorescence of literary activity during Shahaji Rajah's rule who was called by his people as Abhinava Bhoja and Sarvagni Choodamani.

Swathi Tirunal Maharaja of Travancore even before he came to the throne kept contact with Serfoji and exchanged scholars, musicians and even their personal composition.

The most famous educational centre outside the limits of Tanjore city is the Orthanad Chatram. It is also recorded that several distinguished Europeans like the Governor Pigot of Madras, Captain Chalminer, Commander Hessi, Lord Valentia, John Blackburn Bishop

Heber and others have visited the educational institutions of Serfoji at Orathanad and they call these institutions as "Rajah's several colleges" in their reference and have praised the magnanimity, foresight of Rajah Serfoji and his singular devotion to the welfare of his people.

HIS MEDICAL INSTITUTIONS

His contribution to the improvement of Indian medicine is by far the greatest. He established a medical research institution known as "Dhanvantari Mahal" which provided medical activities for his people.

He started the first press in Tanjore called "Nava-vidya Kalasala Vasnayantra for producing copies of all the great works in Indian Languages for publication among the people.

He ran several hospitals in his state. In some hospitals European Doctors were also employed and they worked side by side with Indian Doctors.

His were the days when photographs was not known in India and he ordered the best of his artists to draw pictures of the deceased eyes of the patients of his eye Hospital in true to life natural colours for study and diagnosis. It is a delight to see thess wonderful picture in colour recorded in the case dairiee of the hospital.

Serfoji Maharaja was probably the first Indian who studied all aspects of western and Eastern culture and thought and carried out the happy idea of combining the best elements of the Eastern and Western cultures

into harmonious one. His services to the people of the South is beyond assessment and has left his imprint on every sphere of social and cultural life of South India. He proved himself to be a realist and that time is the destroyer of dynasties, Kingdoms and cultures and in fact nothing is a sure match before time. He realised that the legacies and memories of Dynastic rule before him over his territories had vanished into air, and hence wanted to make some permanent contribution to the whole of India and this resulted in his founding an imperishable monuments like his distinguished Sarasvat Mahal Library at Thanjavur. Time has also helped him to realise many of his lofty ambitions since there was no political unsettlement to disturb the peace during this period in the South.

Rajah Serfoji passed away on 8th March 1832 leaving his precious Temple of Art "Sarasvati Mahal Library" everlasting treasure house to the world with largest collections of ancient manuscripts some of which are not found anywhere in the world and his name deserves to be honoured and remembered for ever as a great servant and scholar who has made the Library one of International importance.

[This article is contributed to "The Souvenir" on the eve of Bi-Centenary Celebrations of the Scholar Monarch, His Highness Serfoji Maharaja]

(Reprinted from Journal of TMSSM Library Vol. 30 Nos. 1-3)

கலை வளர்த்த காவலன்

கே. வாஸுதேவசாஸ்திரியார்

சரஸ்வதி மஹால் தஞ்சையில், ஏன்? தமிழ் நாட்டிலேயே ஒரு முக்கிய ஸ்தாபனம். இக்கலைக்களஞ்சியத்தில் நம் தேசத்திய கலை விஞ்ஞானங்களைப் பற்றிய நூல்கள் யாவும் சென்ற 400 வருஷங்களாகச் சேகரிக்கப்பட்டிருப்பதோடு, சரபோஜி மன்னர் தஞ்சைச் சிம்மாசனமேறிய 1798 முதல் மேல் நாட்டுக்கலை, விஞ்ஞானம், இலக்கியம் இவைகளைச் சார்ந்த எல்லா ஐரோப்பிய பாஷைகளிலுமுள்ள நூல்கள் பெரும்பாலும் சேகரிக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

சரபோஜி மன்னரைப்போல் மேல்நாட்டுக்கலைகளிலும் நம் நாட்டுக்கலைகளிலும் ஒருங்கே வல்லவர் இருத்தல் அரிது. அவருடைய தகப்பனாருக்கு ஆங்கிலேயரிடம் விசேஷ அபிமானமும் நன்மதிப்பும் உண்டு. கர்நாடக நவாப்புக்கு ஆபத்துக் காலங்களில் ஒத்தாசை செய்தது தஞ்சை ராஜ்யம். அந்த நன்றியை மறந்து 1773-இல் அதன் பேரில் அக்ரமமாகப் படையெடுத்த கர்நாடக நவாபின் செயலுக்கு உடந்தையாக இருந்த தங்கள் உத்தியோகஸ்தர்களைச் சீமை அதிகாரிகள் கண்டித்து, கர்நாடக நவாபிடமிருந்து 1776-இல் தஞ்சையை மீட்டுக் கொடுத்த பெருந்தன்மையை துளஜா மஹாராஜா மறக்கவில்லை. மேலும் ஆங்கில அதிகாரிகளிடம் உண்மையான தகவல்களைத் தெரிவித்து ஒத்தாசை செய்த 'ஷ்வார்ட்ஸ்' என்ற பாதிரியாரையும் அவர் மறக்கவில்லை. இவ்விரண்டு நட்புரிமையால் சரபோஜி மன்னருக்கு விளைந்த நன்மைகள் அனந்தம்.

சரபோஜியை அவர் தகப்பனார் சிறு வயதில் ஸ்வீகாரம் செய்து கொண்டு சிறிது காலத்திற்கெல்லாம் இறந்தார். இறக்கும்போது ஆங்கில ரெஸிடெண்டு, ஷ்வார்ட்ஸ் பாதிரியார் முதலியவர்களிடத்தில் சரபோஜியை ஒப்புவித்து அவருக்குத் தகுதியான மேல்நாட்டுக் கலைப்பயிற்சி அளிக்குமாறு சொல்லிவிட்டுப்போனார். அதே சமயத்தில் தம்முடைய மந்திரிகளிடமும் நம்நாட்டுக் கலைப்பயிற்சியையும், ஒழுக்க முறைகளையும் கற்பிக்குமாறு பணித்தார்.

சரபோஜி மன்னர் தமது 12 வயது முதல் 24 வயது வரை மேல்நாட்டுக் கலைகளையும், பாஷைகளையும் ஸ்வார்ட்ஸ் என்ற பாதிரியாரிடமும், அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற ஆசிரியர்களிடமும் கற்றார். நம் நாட்டுக் கலைகளையும், பாஷைகளையும் சிறந்த அறிவாளிகளிடமும் கற்றுத் தேர்ந்தார். அவருக்கு ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், டேனிஷ், டச்சு, க்ரீக், லாடின் முதலிய மேல்நாட்டுப் பாஷைகளில் நல்ல பரிச்சயம் உண்டு. நம் நாட்டிலுள்ள ஸம்ஸ்க்ருதம், மகாரஷ்டிரம் இரண்டிலும் விசேஷப் பாண்டியத்தியமும், தெலுங்கு, தமிழ், உருது, பாரசீகம் முதலிய பாஷைகளில் சுமாரான பயிற்சியும் உண்டு. மேல் நாட்டு விஞ்ஞானத்திலும், அரசியல்முறை, யுத்த முறை, சரித்திரம், பூகோளம், சங்கீதம் முதலியவற்றிலும் அளவிலா ஆசை கொண்டவர் அவர்.

மேல்நாட்டுக் கலையின் நல்ல அம்சங்களையும் நம் நாட்டுக்கலைகளின் உயரிய உண்மைகளையும், ஒருங்கே உணர்ந்த அவர் நம்நாட்டு மக்களெல்லாம் அதே அறிவின் விசாலத்தை அடையவேண்டி, ஓர் விசுவ வித்யாலயம் ஏற்படுத்துவதற்கான நூல்களையும், இதர ஆராய்ச்சிச் சாதனங்களையும் சேர்த்தார். ஸம்ஸ்க்ருத கலாசாலை, ஆங்கிலக் கலாசாலை நவீன விஞ்ஞானக் கலாசாலை ஆக இம் மூன்று கலாசாலைகளை ஏற்படுத்தினார். ஆனால் இதையெல்லாம்விடத் தஞ்சையையும், தமிழ் நாட்டையும்

இந்த உலகில் சிறந்த ஒரு ஞான யாத்திரை ஸ்தலமாகச் செய்து வைக்கவே விரும்பினார்.

இதற்கென்றே மேல்நாட்டு நூல்களைத் தீவிரமாகச் சேர்க்க ஆரம்பித்தார். 1820 முதல் 1832 வரை பன்னிரண்டு வருஷங்களுக்குள் அவர் லண்டன், பாரீஸ், மியூனிச், லீப்சிக், ஆம்ஸ்டர்டாம், கோபன்ஹேகன் முதலிய ஐரோப்பாவின் முக்கியமான நகரங்களிலிருந்து வரவழைத்து வைத்திருக்கும் கலைநூல்கள் ஏராளமானவை. இவைகளில் வைத்தியம், விஞ்ஞானம், பூகோளம், சரித்திரம், அரசியல் யுத்தமுறை, இலக்கியம், பல பாஷைகளின் இலக்கணம், அகராதிகள், சங்கீதம் முதலிய நூல்கள் சுமார் 7000 இருக்கின்றன. இவற்றில் பெரிய படங்களுள்ள நூல்களே சுமார் ஆயிரத்துக்கு மேல் இருக்கும். இவைகளுடன் சரஸ்வதி மஹாலில் மேல்நாட்டு ரசாயன சாஸ்திரத்தின் தந்தை லவாய்சியர் (Lavoisier) இயற்றிய ரசாயன நூலும், ஜீவ தத்துவத்தை முதன் முதலில் நவீன முறையில் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்த பபன் (Buffon) என்பவரின் நூல்களும், தாவர சாஸ்திரம் முதலிய நவீன விஞ்ஞான நூல்களும், நூற்றுக் கணக்கான பெரிய தேசப்படங்களும், நகரப்படங்களும், மாளிகைச் சித்திரங்களும் இருக்கின்றன. சுமார் 500 வைத்திய நூல்களும், ஆயிரக்கணக்கான பெரிய உடற்கூற்றுப் படங்களும், நம் நாட்டிலுள்ளதும், பிற நாட்டிலுள்ளதுமான ஏராளமான வைத்திய மூலிகைகள், செடி, கொடி, பூ, பழம், மரங்கள் முதலியவைகளின் வர்ணந்தீட்டிய படங்களும், சுமார் 150 ஐரோப்பிய சங்கீத புத்தகங்களும், வாத்தியப் புத்தகங்களும், இப்போதும் சரஸ்வதி மஹாலில் உள்ளன. மேல் நாட்டு ஓவியங்களும், நம் நாட்டு ஓவியங்களும் அவரால் சேகரிக்கப்பட்டவை எண்ணிறந்தவை.

நம் நாட்டுக்கலைகளின் உண்மையை மேல்நாட்டுப் பிரத்யட்ச முறையில் பரிசோதித்து அவற்றில் சோதனைக்கு நின்றவைகளை ஒருங்கு சேர்த்து அவற்றால் யாவரும்

பயன்பெற வேண்டி அதற்கென்றே ஆராய்ச்சி நிலையத்தை யும் ஏற்படுத்தினார். அவர் நம் நாட்டு நூல் சுவடிகளைச் சேகரிப்பதற்காக இந்தியா முழுவதும் யாத்திரை செய்து சுமார் 10000 வடநாட்டுச் சுவடிகளைச் சேகரித்துச் சரஸ்வதி மஹாலை ஒரு நல்ல கலைக் களஞ்சிய மாக்கினார். மேல் நாட்டுச் சங்கீத வாத்தியங்களை நம் நாட்டுச் சங்கீத நிபுணர்களைக் கையாளச் செய்து அதி லிருந்து உண்டான மேல் நாட்டு விறுவிறுப்பும், நம் நாட்டுக் குழைவும் சேர்ந்த தஞ்சாவூர் பாண்டு என்ற ஓர் புதுக்கலையை உருவாக்கினார். அதன் கிளைகளே இப்போது சென்னையிலும் இன்னும் சில இடங்களிலும் வளர்ந்து வருகின்றன.

ஆனால் முக்கியமாக அவர் நம் நாட்டுக்குச் செய்த பேருதவியை நம்நாடு இன்னும் நன்கு அனுபவிக்க ஆரம்பிக்கவில்லை. அவர் வைத்தியத்தில் அபார சிரத்தை கொண்டவர். மேல் நாட்டு வைத்தியர்களையும் நம் நாட்டு வைத்தியர்களையும் சேர்த்து, **தன்வந்தரி மஹால்** என்ற ஆராய்ச்சி நிலையத்தைப் பல வருஷங்கள் நடத் தினார். அங்கு நம் நாட்டு முறைகளை மேல் நாட்டு வைத்தியர்களை வைத்துக்கொண்டு நோயாளிகளுக்குப் பிரயோகம் செய்வித்து அவற்றின் பலாபலனை ஒழுங்காகப் பதிவு செய்து அதன் வாயிலாகக் கை கண்ட முறைகளை மட்டும் திரட்டி, 18 பாகங்களாகப்பிரித்துத் தமிழ்ப் புலவர் களைக்கொண்டு செய்யுட்களாக இயற்றி 18 சுவடிகளில் எழுதி வைத்திருக்கிறார். அவைகளிலுள்ள முறைகள் ஒவ் வொன்றும் அனுபவத்தில் சோதனை பார்க்கப்பட்ட தாகையால் அவற்றை நிச்சயமாக நம்பி உபயோகிக்கலாம். அவற்றைப் பலர் உபயோகித்து நன்மையும் அடைந்திருக்கி றார்கள். இப்போது நமது சென்னை அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டு வரும் நன்கொடையைக்கொண்டு இந்தப் 18 சுவடிகளையும் ஒவ்வொன்றாக ஸரஸ்வதி மஹால் நிர்வாகஸ்தர்கள் பிரசுரித்து வருகிறார்கள். இது வரையில் 10 சுவடிகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த 18 சுவடி

களும் வெளிவந்ததும் இவை வைத்திய உலகத்தையே ஒரு புரட்சிக்குள்ளாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சரஸ்வதி மஹாலில் இன்று உள்ள சுவடிகள் சுமார் 10,000. அவைகளுள் ஸம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மஹாராஷ்டிரம் இவைகளே பிரதானமானவைகள். எல்லாச் சுவடிகளும் பத்திரமாகக் காப்பாற்றப்பட்டு வருகின்றன. தஞ்சைக் கலைக்கூடத்தின் சிறந்த பகுதியாக இக்கலைக் களஞ்சியம் இன்று விளங்குகிறது. இந்தக் கலைக்கோவிலை நிர்மாணித்த காவலன் சரபோஜி சலவைக் கல்லுருவில் கலைக்கூடத்தில் கலைக்கோயிலின் கர்ப்பக்கிரஹத்தில் எழுந்தருளியிருக்கும் கலைவாணியைத் தொழுத கையினனாகவே நின்று கொண்டிருக்கிறான். வாழ்க அவன் புகழ்; வளர்க அவனது சேவை.

தஞ்சை மராத்திய அரசர்களும், கிறித்துவமும்

(17, 18 ஆம் நூற்றாண்டுகளில்)

ஈ. ஏ. செல்லத்துரை,
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
தூயபேதுரு மேல் நிலைப் பள்ளி,
தஞ்சாவூர்.

கி. பி. முதலாம் நூற்றாண்டில் இயேசுநாதரின் சீடர் செயிண்ட்தாமஸ் கேரளக் கடற்கரைப் பகுதிகளில் கிறித்துவ மதப் பிரச்சாரம் செய்தார்.

பின்னர் 16, 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் போர்ச்சுக்கீசியர், ஜெர்மானியயர், டேனிஷ்காரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகியோர் தென் இந்தியாவில் மதப் பிரச்சாரம் செய்தனர்.

நம் இந்தியாவை ஆண்ட மொகலாய மன்னன் அக்பர் கோவாவில் தங்கி இருந்த போர்ச்சுக்கீசியப் போதகர்களோடு தொடர்பு கொண்டு கிறித்துவத்தின் உயர்ந்த கொள்கைகளை அறிந்துகொண்டார். விஜய நகர மன்னர் கிருஷ்ணதேவராயரும் ஆதரவு நல்கினார். மதுரை திருமலை நாயக்கன் (1623—89) போர்ச்சுகீசியருடன் அன்பு பாராட்டி மதப் பிரச்சாரம் செய்யவும் கோவில்களைக் கட்டிக் கொள்ளவும் அனுமதித்தார். இராணி மங்கம்மாளும் (1689—1707) மதத்துவேசம் பாராட்டாது எல்லா மதங்களையும் ஆதரித்தார்.

அதுபோலவே தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களில் துளஜாஜி, சரபோஜி-2, சிவாஜி-2 அவர்களது சந்ததியினரும் கிறித்துவ மதத்திற்கு எவ்விதம் ஆதரவு காட்டினர் என்பதை முறையாகக் காண்போம்.

துளஜாஜி (கி. பி. 1763—1787) :

துளஜாஜி அரசர் அவர்கள் தரங்கப்பாடியில் கிறித்தவர்கள் கோவில் கட்டவும், மதப்பிரச்சாரம் செய்யவும் அனுமதி அளித்தார். கிறிஸ்துவர்களின் நலனுக்காகத் தரங்கப்பாடி அருகிலுள்ள "ஆயர்பாடி" என்ற கிராமத்தை இனாமாகக் கிறித்தவர்களுக்குக் கொடுத்து அதன் வருவாயிலிருந்து அனாதைக் குழந்தைகள், திக்கற்றோர், விதவைகள், ஊனமுற்றோர் முதலியோரைப் பராமரிக்க ஏற்பாடு செய்தார். மேல்வாரமாகக் கிடைத்த சுமார் 1000 கலம் நெல்லைப் பாடசாலை அமைத்தல், மாணவர் விடுதிகள் அமைத்தல் மற்றும் சபை சம்பந்தப்பட்ட காரியங்களுக்குக் குருமார் செலவிட்டனர்.

தஞ்சை திருவையாறு சாலையில் உள்ள அம்மன் பேட்டை கிராமத்தில் (58 ஏக்-67 செண்ட்) அல்லது (9 வேலி-4 மா) புஞ்சை நிலத்தை துளஜாஜி கிறித்தவர்கள் வேதபாடசாலை, பள்ளிக்கூடம், குருமார், ஆசிரியர், தங்கும் வீடுகள் கட்டவும் உறுதி செய்தார். தற்போது அந்தத் தரிசு நிலம் நீர்ப்பாசன வசதிபெற்று நஞ்சையாக மாறி விட்டது.

மேலும் கி. பி. 1779-ல் தஞ்சை சிறிய கோட்டைப் பகுதியில் சிவகங்கைக் குளத்திற்கு எதிரில் ஓர் கிறித்துவ ஆலயம் கட்ட நிலம் இனாமாக வழங்கினார். குருமாரும் அங்கு தங்கி இருந்தவர்.

கி. பி. 1780-ல் தஞ்சை நகரைச் சார்ந்த மகர்நோம் புச்சாவடியில் கிறித்தவர் கோவில், பாடசாலைகள், மாணவர் விடுதிகள், குருமார் ஆசிரியர் வசிக்க ஓர் தோட்ட மனையை வழங்கினார். அதோடு கிறித்தவர்கள்

அக்கோவிலைச் சுற்றி வசிக்கக் குடியிருப்பு மனைகளையும் வழங்கினார்.

அமீர்சிங் (1787—98):

அரசர் அமீர்சிங் அவர்கள் கி. பி. 1794 தரங்கை ஆயர் பாடிக் கிராமத்திற்குப் பதிலாகப் பாபநாசம் தாலுக்காவி லுள்ள 30 வேலிப் பரப்புள்ள சடையங்கால் கிராமத்தை கிறித்தவருக்கு மாற்றிக் கொடுத்தார். குருமார் தரங்கை ஆயர்பாடி போய்க் கவனிப்பது கஷ்டமாக இருந்தது போக்குவரத்து வசதி அக்காலத்தில் இல்லை. இக்கிராமத் திலிருந்து மேல் வாரமாகச் சுமார் 1000 கலம் நெல் வரும் அக்கால நாணய மதிப்புப்படி 500 பக். (பக்கோடா வருவாய்) 1 பக்கோடா = ரூ. 3½ ஆக ரூ. 1750/- இனாமாகக் கிடைக்கும். அப்போது 1 கலம் நெல் விலை (0-75) பைசா வாகும்.

மேலும் மகர்நோம்புச்சாவடிப் பகுதியில் கி.பி. 1794-ல் கிறித்தவர்களுக்குக் குடியிருப்புமனைகளையும் வழங்கினார்.

சரபோஜி-2 (கி. பி. 1798—1832):

இரண்டாம் சரபோஜி கி. பி. 1800-ல் முக்தாம்பாள் சத்திரத்தைக் கட்டி 76 கிராமங்களை இனாமாக விட்டுத் தஞ்சை இராமேஸ்வரம் சாலையில் அமைந்து இருந்த சத்திரங்களுக்கு எல்லாம் உதவினார். ஒரத்தநாடு அருகிலுள்ள கன்னந்தங்குடி கிராமத்தில் கிறித்துவ பாதிரி மார், ஆசிரியர், பள்ளிக்கூடம் கோவில் கட்ட இனாமாக மனைகளை வழங்கினார். சத்திரத்தின் வருவாயிலிருந்து 50 கிறிஸ்தவ ஏழை மாணவர்களுக்கு உதவினார். 30 கிறிஸ்துவ குடும்பங்களை ஆதரித்தார். ஏழை மாணவர் களுக்கு இலவச உணவு உடை வழங்கினார். நஞ்சை 7 ஏக்கர் புஞ்சை 11 ஏக்கர் நிலம் இனாமாக வழங்கப்பட்டது.

கி. பி. 1813-ல் கிறித்தவர்களின் குடியிருப்புக்காக மகர் நோம்புச் சாவடியில் மேலும் மனைக்கட்டுகளை வழங்கி

னார். இவர் கொடுத்தது 1323 குழி=(13¼ மா) புஞ்சை நிலம்.

சிவாஜி-2 (1832—1855) :

இரண்டாம் சிவாஜி அவர்கள் கிறித்துவ மக்களின் நலனுக்காக தன் சொந்தச் செலவில் கி. பி. 1852-ல் ஓர் அழகான குளம் வெட்டிச் சுற்றிலும் படித்துறையும் கட்டிக் கொடுத்தார். அப்போது கலெக்டராக இருந்தவர் ஜே. எப். பிஷப். பங்கு குருவாக இருந்தவர் ஜி. யூ. போப் (1851-1856). இது சம்பந்தமாகக் கல்வெட்டு இக்குளக்கரை சுவரில் இன்றும் உள்ளது. இது தற்போது தூர்க்கப்பட்டுப் பிளேக் மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலாகமாறி உள்ளது.

இராணி விஜயமோகன முக்தாம்பா பாய் அம்மணி சாகேப் : (இரண்டாம் சிவாஜியின் மகள்) கி. பி. 1856

மேலும் இராணி அவர்கள் 1884-ல் தஞ்சை நகர அய்யங்கடைத் தெருவிலுள்ள "லேடி நேப்பியர்" பள்ளியை ஏற்படுத்தி அதில் பெண்கள் மட்டும் கல்வி அறிவு பெற வசதி செய்தார். அப்போது தஞ்சை குருவாக இருந்த சுனம். பிளேக் ஐயர் (1875-1922) அவர்கள் அப்பள்ளியை நிருவகித்து வந்தார். பிறகு அது விற்கப்பட்டுவிட்டது.

தஞ்சை சீனியர் பிரின்ஸ்

ராஜஸ்ரீ ராஜாராம் ராஜா சாகேப் சத்ரபதி :

1933 அரண்மனை உஜீர்மகால் என்ற நந்தவனத்தை செயிண்ட் பீட்டர்ஸ் பள்ளிக்கு 99 வருட லீசுக்கு விட்டுக் கொடுத்தார். அது தான் செயிண்ட் பீட்டர்ஸ் விளையாட்டு மைதானம். ஓர் கிளைப்பள்ளி அங்கு ஏற்படுத்த அக்காலத்தில் பாண்டு வாத்திய சாலையாக இருந்த கட்டிடப்பகுதியை வழங்கினார்.

கிறிஸ்துவப் பாதிரிமார்களின் அரசியல் தொடர்புகள் :

ஆற்காடு நவாப் முகமது அலி துளஜாஜி ஆட்சிக் காலத்தில் கப்பம் பாக்கிக்காகத் தஞ்சையைப் பிடித்துக் கொண்டு மூன்று வருடம் வரிவசூலைத் தானே எடுத்துக் கொண்டார் (கி.பி. 1771-74 வரை). சுவார்ட்சு பாதிரியார் ஆங். கிழ. இந்திய கம்பெனி கவர்னர், கவர்னர் ஜெனரல் லண்டனிலுள்ள போர்டு ஆப் டைரக்டருக்குத் தெரிவித்து துளஜாஜிக்கு மீண்டும் தஞ்சையை ஆளும் உரிமையை கனம் சுவார்ட்சு வாங்கித் தந்தார்.

அடிக்கடி மொகலாய அரசர் ஔரங்கசீப், ஆற்காடு நவாப்முகமதுஅலி, மைசூர் சுல்தான் ஹைதர்அலி தஞ்சை மீது படையெடுத்ததால் தஞ்சை கஜானா காலியாகி விட்டது. தஞ்சையில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. பசியால் பாதித்து அநேகர் மாண்டனர். அவர்களை சுவார்ட்சு பாதிரியார் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார். நகரத்தில் உள்ள ஏழைகளுக்குக் கம்பெனி அதிகாரிகள், வியாபாரிகளிடம் பணம் வசூலித்து ஏழைகளின் பசிப் பிணியைப் போக்கினார். துளஜாஜி காலத்தில் வியாபாரிகள், விவசாயிகள் மீது கடுமையான வரி விதிக்கப்பட்டது. இதைத் தாங்கமுடியாதவர் நகரைவிட்டு நீங்கி விண்ணாற்றங்கரையில் குடி பெயர்ந்தனர். சுவார்ட்சு பாதிரியார் நயமாகப் பேசி அவர்களை மீண்டும் நகரத்தில் குடியேறுமாறு செய்தார்.

இரண்டாம் சரபோஜியின் சிற்றப்பா அமீர் சிங் தஞ்சாவூர் ஆட்சி உரிமையைக் கவர நினைத்துப் 10 வயது நிரம்பிய சரபோஜியையும் அவரது வளர்ப்புத் தாய்மார்களையும் கொடுமைப்படுத்தினார். சரபோஜி சுவார்ட்சு பாதிரியாரிடம் முறையிட்டார். சுவார்ட்சு பாதிரியார் சென்னை கவர்னருக்கும், கல்கத்தா கவர்னர் ஜெனரல் காரன் வாலீசிக்கும் தெரியப்படுத்தினார். தஞ்சையில் இருந்தால் சரபோஜியின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் எனக்கருதி அவரைச் சென்னையில் ஆங். கிழ இந். கம்பெனி

யில் பாதுகாப்பில் குடியமர்த்தினார். துளஜாஜியின் கடைசி வேண்டுகோளுக்கு இணங்க அவரைத் தக்க ஆசிரியர்களைக் கொண்டு ஆங்கிலம், ஜெர்மன், லத்தீன், பிரெஞ்சு, மொழிகளைக் கற்பிக்க ஏற்பாடு செய்தார். இந்தியப் பண்டிதர்கள் மூலம் மராத்தி, தெலுங்கு, தமிழ் முதலிய மொழிகளைக் கற்க ஏற்பாடு செய்தார். அமீர்சிங் 10 வருடம் தஞ்சையை ஆண்டார். (1787–1798) முதல் விசாரணையில் சரபோஜியை துளஜாஜி தத்து எடுத்தது ஏற்கப்படவில்லை. இரண்டாவது விசாரணையில் இந்து மதச் சட்டப்படி தத்து எடுத்தது செல்லத்தக்கதே என்று தீர்ப்பளித்தனர். சரபோஜி 1798 முதல் தஞ்சை அரசர் ஆனார், இதற்கு சுவார்ட்சு பாதிரியார் மிகவும் உதவினார் என்பதை மறக்க முடியாது.

மைசூர் சுல்தான் ஹைதர் அலி துளஜாஜி ஆட்சியில் போது தஞ்சாவூர் மீது படையெடுத்துப் பயிர்களை எரித்தும், கொள்ளையடித்தும் கடும் வரி வசூல் செய்தும் கொலை புரிந்தும் பெரிதும் தொல்லை கொடுத்தார்.

அச்சமயம் ஆங். கிழ இந்திய கம்பெனியின் சார்பாக சமாதான தூதுவராக ஹைதர் அலியிடம் சுவார்ட்சு பாதிரியார் அனுப்பப்பட்டார். மைசூர் சுல்தான் ஹைதர் அலி சுவார்ட்சு பாதிரியாரை அன்புடன் உபசரித்து உரையாடினார். மைசூர் சுல்தான் ஹைதர் அலி சுவார்ட்சு பாதிரியாரைப்பற்றி கூறியது.

"இவர் ஒருவரே மெய்யான கிறிஸ்தவர் என்று சாட்சி பகர்ந்தார். மேலும் அவர் தம் படை வீரர்களுக்கு இட்ட கட்டளையில், "நீங்கள் எந்த வெள்ளையனை எங்கு கண்டாலும் அவர்களை வாளுக்கு இரையாக்குங்கள் என்று கூறி இருந்தார். ஆனால் சுவார்ட்சு பாதிரியாரை எங்கு கண்டாலும் அவருக்குத் தக்க மரியாதை காட்டுங்கள். "ஏனெனில் அவர் ஒரு களங்கமற்ற பாதிரி என்று ஹைதர் கூறினார். சென்னை கோட்டை செயின்ட் மேரீஸ் கோவிலில் இக்கல்வெட்டு வாசகம் இன்றும் உள்ளது.

வீரமாமுனிவர் *(1680—1747)* **:**

இவர் ஆற்காடு நவாப் சந்தா சாகிப் காலத்தில் அவரின் நட்பைப் பெற்று அவரது ஆட்சியில் திவானாகப் பணிபுரிந்தார். மூன்று கிராமங்களின் வரி வசூல்களைக் கவனித்தார். சந்தாசாகிப் அவருக்கு ஏலாக்குறிச்சியில் கோவில் கட்டவும், பாடசாலை கட்டவும் ஓர் பெரிய நிலப் பரப்பை இனாமாக வழங்கி உள்ளார். அவரை "சந்யாசி" அல்லது உண்மையான துறவி என்று வர்ணித்துள்ளார்.

இராபர்ட் நொபிலி *(1577—1656)* **:**

மதுரை திருமலை நாயக்கர் (1623-59) காலத்தில் பாண்டிய மண்டலத்தில் கிறித்துவ மதப் பிரச்சாரம் செய்து வந்தார். ஏழைப் பரதவர்கள் மீது திருமலை நாயக்கர் விதித்த கடுமையான வரியைக் குறைக்க ஏற்பாடு செய்தார். திருமலைநாயக்கர் உண்மை அறிந்து வரியைக் குறைத்தார். நாயக்கர் அரசாங்கத்தின் மீது நன்மதிப்பு ஏற்பட்டது. திருமலை நாயக்கருக்கு வெளி ஆபத்து ஏற்பட்ட போதெல்லாம், போர்ச்சுக்கீசியர் படை கொடுத்து உதவினார்.

தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் *(1774—1864)*

இவர் சுவார்ட்சு பாதிரியாரின் மாணவர்.

இவர் சிறு வயது முதல் இரண்டாம் சரபோஜியுடன் நெருங்கிப் பழகியவர். சாஸ்திரியார் சரபோஜியைவிட 2-வயது மூத்தவர். இருவரும் ஓரே ஆசிரியரிடம் கல்வி பயின்றும் உள்ளனர். இவர் 90 வயது வரை தஞ்சையில் வாழ்ந்தார். துளஜாஜி, சரபோஜி-2, சிவாஜி-2 காலத்திலும் வாழ்ந்தவர். தஞ்சாவூர் அரண்மனையோடு நெருங்கிப் பழகினவர்.

இவர் ஓர் கிறித்துவக்கவி. இவர் தமிழ் இலக்கியங்களையும், பல நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர். இவர் சிறிதும் பெரிதுமாக 141 நூல்களை எழுதி உள்ளார். அவற்றில் முக்கியமானவை,

1. பேரின்பக்காதல்
2. ஞான நொண்டி நாடகம்
3. பெத்லேகம் குறவஞ்சி
4. ஞானதச்சு நாடகம்
5. நோவாவின் கப்பல் பாட்டு
6. போன்ஸ்லே வம்ச வரலாற்றைத் தமிழில் பாடியுள்ளார்.
7. தெ. இந். வரலாற்றை தொகுத்த மெக்கென்சிக்கு ஊழியம் செய்துள்ளார்.
8. செபமாலை

இவர் சரபோஜி 2 காலத்தில் அவைக் களப்புலவராக விளங்கினார். 'நோவாவின் கப்பல் பாட்டு' இவரது சபையில் அரங்கேற்றப்பட்டது. அரசர் நிறையச் சன்மானம் வழங்கி அவரைக் கௌரவித்தார். 100 வராகன் அவருக்குக் கொடுத்துப் பெருமைப்படுத்தினார்.

ஐரோப்பிய பாதிரிமார்களின் இலக்கிய சரித்திர, கல்வித் தொண்டுகள் :

நம் இந்திய அரசர்கள் சரித்திரத்தை முறையாக எழுதி வைக்கவில்லை. அக்குறையைப்போக்கியவர்கள் ஐரோப்பியப் பாதிரிமார்களே. அவர்கள் எழுதிய கடிதங்கள், வரலாறு எழுதப் பெரிதும் பயன்படுகின்றன.

ஐரோ. பாதிரிமார்கள், தமிழை நன்கு கசடறக் கற்றுத் தமிழில் சிறந்த இலக்கியங்களை நமக்குப் படைத்துள்ளார்கள். அதை விளக்கினால் கட்டுரை விரியும்.

அவர்கள் வேற்று மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்த்துள்ளார்கள். தமிழில் புதிய இலக்கியங்களையும், இலக்கணங்களையும், தமிழில் அகராதிகளையும் எழுதி உள்ளார்கள். சரித்திர ஆராய்ச்சி நூல்களையும் எழுதி உள்ளார்கள்.

பாமரர் எளிதில் வாங்கிப் படித்து அறிய மலிவு விலைப் புத்தகங்களை அச்சிட்டு உதவினர். சென்னை, தரங்கம்பாடி வைப்புக்கோட்டை, கன்னியாகுமரி, கொச்சி, யாழ்ப்பாணம் பாளையங்கோட்டையிலும் அச்சகங்கள் ஏற்படுத்திக் கல்வியை வளர்த்தனர். பாடசாலைகள், மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் பல இடங்களில் அமைத்து உள்ளனர். மூளை வளர்ச்சி பெறாத குழந்தைகள், காது கேளாதோர், விழி இழந்தோர், ஊமையர், செவிடர் முதலியோர்களுக்குப் பள்ளிகளும். தொழு நோயாளிகளுக்காகவும் மற்றவர்களுக்கும் மருத்துவமனைகளை ஏற்படுத்திச் சேவை செய்துள்ளார்கள்.

இக்கட்டுரையில் சேர்க்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களின் வரிசை :

1. சென்னை கோட்டை செயிண்ட் மேரீஸ் கோவிலில் உள்ள சுவார்ட்ஸ் பாதிரியார் கல்வெட்டு.
2. தஞ்சாவூர் சிறியகோட்டை கிறிஸ்துநாதர் ஆலயத்தில் உள்ள சரபோஜி வைத்த சுவார்ட்சு பாதிரியாரின் கல்வெட்டு.
3. தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடியில் எஸ். பி. ஜி. மிஷன்கோவிலில் சரபோஜி வைத்த சுவார்ட்சு பாதிரியாரின் கல்லறைக் கல்வெட்டு.
4. ஜெ. சி. கோலாப் ஐயர் அவர்களின் கல்லறைக் கல்வெட்டு.
5. சிவாஜி-2 வெட்டிய குளக் கல்வெட்டு.
6. (இராணிமுக்தாம்பாள் பாய்) கேர்ன்ஸ் ஐயர் நினைவாக வைத்த கல்லறைக் கல்வெட்டு

கட்டுரை எழுத ஆதாரமான நூல்களின் பட்டியல் :

1. தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்.
   - கே. எம். வெங்கட்டராமையா

2 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள்
   – புலவர் செ. ராசு.

3. தஞ்சை மராட்டியர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் - பா. சுப்ரமணியன்

4. சுவார்ட்சு ஐயரின் வரலாறு -ரெவ. ஜி. எச். லார்ப்

5. தஞ்சாவூர் மராத்தா பிரின்சிபாலிட்டி
   – தெ. இந்தியா - வில்லியம் உறிக்சி.

6. தஞ்சாவூர் மராத்திய அரசர்கள்
   - கே. ஆர். சுப்ரமணியன்

7. செயின்ட் பீட்டர்ஸ் 200-வது ஆண்டு நினைவு மலர்

8. செயின்பீட்டர்ஸ் கோவில் டையமண்டு ஜூபிலி மலர்

9. சங். வேதநாயகம் சாஸ்திரியாரின் நாட்குறிப்புச் சுவடி

10. போன்ஸ்லே வம்ச சரிதம் (தமிழ்) மெக்கென்சி தொகுப்பு ஓர் ஆய்வு -கே என். வெங்கட்டராமையா

11. கோட்டை கிறித்துநாதர் ஆலயம் 200-வது ஆண்டு மலர்

12. திருமலைமன்னர் கையேடு - செ. போசு, எம். ஏ. கல்வெட்டு ஆய்வாளர்.

கல்லறைச் செய்திகள்

1. 2, Fort Church,
Little Fort,
Sivaganga Garden,
Thanjavur. Page : 84

To the Memory of the
Reverend Christian Frederic Swartz,
Born at Sonnenburg of Neumark, in The Kingdom of Prussia.
The 26th of October 1726
And Died at Tanjore The 13th of February 1798
In the 72 Year of His Age
devoted from his early manhood to the office of
Missionary in the East
The similarity of his situation to that of
The first preachers of the gospel,
Produced in him a peculiar resemblance to
The simple sanctity of the
Apostolic character,
His natural vivacity won the affection,
As his unspotted probity and purity of life
Alike commanded the
Reverence of the
Christian Mahomeden, and Hindu
For sovereign princes, Hindu, and Mahomeden.
Selected this humble Pastor
As the medium of political negotiation with
The British government,
And the very marble that here records his virtues
Was raised by
The liberal affection and esteem of the

Raja of Tanjore
Maha Raja Sirfojee.

2. St. Peter's Church.
Manambuchavadi.
Thanjavur. pages 93. 94

To the glory of God
And
In memory of
The reverend J. F. Kearns, missionery
Who laboured in the S. P. G. Missions
In
Tinnevelly and Tanjore
For eight and twenty years
He died December 9th the 2nd Sunday in Advent 1877.
Aged 52 Years.
While in his masters service fighting on
With fallng strength ------ worn out
----- With Years of Toil
His spirit passed away

' I heard a voice from heaven, saying into me.
Write. From hence forth bleassed are the dead
Which die in the lord : even so saith the
Spirit - for they rest from their labours'.

This tablet and that in the cemetery
Were erected by the highness
S. C. Vijaya Mohana Muktamba Bai Ammani
Raje Saheb Princess of Tanjore.

3. Blake Hr. Sec. School Play Ground,
M. Chavadi,
Thanjavur.

This tank was built at the expense of
His Highness Sevajee
Maharaja of Tanjore, A. D. 1852
J. F. Bishop Esq. Collector,
Rev. G. U. Pope Missionary.

Trichirapaly. J. E. Martin SE.

Rev. G. U. Pope (1851 - 1856)
(5 yeers served in Tanjore S. P. G.
Church and St. Peter's College.)

4. St. Peter's Church
Manambuchavadi,
Thanjavur

Sacred
To the memory of
John Elias Kohlhoff Esquire,
Who departed this life on
Monday the 21st May 1849
Aged 48 years 10 months and 26 days
Beloved and regretted by all who know him.

This store was erected by
His Highness Senajee Maha Rajam, Rajah
of Tanjore
In token of the regard and esteem he had
for him

" As in Adam all die even so in Christ shall
all be made alive

Trichinopoly J. F. Martin SE.

5. St. Peter's Church
Manambuchavadi, Thanjavur

Sacred
To the memory of the
Reverend John Casper Kohlhoof
Missionary of the honourable S. P. C. K.
Who was born at Tranquebar
on the
23rd of May 1762
And departed his life at Tanjore
on the
27th of March 1844
He was the pupil of the
Venerable Schwarts
And his Successor in this Mission
In which, by God's grace he laboured
57 years.

Danial 12 Chap - 3 வசனம்

"ஞானவாசிகள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்கு உட்படுத்துகிறவர்கள் நட்சித்திரங்களைப் போலவும் என்னென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.

Trichirapoly. J. F. Martin Sc.

6. St. Peter's Church
Manambuchavadi.
Thanjavur. Page : 82. 83

Sacred to the memory of
The Rev. Christion Fred K.

Swartz missionary to
The hon'ble society for
Promoting Christian know
Ledge in London who
Departed this life on
The 13 th February, 1798,
Aged 71. years and 4 months.

Firm was, Thou. humble and wise,
Honest, pure, free from disguise.
Father of orphans, the widow's
Support,
Comfort in sorrow of every sort,
To the benighted dispenser of light.
Doing. and pointing to, that which
Is right
Blessing to princes, to people, to me ;
May I. my father. be worthy of thee !
Wishes and prayeth thy

Sarabojee

7. St. Mary's Church.
Fort,
Madras.

Sacred in the memory of
The Rev. Christian Frederic Swartz,
Whose life was one continued effort to imitate
the example of
His blessed master.
Employed as a protestant missionary from the
Government of Denmark,

And in the same character by the society
in England for
The promotion of Christian knowledge.
He during a period of fifty years, 'went about
doing good'
Manifesting in respect to himself.
the most Entire
Abstraction from temporal views.
But embracing every opportunity of
promoting both the
Temporal and enternal welfare of others,
In his religion appeared not with a gloomy
Aspect, or forbidding mien,
But with a graceful from and placid dignity.
Among the many fruits of his indefatigable
labours was the
Erection of the church at Tanjore.
The savings from a small salary were,
for many
Years, devoted to the pious work.
And the remainder of the expense supplied by
individuals
At this solicitation.
The Christian seminaries at Ramnadporam
and in the
Tinnevelly Province were established by him.
Beloved and honoured by Europeans.
He was if possible, held in still deeper
reverence by the
Natives of this country, of every degree and
every sect : and
Their unbounded confidence in his integrity
and truth.

Was. many occasions.
Rendered highly beneficial in the public
service.

The poor and injured
Looked up to his as an unfailing friend and
advocate :
The great and powerful
Concurred in yielding him the highest
homage ever padi in this
Quarter of the globe to
European virtue.
The late Hyder Ally Cawn.
In the midst of a bloody and vindictive war
with the carnatic,
Sent orders to, his officers
" To permit the venerable Father Swartz
To pass unmolested, and show him respect,
and kindness
For he is a "holy man. and means no
Harm to my government ".
The late Tuljajee Rajah of Tonjore,
When on his death bed Desired to Entrust
to his protecting care
His adopted son, Serfojee, the present
Raja with the
Administration of all the Affairs of his
country.
On a spot of ground, granted to him by the
same prince,
Two miles east of Tanjore,
He built a house for his residence, and made it
An orphan Asylum

Here the last twenty years of his life were
spent in the education
And religious instruction of children,
Particularly those of indigent parents. whom
he gratuitously
Maintained and instructed :
And here 13th of February, 1798,
Surrounded by his infant flock. and in the
presence of
Several of his disconsolate brethren.
Entreating them to continue to make religion
The first object of their care,
And imploring with his last breath the divine
blessing of their labours.
He closed his truly Christian career in the
72nd Year of his age
The East India Company
Anxious to perpetuate the memory of such
transcendent worth
And gratfully sensible of the public benefits
which
Resulted from his influence
Caused this monument to be erected
Ann. Dom, 1807.

மாமன்னர் சரபோஜியின்

சாதனைகளும், சமயப் பணிகளும்.

ஸ்ரீமத் ராஜஸ்ரீ

ராஜாராம் ராஜா சாஹேப் சத்ரபதி,

சீனியர் பிரின்ஸ் & பரம்பரை அறங்காவலர்,

தஞ்சை அரண்மனை தேவஸ்தானம்,

தஞ்சாவூர்.

தஞ்சையில் மகராஷ்ட்டிர அரசை ஸ்தாபித்த சத்திரபதி ஏக்கோஜி மன்னர் வழியில், தஞ்சை மாராட்டியர் அரச பரம்பரையில் வந்த துளஜா மகா ராஜா அவர்களின் சுவீகாரப் புத்திரராகக் கி.பி. 1798ல் தஞ்சை அரச பதவிக்கு வந்தவர் மாமன்னர் சரபோஜி ஆவார். இவர் இரண்டாம் சரபோஜி என்று அழைக்கப்பட்டார். இவர் 1798 முதல் 1832 வரை ஆட்சி செலுத்தினார். இவர் மாமன்னர் என்ற பட்டத்திற்கு ஏற்ற வகையில் பல விதங்களிலும் சிறந்து விளங்கினார். பல துறைகளில் பலவிதமான சாதனைகளை நிகழ்த்தினார். இவர் சமயத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு மிகுந்த சமயப் பணிகளைச் செய்துள்ளார். மாமன்னர் இராஜராஜ சோழனுக்குப்பின் இவரால்தான் பெரியகோவிலுக்கு 1803ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது.

இவர் தன் இளமைக் காலத்தில் கிறிஸ்துவப் பாதிரியார் ஆன சுவார்ட்சின் கீழும், மாஸ்டர் ராம், செயரிக் முதலியோரின் கீழும் பல கலைகளையும் பயின்று தேர்ச்சி பெற்றார். இவர் தன் தாய்மொழி மராத்தியைத்

தவிர தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், ஆங்கிலம், மலையாளம் போன்ற பல மொழிகளிலும் சிறப்புற்றுப் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார். இவர் தமிழ், தெலுங்கு; மலையாளம், ஆங்கிலம், மராத்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பல நாடகங்களும், பாடல்களும் இயற்றி உள்ளார்.

இவர் சென்னை, கல்கத்தா போன்ற நகரங்களுக்கும் உச்சயின், நாசிக், பூரி ஜெகந்நாத் போன்ற வட நாட்டுப் புனித ஸ்தலங்களுக்கும் பயணம் செய்துள்ளார். இது தவிர தெற்கே ஸ்ரீரங்கம், பழனி முதலிய இடங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டார்.

இவர் மேற்கொண்டு இருந்த அளவு கடந்த அறிவாற்றலாலும், பன்மொழிப் புலமையினாலும், இவர் 'ஏசியாடிக் சொசைட்டி' மற்றும் 'ஜியாகிராபிகல் சொசைட்டி' ஆகிய இரு அமைப்புகளுக்கும் ஆங்கிலேயரால் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். இவருடைய திறமை, செயலாற்றல், அறிவாற்றல் முதலியவை பிஷப் ஹீபரினாலும், லார்ட் வாலான்சியவினாலும் பெரிதும் பாராட்டப் பட்டுள்ளன. இவர் குறி தவறாது சுடுவதிலும் புலி வேட்டையிலும் வல்லவர் என்று பிஷப் ஹீபரினால் போற்றப்படுகிறார். இவர் குதிரையேற்றத்திலும், குதிரை மற்றும் யானை இனங்களை வகை பிரிப்பதிலும் தேர்ந்தவர் என்பது இவர் ஏற்படுத்திய ஓவியங்களைக் கொண்ட "கஜசாஸ்திரம்" மற்றும் 'ஹஸ்வ சாஸ்திரம்" போன்ற நூல்களின் மூலம் தெரிகிறது. இவர் அமர்ந்து செல்லும் குதிரையின் பெயர் "சம்ப பிரசாத்"

நிர்வாகத்திறமை :

இவர் ராஜாங்க அலுவல்களிலும் நீதி பரிபாலனத்திலும் மிக்க திறமை வாய்ந்தவர், இவர் 18 மஹால்களையும் 12 கார்கானாக்களையும் நாட்டின் ஆட்சியைக்கவனிக்க

நியமித்திருந்தார். சரஸ்வதி மஹால், சங்கீத மஹால், கல்யாணமஹால், போதி மஹால், தன்வந்திரி மஹால், ஜீராத்காணா, அப்தார் காணா, சாபத்காணா, சஸ்திர காணா முதலியவை அவற்றில் சில.

இவர் தற்போதைய நகரசபையை ஒத்திருந்த 'நகர பரிஸ்கார சபா'' என்ற ஓர் அமைப்பைக் கோட்டைக்குள் நகரத்தின் நிர்வாகத்தைக் கவனிக்க அமைத்திருந்தார். பொதுமக்களின் சௌகரியத்திற்காக இவர் கோட்டைக்குக் குடிதண்ணீர் வசதி செய்யும் பொருட்டு முத்துஸ்வாமி பிள்ளை போன்றோரின் உண்மையான உழைப்பைக் கொண்டு சேவப்ப நாயக்கன் ஏரியில் இருந்து சிவகங்கைக் குளத்துக்கும், கோட்டைக்குள் பல குளங்களுக்கும் ஓர் விரிவான குழாய் இணைப்பு முறைகளை உருவாக்கினார். இது இவருடைய "ஜலசூத்திரம்'' என்ற நூலில் வரைபடங்களுடன் விரிவாகக் கூறப்பட்டு உள்ளது. இந்த வரை படம் தஞ்சாவூர் நகராட்சியின் பொன்விழா மலரில் இடம் பெற்றுள்ளது. இவர் கோட்டைக்குள் சிறப்பான முறையில் கழிவு நீரை வெளியேற்றும் கால்வாய்களை நாகலிங்க சேர்வை போன்ற உண்மையான ஊழியர்களைக் கொண்டு அமைத்திருந்தார். இந்த முறையில் எவ்வளவு பலத்த மழை பெய்த போதிலும் கோட்டைக்குள் நகரத் தெருக்களின் தண்ணீர் தேங்காது அகழிக்குச் சென்று விடும்.

கல்விப்பணி :

இவர் நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட கல்விப் பணிகள் எண்ணிலடங்காதவை. இவர் பெண்கள் கல்வியின் அவசியத்தை உணர்ந்து அதை ஆதரித்துப் பலவிதங்களிலும் அவர்களை ஊக்கினார். இவர் தன்னுடைய பல சத்திரங்களில் பல பள்ளிகளைப் புதிதாக ஆரம்பித்தார். தஞ்சை அரண்மனைக் கட்டிடத்திற்குள் இருக்கும் "அரசர் உயர்நிலைப் பள்ளியும் "இலவச ராஜா

மராட்டா பள்ளியும்" இவருடைய சத்திரங்களின் நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்டவை. இதுபோலவே திருவையாற்றில் இருக்கும் கல்யாண மஹாலில் அமைந்துள்ள புலவர் கல்லூரியும் ஏற்படுத்தப்பட்டது. திருவையாற்றில் தற்போது கல்யாண மஹாலில் இயங்கும் "ஓரியண்டல் காலேஜ்" முன்பு இவ்ராால் தமிழும், சமஸ்கிருதமும் கற்பிக்க ஏற்படுத்தப்பட்ட கல்லூரியாகும்.

தஞ்சையில் இருக்கும் அரசாங்கக் கலைக்கல்லூரி இவருடைய பெயரால் 'ராஜா சரபோஜி அரசாங்கக் கலைக் கல்லூரி' என்று வழங்கப்படுகிறது. இக்கல்லூரிக்கு இவருடைய சத்திரங்கள் நிதியிலிருந்து ஒரு பெரும்தொகை கொடுக்கப்பட்டுள்ளது.

சரஸ்வதி மகால் நூலகம் - அச்சகம் - வெளியீடுகள்

இவர் எந்த ஊர்களுக்குச் சென்றாலும் எந்த நாடுகளுக்குச் சென்றாலும் அங்குள்ள புத்தகங்களையும், ஓலைச் சுவடிகளையும் அதற்குரியவர்களிடம் இருந்து நகல்களாகவும் புத்தகங்களாகவும் சேகரித்தார். இதன்மூலம் சரஸ்வதி மகால் நூலகத்தை இவர் வளர்த்தார். தற்போதைய "சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம்" உருவாவதற்கு இவரே காரணமானவர். இந்த சரஸ்வதி மகால் நூலகத்தில் நாகரி, ஆங்கிலம், மராத்தி தவிர ஏறத்தாழ 30,000 சமஸ்கிருத பலதாப்பட்ட பனை ஓலைச் சுவடிகள் இருக்கின்றன.

தென்னிந்தியாவிலேயே முதன்முதல் அச்சுக்கூடம் அமைத்த பெருமை இவருக்கு மட்டுமே உண்டு. கி. பி. 1805ம் ஆண்டு இவர் தேவ நாகரி முறை அச்சுக் கூடத்தை நிறுவினார். இதில் கல்லினால் ஆன அச்சு எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த நூலகத்தில் அச்சடிக்கப்பட்ட நூல்களில் "நவகலா நிதி வர்ணயந்திர சாலா" என்று அச்சுக்கூடப் பெயர் காணப்படுகிறது.

இசை, கலை, பண்பாடு இவற்றின் வளர்ச்சி :

இவர் தஞ்சாவூர் கலையையும் கைத்தொழிலையும் வளர்ப்பதில் காட்டிய ஆர்வம் தஞ்சாவூர் கலைக்கூடத்தின் கண்காட்சிச் சிறப்பிதழில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவர் பரத நாட்டியத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் "சரபேந்திர பூபாலக் குறவஞ்சி" என்ற நூலில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

இவர் மேற்கத்திய இசையையும், கர்நாடக இசையையும் இணைத்துப் புதிய எழுச்சியை ஏற்படுத்தினார். இவர் 'பான்ட்டு' க்காக பல ஆங்கிலப் பாடல்களை இயற்றியுள்ளார். நாதஸ்வரத்திற்குப் பதிலாக "கிளாரினட்" என்ற மேற்கத்திய இசைக்கருவியை அறிமுகப்படுத்தியதற்கு இவரே காரணமாவார். "வரதப்ப ஐயர்" என்பவர் இவருடைய 'பான்ட் மாஸ்டர்' ஆகத் திகழ்ந்தார். இந்தக் கிளாரினட் பான்ட் இசை பிற்காலத்தில் பாலகிருஷ்ணன் என்பவரால் வாசிக்கப்பட்டுச் சிறப்புற்றது. தற்போது எ. கே. சி. நடராசன் அதைச் சிறப்பாக இசைத்து வருகிறார்.

பொய்க்கால் குதிரை நாட்டியம் சம்மேள வாத்தியங்களுடன் இவரால் தொடங்கப்பட்டது. இதைக் 'கோண்டலே' என்ற மராட்டிய வம்சத்தினர் மூலம் இவர் தோற்றுவித்து வளர்ச்சியடைய உதவி செய்தார். இவர்கள் வசித்து வரும் தெரு இப்போதும் "கொந்தளக்காரத் தெரு" என்று அழைக்கப்பட்டு வருகிறது. அந்த நாட்டிய முறை தற்போதும் நடைபெற்று வருகிறது. இந்தக்குழு வெளிநாட்டிலும் மிக்க வரவேற்பைப் பெற்றுச் சிறந்து விளங்குகிறது.

இவரது மானியங்கள் :-

இவர் கல்வி ஸ்தாபனங்களுக்கு மட்டுமல்லாமல், கோவில்கள் சங்கராச்சாரியார் மடம், தமிழ்ச்சைவ மடங்கள் சத்திரங்கள், கிறிஸ்தவ சபைகள் முகம்மதிய தர்க்காக்கள்

போன்ற பல அமைப்புகளுக்கும் மான்யங்களையும், நிதிகளையும் வழங்கி உள்ளார். இது இவருடைய மதத்துவேஷம் அற்ற தன்மையையும் விரிந்த மனப்பான்மையும் காட்டுகிறது. மிகுந்த எண்ணிக்கையில் மருத்துவ மனைகளையும், சுகாதார நிலையங்களையும் பல சத்திரங்களின் கட்டிடங்களில் ஏற்படுத்தினார். இது தவிர ஒரு கணிசமான தொகை சத்திர நிதியிலிருந்து செங்கிப்பட்டியிலுள்ள காந்தி ஞாபகார்த்த டி. பி. மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் சுகாதார வளர்ச்சி :

மக்களின் நலனுக்காக இவர் 'தன்வந்திரி மஹால்' என்ற ஒரு சிறந்த மருத்துவ அமைப்பை உருவாக்கினார். இங்குப் பல மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் அமர்த்தப்பட்டு ஆயுர்வேதம், யுனானி, சித்தம், ஆங்கிலம், ஆகிய மருத்துவ முறைகளில் மருந்துகள் தயாரிக்கப்பட்டன. அம்மருந்துகள் தனிக்குறிப்புகளுடனும், கால அளவுகள், அவற்றைச்சாப்பிடும் வழி முறைகள் போன்றதுடனும் தாயாரிக்கப்பட்டன. இந்த மருந்து உபயோக முறைகள் பெரும்பாலும் பாடல்களாகவே இருந்தன, இந்தப்பாடல்கள் "சரபேந்திர வைத்திய முறைகள்" என்றும் "தன்வந்திரி மஹால் வைத்திய முறை அட்டவணை" என்றும் கூறப்பட்டன. மூலிகைகளையும், பச்சிலைகளையும் அடையாளம் கண்டு கொள்வதற்காக அவற்றின் ஓவிய உருவங்கள் கொண்ட புத்தகங்கள் தயாரிக்கப்பட்டன. அதில் அவற்றின் பெயரும், தலைப்புகளும் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. இந்த ஸ்தாபனம் தற்போது அரசாங்கத்தால் "இலக்கிய ஆராய்ச்சிப் பிரிவு" என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் ஒரு சிறந்த ஐரோப்பிய முறை ஆங்கில மருத்துவ மனையைக் கோட்டைக்கு வெளியே கீழவாசலில் தற்போது புனித பீட்டர் பள்ளி அமைந்திருக்கும் இடத்தில் அமைத்து இருந்தார். இவர் ஒரு கண் ஆஸ்பத்திரியையும் நடத்தி வந்தார். இங்கு 'காட்ராக்ட்' போன்ற கண்

நோய்கள் ஆப்ரேஷன் இல்லாமல் சிறப்பாகக் குணப்படுத்தப்பட்டது. உடலியல் பாகங்களின் (அனாடமி) ஓவியங்களும், கண் மருத்துவ மனையின் படங்களையும் கொண்ட இவருடைய புத்தக வடிவில் ஆன ஓவியங்கள் இவருடைய மருத்துவ மனைகளின் சிறப்பையும், மருத்துவ முறைகளின் சிறப்பையும் விளக்குகிறது. இவருடைய சத்திரங்களில் சத்திரங்களின் நிதியைக் கொண்டு பல மருத்துவ மனைகளும் சுகாதார நிலையங்களும் அமைக்கப் பட்டுத் தற்போது அவை நடந்து வருகின்றன.

கட்டிடங்களும், துறைமுகமும் நினைவுச் சின்னமும்:

இவர் கட்டிடக் கலையின் சிறப்பு பரிணமிக்கும் விதத்தில் பல கோவில்களையும் அரண்மனைக் கட்டிடங் களையும், நினைவு மண்டபத்தையும் கட்டியுள்ளார். இவர் "சால்வா நாயக்கன் பட்டினம்" என்ற இடத்தில் ஒரு துறைமுகக் கோட்டையைக் கட்டினார். இதுவே "முகேந்திர ராஜப்பட்டினம்" என்று அழைக்கப்படுகிறது. இவர் பல பாய்மரக் கப்பல்களை வைத்திருந்தார். இவற்றில் ஒன்று "பிரஹதீஸ்வரர்" என்று அழைக்கப்பட்டது. இவை இவருடைய எல்லைக்குள் ஏற்றுமதி, இறக்குமதி நடத்த உபயோகிக்கப்பட்டன. இவர் கப்பல்களைச் செப்பனிடப் பெரிய தொழிற்கூடம் அமைத்திருந்தார், இவர் 'வாட்டர்லூ' போரில் நெப்போலியன் போனபார்ட்டை நெல்சன் தோற்கடித்ததற்கான வெற்றியைக் குறிக்கும் பொருட்டு 8 அடுக்குகளை உடைய சீன பாணியில் அமைந்த ஒரு மனோராவை அமைத்தார். இதுவே கலங்கரை விளக்காகவும் உபயோகப்படுத்தப்பட்டது. இதைச் சுற்றி மிகச்சிறிய கோட்டை ஒன்றையும் எழுப்பினார். இதைப் பற்றி விரிவாக 1956ம் ஆண்டு மகாமகம் மலரில் கட்டுரையோடு, புகைப்படந்தோடும் காணலாம்.

அரண்மனையில் 7 மாடிக்கட்டிடத்தை இவர் பனாரஸிலும் கயாவிலும் கண்ட கட்டிட முறைப்படிக் கட்டினார். இதற்கான விளக்கம் அந்தக் கட்டிடத்தின் கீழ் உள்ள

கல்வெட்டில் செதுக்கப்பட்டுள்ளது. "தாஸ்தான் மஹால்" தோட்டத்தில் இவர் 'சங்கர விலாஸ்'', "விஜய விலாஸ்" என்ற இரண்டு கட்டிடங்களைக் கட்டினார். இவை கோடை, குளிர் காலங்களில் முறையே குளிர்ச்சியாகவும், வெப்பமாகவும் இருக்கும். திருவையாற்றிலும். கும்ப கோணத்திலும் அரண்மனைகள் கட்டினார். இவை திவான்வாடா என்று அழைக்கப்படுகின்றன.

கும்பகோணத்தில் ஸ்ரீகாஞ்சிகாமகோடி சங்கராச்சாரியார் அவர்களின் "ஸ்படிகச் சிலையை" வைப்பதற்காக அந்த மடத்தில் ஒரு பகுதியைக்கட்டி அதற்கு "சந்திர மௌளீஸ்வர கிரஹம்" என்று பெயரிட்டார். (ஆதாரம் கோபிநாத்ராவ் கல்வெட்டுகள்) திருவையாற்றிலுள்ள மிகப்பெரிய கல்யாண மஹால் கட்டிடத்தைக் காவிரி ஆற்றங்கரையில் மிகப்பெரிய அழகான முற்றங்களுடனும், அலங்காரங்களுடனும் கட்டினார்.

சரபோஜியின் முன்னோர்கள் இராமேஸ்வரத்திலும், வெண்ணாறு போன்ற இடங்களிலும் கட்டியிருந்த சத்திரங்களோடு இவர் மேலும் மூன்று சத்திரங்களைக் கட்டினார், தனது இராணியின் பெயரால் நீடாமங்கலத்தில் "யமுனாம்பாள்புரத்தில்" ஒரு சத்திரமும், தன் மகள் பெயரால் அம்மா சத்திரத்தில் "சக்குவார் அம்பாள்புரம்" என்ற சத்திரமும் தன் பிரிய நாயகியான முக்தாம்பாள் பெயரில் ஒரத்தநாட்டில் அழகான சிற்ப வேலை நிறைந்த சத்திரமும், பெரிய குளம் ஒன்றும் கட்டினார்.

இவரால் கட்டுவிக்கப்பட்ட தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தைச் சேர்ந்த சில முக்கியமான கோவில்கள் :

1 தஞ்சைப்பெரிய கோவிலின் உள்ளிருக்கும் வினாயகர் கோவில் முற்றிலும் புதிதாகக் கட்டினார். அதில் ஒரு பெரிய வினாயகர் சிலையை நிர்மாணித்தார்.

2 காசியிலிருந்து திரும்பியதும் கீழவீதியிலுள்ள மணிகண்டிகேஸ்வரர் கோவிலைக் கட்டினார்.

3 மேலவீதி காசிவிசுவநாதர் கோவிலைக் கட்டினார்.

4 எல்லையம்மன் கோவிலில் முன் மண்டபத்தையும் கோபுரத்தையும் கட்டினார்.

5 மேலவீதி கிருஷ்ணன் கோவிலில் முன் மண்டபம், கோபுரம் இவற்றைக் கட்டினார்.

6 புன்னைநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோபுரம் திருமால் பக்தி, நர்த்தன மண்டபம் முதலியவற்றைக் கட்டினார்.

7 பண்டரிபுரத்திலிருந்து வந்தபின் அரண்மனைக்கு முன்பாகக் கீழவீதியிலுள்ள விக்டோபா கோவிலைக் கட்டினார்.

8 விஜய ராமர் கோவிலின் மண்டபத்தைக் கட்டிப் பழுதுபார்த்தார்.

9 மேலவீதி காமாட்சி அம்மன் கோவில் மண்டபத்தையும், மடப்பள்ளியையும் மண்டபம் கட்டினார்.

10 கொண்டிராஜ பாளையத்தில் உள்ள கீழ நரசிம்மஸ்வாமி கோவிலையும், மண்டபத்தையும் கட்டினார்,

11 வெண்ணாற்றங்கரையிலுள்ள ஆனந்தவல்லியம்மன் கோவிலின் முன் மண்டபம் கட்டினார்,

சமயப்பணிகள் :

சமயப் பணிகளைப் பொறுத்த வரையில் இவர் செய்த மிகப்பெரிய பணியானது தஞ்சைப் பெரிய கோவிலுக்கு 1801ம் ஆண்டு தொடங்கி 1803ம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடத்தி முடித்ததே ஆகும். இதைப்பற்றி பிரகதீஸ்வரர் விமானக் கலசத்தில் செதுக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி மேலும் விரிவாக மராட்டியக் கல்வெட்டுகளிலும், மோடி எனப்படும் மராட்டிய லிபியிலும் இதரக்

குறிப்புக்களிலும் காணப்படுகிறது. அவற்றுள் சில குறிப்பிடத்தக்கவை.

கல்வெட்டுப் பதிவுகளின்படி இவர் 1801ம் ஆண்டு துர்மதிநாம (வருஷம்) சம்பர்ச்சரம் 3ம் தேதி சுக்கில பஷம் துவிதியை திதி, வியாழக்கிழமை ரோகினி நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் ராஜஸ்ரீ சரபோஜி மகாராஜா பிரகதீஸ்வரர் சுவாமி கோவிலில் கும்பாபிடேகத் திருப்பணி வேலையை ஆரம்பித்தார்.

ஸ்ரீவினாயகர் கோவில் கட்டிய திருப்பணி :-

ஸ்ரீ வினாயகர் கோவில் அஸ்திவாரம் முதல் ஸ்தூபி வரையில் புதிதாக கருங்கல் வேலை செய்தும், செங்கல் வேலை செய்தும், சுண்ணாம்பால் சுதைவேலை விக்கிரங்கள் செய்தும், வர்ணம் பூசியும் புதிதாக வினாயகர் சிலையைச் செய்தும், கலசம் வைத்துக் கும்பாபிடேகம் செய்து அர்த்த மண்டபம், மகா மண்டபம் வெள்ளைக் கல்லால் கட்டியும் அதற்கு மேல் செங்கற்களால் தளவரிசை போட்டும் காரை பூசிப்படிகள் அமைத்தும். படிகளிலும், சுற்றிலும் மகாராஷ்டிரத்தில் கல்வெட்டுச் செதுக்கியும் 150 அடிக்கு வெள்ளைக்கல்லால் தளவரிசை போட்டும், படிகட்டியும் உள்ளார்கள்.

ஸ்ரீ சுப்பிரமணியர் கோவில்திருப்பணி :-

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் அடி மட்டத்திலிருந்து ஸ்தூபி வரையில் ரிப்பேர்கள் செய்து செங்கல்லில் சுதைவேலை விக்ரகம் செய்து புதிதாகக் கலசம் வைத்துக் கும்பாபிடேகம் செய்து அர்த்த மண்டபம், மகா மண்டபம் வரையில் செங்கல் தளவரிசை போட்டும், சுண்ணாம்பு பூசியும், முன் மண்டபத்தில் 300 கஜத்திற்கு வெள்ளைக்கல் தளவரிசை போட்டும், மண்டபத்தின் நான்கு பக்கத்திலும் செங்கல்லால் கட்டி மராமத்து வேலை செய்தும், இந்த

ராஜா மண்டபத்தின் சுவர்களின் தன் முன்னோர்களுடைய உருவங்களை மிக அழகு வாய்ந்த ஓவியங்களாகத் தீட்டி உள்ளார். இதில் ஆதி சிவாஜி அவர்களின் திரு உருவமும் தஞ்சையை ஆண்ட அவருடைய முன்னோர்களான வெங்கோஜி ராஜா, ஷாஜி ராஜா, முதலாம் சரபோஜி ராஜா, பாவா சாகேப் ராஜா, துக்கோஜி ராஜா, பிரதாப சிம்ம ராஜா, சுஜான் பாய்ராணி, துல்ஜா ராஜா முதலியோரது ஓவியங்களையும் மற்றும் தன்னுடைய ஓவியத்தைக் குதிரையின்மேல் அமர்ந்திருக்கும் நிலையில் வரைந்து உள்ளார். அதன் பின் மூன்றாம் சிவாஜியால் பிற்காலத்தில் சிவாஜி ராஜா, மூன்றாம் சரபோஜி ராஜா சைதர்பாபாயி சாகேப் ஆகியோரது ஓவியங்கள் தீட்டப்பட்டன. இந்த ஓவியங்களை மிகவும் அழகான முறையில் வரைந்து அதில் தங்கப்பட்டைகளை ஒட்டியும், தஞ்சாவூர் சித்திரக் கலைக்கு எடுத்துக் காட்டாக எழுதியும் உள்ளார்கள். இந்த மண்டபத்தின் மேற்கூரையின் உட்புறம் அழகான நாட்டிய ஓவியங்களை வரைந்துள்ளார்கள், மேலும் சுவரில் மல்லுக ஜெட்டி வஸ்தாதுகளின் உருவங்கள், கையில் முஷ்டி அணிந்ததுடனும். அவர்களுடைய ஆங்கில உடையணிந்த அரண்மனைச் சிப்பாய்களின் உருவங்கள் கையில் சுத்தியுடன் வரையப்பட்டு உள்ளன. இத்துடன் சிறிய யானை ஒன்றின் உருவமும் மிக அழகான முறையில் தீட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீ பிரஹன்நாயகி சன்னதி திருப்பணி:

ஸ்ரீ பிரஹன் நாயகி சன்னதியில் கர்ப்பக் கிரகத்தின் மேல் மூன்று அந்தஸ்த்து, அது தவிர அர்த்த மண்டபம், மகா மண்டபம், பைரவ மண்டபம் எதிரில் இருக்கும் நந்தி மண்டபம் ஆக. ஏழு மண்டபத்தில் மேல் செங்கல் தள வரிசை போட்டுக் காரை வைத்தும். மகா மண்டபத்தின் சன்னதியில் தெற்கு, வடக்கு இரண்டு பக்கத்திலும் கொறடு பிரகத்தில் வெள்ளைக்கல் தளவரிசை 200 குஜத்திற்குப் போட்டார், சன்னதியின் அர்த்தமண்டபம், மகா மண்டபம்

இரண்டிலும் மேலில் செங்கல் தளவரிசை செய்து காரை பூசினார். அம்மன் சன்னதியில் மகாமண்டபத்தில் சுதை வேலையில் கண்ணப்ப நாயனார். மார்க்கண்டேயர். ஏகாம்பரேசுவரியுடன் கூடிய காமாட்சி முதலிய அழகான வேலைப்பாடுகள் செய்தும் சுவரில் சித்திரங்கள் எழுதியும் அழகு படுத்தி வைத்திருக்கிறார்.

மகா மண்டபத்தின் மேல் கூரையின் உட்புறம் நிகம் பசூதணிவதம், நவராத்திரி கதை, மகிஷாசுரமர்தினி வதம் முதலிய சித்திரங்களுக்குக்கீழ் அச்சித்திரங்களை எழுதிய மகாராஷ்டிர ஓவியனைக் கொண்டு பாமரத் தமிழில் ஒவ்வொரு கதைச் சம்பவங்களைப்பற்றியும் எழுதியுள்ளார். இதில் மகிஷாசுரமர்தினி 22 தனி பாகங்களாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. மார்க்கண்டேயன் சரித்திரம் 6 பாகமாகவும், தட்சயக்ஞம் 11 பாகமாகவும் பிரித்து ஓவியங்களாக் தீட்டப்பட்டுள்ளது. சுந்தரமூர்த்தி தூது 6 பாகம். இது தவிர விநாயகர் கல்யாணம், நந்திகேஸ்வரர் கல்யாணம், சுப்பிரமணியர் கல்யாணம். இலட்சுமி கல்யாணம், சந்திர கல்யாணம், ருக்மணி கல்யாணம் சூரிய கல்யாணம், நாராயணர் கல்யாணம், பிரும்மா கல்யாணம். சிவபார்வதி கல்யாணம். சரஸ்வதி கல்யாணம் முதலிய பதின்மூன்று கல்யாண வைபவக் காட்சிகளும் அழகு வாய்ந்த முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ நடராஜ மண்டபத் திருப்பணி :

ஸ்ரீ நடராஜர் சன்னதியில் அர்த்த மண்டபம், மகா மண்டபம் கட்டியும், இரண்டு மண்டபத்தின் மேலும் செங்கல் தளவரிசை போட்டும், சுண்ணாம்பு வேலை செய்தும் சுவர்களுக்குப் பூச்சுப்பூசியும் மற்றும் மராமத்து வேலைகள் செய்தும் இருநூறு கஜத்துக்குக் கருங்கல் தளவரிசை போட்டார். இந்த மண்டபத்திற்குப் பின்னால் 16 கம்பங்கள் அடங்கிய ஓர் திருமால் பத்தியைக் கட்டியுள்ளார்.

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி கோபுரத் திருப்பணி :

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி கோபுரத்திற்கு அடி மட்டம் முதல் ஸ்தூபி வரையில் மராமத்து வேலை செய்து வர்ணம் பூசிப்படிகள் கட்டியுள்ளார்.

ஸ்ரீ சண்டிகேசுவரர் சன்னதி திருப்பணி :

ஸ்ரீ சண்டிகேசுவரர் சுவாமிக்குக் கர்ப்பக்கிரகத்திற்குக் கீழிருந்து மேல் வரையில் மராமத்து செய்து, விக்ரகம் செய்து, வர்ணம் தீட்டிப் புதிதாகக்கலசம் வைத்து, கும்பாபிஷேகம் செய்து மண்டபத்தின் மீது செங்கல் தளவரிசை செய்து சுண்ணாம்பு பூசினார்.

திருமால்பத்தியிலும், பிரகாரத்திலும் செய்த திருப்பணிகள் :

கோவிலுக்குள் ஈசான்ய பாகத்தில் திருமால்பத்தியிலிருந்து யாகசாலை வரையில் வெள்ளைக்கல் புதிதாகப் போட்டுக் கம்பங்கள் வைத்து மண்டபம் கட்டி, நாலு அங்கணம் கட்டியும், மண்டூகத்தீர்த்தம் (தேரைத்தீர்த்தம்) ஜீர்ணோத்தாரணம் செய்து அழகுபடுத்திக் கட்டியுள்ளார். திருமால் பத்தி ஈசான்ய பாகத்தில் 26-க்கு 24 அங்கணங்கள் போட்டு மொத்தம் ஐம்பது அங்கணங்கள் வெள்ளைக் கல்லால் வேலை செய்தும், திருமால் பத்தி முழுவதும் அநேக இடங்களில் பின்னமாய் உடைந்திருந்ததால் அவைகளெல்லாம் கருங்கல்லாலும், செங்கல்லாலும் மராமத்துச் செய்து, சுண்ணாம்புபூசி மண்டபத்து வடக்கு, மேற்குப் பாகத்தில் இரண்டு இடத்திலும் செங்கல்லால் தளவரிசை செய்து சுண்ணாம்பு பூசிப் பிரகாரத்தின் உள்பத்தில் நான்கு சுவர்களுக்கும் சுண்ணாம்பு வேலை செய்தார். திருமால் பத்தியில் நைருத்திரி (தெற்கு-மேற்கு) பாகத்தில் இருந்து ஈசான்யம் (வடக்கு-கிழக்கு) பாகம் வரையில் (இருநூற்று நாற்பத்து ஒன்று) 241 சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து ஒரு அம்மனும் பிரதிஷ்டை செய்தார்.

மடைப்பள்ளி மண்டபத்திற்குள், சுவருக்கும் செங்கல் மராமத்துச்செய்து, சுண்ணாம்பு பூசினார். தெற்குப்பக்கத்தில் பிரகாரத்தின் கிழக்குப் புறத்தில் திருமால் பத்தின் கொறடிலிருந்து மேற்குப் பக்கத்தில் திருமால் பத்தி கொறடுவரையில் தோட்டத்திற்கு புதிதாகச் செங்கல் சுவர் எழுப்பி, சுண்ணாம்புப் பூச்சு வேலை செய்தது 260 கஜம் குறுக்கு சுவர் கஜம் 90 ஆக மொத்தம் 350 கஜம் புதிதாகச் சுவர் எழுப்பி சுவாமிக்குப் பூந்தோட்டம் அமைத்தார். வடக்குப்பக்கப் பிரகாரத்தில் அம்மன் தோட்டத்திற்குச் சுற்றிலும் சுவர் எழுப்பிச் சுண்ணாம்பு பூச்சுசெய்த வகையில் 150 கஜம்.

சுவாமியின் நான்கு பிரகாரத்திலும் கோவில் புதிதாகச் செங்கல்லில் தளவரிசையில் வெள்ளைக்கல் தளவரிசை கஜம் 1500-ம் 3 அங்குல உயரத்திலும், 180 எண்ணிக்கையிலும் கீழ்த்தளவரிசை போட்டு, நான்கு பக்கங்களும் தண்ணீர் தேங்காமல் அகழியில் போய்ச்சேரும்படியாகக் கழிவு நீர்ப்பாதை கட்டினார். வாசலின் கோபுரத்திற்கு எதிரில் அஷ்டக்கொடியின் தூணிற்குக் கொறடு வெள்ளைக்கல்லால் $1\frac{1}{4}$ கஜம் உயரம் 3 கஜம் சதுரமாகப் புதியதாகக் கட்டினார். நடராசர் சன்னதி எதிரில் "சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம்" நடப்பதற்கு ஒரு மேடையைச் செங்கல்லால் அமைத்துச் செங்கல் தளம் போட்டுச் சுற்றிலும் வெள்ளைக்கல் பதித்து அமைத்துள்ளார்.

கல்வெட்டுப் பதிவுகளில் சொல்லியிருப்பதுபோல, அவர் மொத்தம் 241 இலிங்கங்களைத் திருமால் பத்தியில் வைத்திருக்கிறார். அதில் ஒன்று 16 பட்டைகளை உடையது. மற்றொன்று 32 பட்டைகளை உடையது. பட்டமான ஆவுடை உடையது 1. சதுரமான ஆவுடை உடையது 12 சொக்கநாதர் லிங்கம் ஒன்று பதினெட்டாம் பெருக்குக்காகச் செய்யப்பட்ட உலோக நாயகன் உலோகநாயகி அம்மன் அஸ்டோத்தர லிங்கம் 108, நட்சத்திர லிங்கம் 27, துருவ நட்சத்திரம் ஒன்று, சப்தரிஷி லிங்கம் 7, துவாதசி

லிங்கம் 12 நவக்கிரக லிங்கம் 9, அஷ்டலட்சுமி ஒன்று, ருத்திரன் லிங்கம் ஒன்று, சூரிய லிங்கம் ஒன்று, மச்ச கூர்ம அவதாரம் 10 ஆகியவைகளை அடங்கும்.

பிரகதீஸ்வர ஆலயத்தில் திருமால் பத்தியில் தன் முன்னோர்களின் போசல வம்ச சரித்திரங்களையும், தன்னுடைய காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் சரபோஜி மஹாராஜா செதுக்கியுள்ளார். மேலும் நடராஜமண்டபம் இடதுபக்கத் தரையில் சுமார் 81 கற்களிலும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் செதுக்கியுள்ளார். இவ்வளவு பெரிய கல்வெட்டுகள் வேறு எங்கும் எந்த மன்னராலும் எழுதப்படவில்லை. இராஜராஜன் தமிழில் கோவிலைச் சுற்றி எழுதியது போல இவரும் எழுதி உள்ளார். திருமால் பத்தியில் சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்து இருப்பதுபோல் திருவிளையாடல் புராணங்களைப்பற்றி ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் தனித்தனியே அழகாகச் சித்திரம் வரையப்பெற்றும் அதன்மேல் சம்பவங்களையும் தமிழில் எழுதியும் இன்னும் அநேக சிவலீலைகளைப்பற்றியும், எழுதியும் ராஜநீதி, மனுநீதிபற்றிய சித்திரங்களையும் வரைந்து உள்ளார்.

சரபோஜி மகாராஜா கொடுத்த நகைகள், மானியங்கள் வாகனங்கள் :

இவர் பெரிய கோவிலுக்கு மானியமாகப் பெரும் மதிப்புள்ள பதக்கம், விலையுயர்ந்த கற்களினால் ஆன நகைகள், வெள்ளிப் பாத்திரம் முதலியவற்றை அளித்துள்ளார். இது தவிரத் தங்க முலாம் பூசிய வெள்ளியால் ஆன முழுக் கவசம் ஒன்றைப் பிரஹன் நாயகிக்கு வழங்கினார். இவை பற்றிய ஜாபிதா மராட்டா கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. பெரிய கோவிலுக்கு மானியமாகத் தரப்பட்ட நிலங்கள் சூரக்கோட்டை கண்டியூர், கீவண்ணிப்பட்டு, வில்லியநல்லூர், நாகத்தி, ஆலங்குடி, பிரகதீஸ்வரர் தோட்டம் முதலிய இடங்களில் உள்ளன.

சுவாமிக்கு ரிஷப வாகனம், அம்மனுக்கு ரிஷப வாகனம், சுப்பிரமணியர் மயில் வாகனம், விநாயகர்

மூஞ்சூறு வாகனம், சண்டிகேசுவரர் படிச்சட்டம் பிரபவளி, இது தவிர யானை வாகனம், மான் வாகனம், பிரதோஷ ரிஷப வாகனம் ஆகிய இவை அனைத்து வாகனங் களையும் வெள்ளியால் செய்து அளித்தார். இவர் பல தஞ்சாவூர் கல்வேலைசெய்த மரவாகனங்களையும் ஐந்து பெரிய தேர்களையும், மரச்சப்பரங்களையும் கோவிலின் உபயோகத்திற்கு வழங்கினார். அது மட்டுமல்லாது முக்தாம்பாள் என்றும் தன் பிரிய நாயகிக்கு உரிமையான நகை வகைகளைப் பிரஹன்நாயகிக்கு அளித்தார், நந்திக்கு மிளகு மற்றும் பல பொருட்களைக்கொண்டு அபிஷேகம் செய்தார். இலட்ச தீபம் ஏற்றி வழிபாடு செய்தார்.

அரண்மனையில் பெரிய கொட்டியத்திலிருந்து தினசரி பூசை, பொருள்கள் வாங்கப்பட்டு பிரஹதீஸ்வரர் கோவிலுக்கு அனுப்பப்பட்டது. பிற்காலத்தில் தஞ்சாவூர் அரசு ஆங்கிலேயர்களால் அரசாங்கத்தோடு இணைத்துக் கொள்ளப்பட்டபோது இந்த மொத்தச் செலவுத் தொகை களும் ரூ. 8093 அணா 12 என்று கணக்கிடப்பட்டு வருடாந்திர மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. சரபோஜீ சரஸ்வதி மஹால் நூல் நிலையத்திலுள்ள மராட்டிய மோடிப்பதிவுகள் இவர் செய்த கும்பாபிஷேகத் தைப்பற்றியும், பிரஹன்நாயகிக்கு அளித்த முழு வெள்ளிக் கவசத்தைப் பற்றியும், பெருவுடையாருக்கு இவர் அளித்த வெள்ளிவிபூதி பட்டைப்பற்றியும், வெள்ளிக்கண் உருவம் பற்றியும் கூறுகிறது. மேலும் லட்சம் பேருக்கு உணவுக்கு அளித்த விஷயத்தையும், லட்சம் எருக்கம் பூவினால் நடை பெற்ற அர்ச்சனைபற்றியும் அந்தந்த மாதங்களில் கிடைக் கும் குறிப்பிட்ட மலர்களைக்கொண்டு அர்ச்சனை செய்த விபரத்தையும், துவஜஸ்தம்பத்தைச் செப்பனிட்ட விவரங் களையும், அவருடைய மான்யங்களையும் கூறுகிறது

மாமன்னர் சரபோஜி பதவிக்கு வந்த பிறகு பெரிய கோவிலைச் சுற்றி இருந்த கோட்டை மதிலில் சேரளாந்த கன் வாயிலுக்கு முன்புறம் இருந்த கோட்டை மதிலை

உடைத்து ஒரு நுழைவாயிலைக்கட்டினார். இதன் இரு புறமும் சுப்பிரமணியர், விநாயர் கோவில்களைச் சிறியதாகக் கட்டினார். இதன்மேல் வளைவு ஏற்படுத்திச் சுதை வேலையில் ரிஷப வாகனத்துடன் கூடிய பார்வதி-பரமேஸ்வரரின் உருவங்களை ஏற்படுத்தினார். இந்த நுழைவாயில் இவர் பெயரால் 'சரபோஜி திருவாயில்' என்று அழைக்கப்படுகிறது. இந்த வாயிலுக்கு முன் இருந்த அகழிப் பள்ளத்தை மூடி நிரப்பிக் கோயிலுக்குள் நுழைய பாதையைச் செப்பனிட்டு அமைத்தார். இந்தக் கோயிலுக்கு முதலில் சரபோஜி திருவாயில், அடுத்துக் கேரளாந்தகன் திருவாயில் அதற்கு அடுத்து ராஜராஜன் திருவாயில் வரிசையாய் அமைந்துள்ளன.

கோவிலில் நடத்திவைக்கப்பட்ட விழாக்களும், நாடகங்களும் :

ஆரம்பக் காலத்தில் வைகாசி மாதத்தில் 9 நாட்கள் திருவிழா நடைபெற்று வந்தது. ஆனால் பின்னால் வந்த மகாராஷ்டிர ஆட்சியாளர்களால் சித்திரை மாதம் திருவாரூரில் நடைபெறும் திருவிழாவைப்போல் தஞ்சைப் பெரிய கோவிலில் 'சைத்திர பிரமோற்சவம்' 18 நாட்களாக விரிவுபடுத்தப்பட்டுக் கொண்டாடப்பட்டது. மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீட்சிதரால் 15 கீர்த்தனங்கள் பிரஹதீஸ்வரர் மீதும் பிரஹன்நாயகியின் மீதும் பாடியுள்ளார். அதில் நபோ மணி ராகத்தில் பாடிய கீர்த்தனத்தில் சரபோஜி மகாராஜாவைக் குறிப்பிடுகிறார். சாயநாடா ராகத்தில் பாடிய மற்றொரு கீர்த்தனத்தில் பெரிய கோவிலில் நடைபெற்று வந்த "சரபேந்திர பூபாலக் குறவஞ்சி" என்ற நாடகத்தைப் பற்றியும், தாக பாவனம் ராகத்தில் பாடிய மற்றொரு கீர்த்தனத்தில் முக்கியமான பிரஹதீஸ்வரர் சம்பந்தப்பட்ட சரித்திர, சமய சம்பந்தமான செய்திகளையும் தெரிவிக்கிறார். சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம், கண்ணப்ப நாயனார் சரித்திரம், மோகினி மஹேசப்பரிணயம், சரபேந்திர பூபாலக் குறவஞ்சி

மற்றும் பல நாட்கங்கள் திருவிழாக்காலங்களில் கோவிலில் நடத்தப்பட்டன

மன்னர் சரபோஜி சிவபூஜையில் ஆழ்ந்த பற்றுக் கொண்டு இருந்தார். கும்பகோணம் காஞ்சி ஸ்ரீ காமகோடி மடத்திற்கு விஜயம் செய்து சங்கராச்சாரியாருக்கு கனக அபிஷேகம் செய்து வழிபட்டார். சங்கராச்சாரிய சுவாமி அவர்கள் இவருக்கு இரட்டை ஜரிகை சால்வை போர்த்திக் கௌரி சங்கர் ருத்திராட்ச மாலை அணிவித்து, ஆசீர்வாதம் செய்து, "சிவ பூஜா துரந்தரர்" என்று பட்டம் வழங்கி, கௌரவப்படுத்தினார்.

சரபோஜி ராஜா கும்பிபாபிடேகம் செய்வித்த விபரம் :

சரபோஜி ராஜா கும்பாபிடேகம் செய்த சமயத்தில் மஹா வேத சாஸ்திரம் அறிந்த பிராமணர்களைக்கொண்டு துன்மதி நாம வருஷம் அட்சய திருதியை முகூர்த்த நாள் பார்த்து ஆரம்பித்தார்.

விசாலமான யாகசாலை அமைத்துக் குண்ட மண்டபம், ஆகம சாஸ்திர பிரகாரம் அமைத்து, அதற்காகப் பிராமணர்களையும் நியமித்து, ரிக் வேதபாராயணம் செய்யச் சிலபேரையும் நியமித்து இவர்களைப் பெரிய க்ஷேத்திரத்தில் இருந்து வரவழைத்து, சைவப் பிராமணர்கள், பல கோத்திரம் சூத்திரம் தெரிந்தவர்களைக் கொண்டு சிவலிங்கங்களும் அஷ்டபந்தனம் செய்ய அழைத்து வந்தார். அவர்கள் சொன்ன பிரகாரம் குண்டங்கள் அமைத்தார். அங்கு வேதிகைகளும், சித்திரங்களும் தனித்தனியாகத் தோற்றுவிக்கச் செய்தார். புதியதாக அமிர்த கலசப் பாத்திரங்களைப்போல் வைத்து மாவிலை பாத்திரத்தினுள் புனித ஆறுகளில் இருந்து கொண்டு வந்த தீர்த்தம் நிரப்பினார். புது நூல்களைக் குடத்தைச் சுற்றிக் கட்டினார்.

பிராமணர்களுக்குப் போதுமான தட்சணை கொடுத்து ஆகம சாஸ்திரப் பிரகாரம், பால், தயிர், நெய், சர்க்கரை முதலியவைகளையும், கங்கா ஜலத்தைக் குடங்களில் நிரப்பியும் அபிடேகம் செய்தார். கணக்கற்ற தேங்காய் பழங்கள் உள்ள கருப்பஞ்சாறு பல இரசங்களுடன் மகா அபிடேகம் செய்வித்து, நல்ல வாசனையுள்ள சந்தனத்தினால் அபிடேகம் செய்வித்து, வில்வம், மல்லிகை, மாலதி முதலிய பூக்களைக்கொண்டு அர்ச்சனை செய்வித்தார்.

மஹா பூஜை, வில்வார்ச்சனம், தீபாராதனைகள் விதிப்படி நடந்தன. அந்த நாளில் சரபோஜி ராஜா அவர்கள், சிவகங்கைக் குளத்தில் ஸ்நானம் செய்து பலவிதமான தானங்கள் செய்தார். அவையாவன; 1. மகாதானம், 2. கஜதானம், 3 பல்லக்கு தானம், 4. கட்டில், படுக்கை, தலையணை தானம், 5. பசுமாடு, எருமை மாடு, தானம், 6. எள்ளு, பாஜபறவை தானம், 7. காளை மாடு, கன்று தானம், 8. தயிர் நிரம்பிய பாத்திரம் தானம், 9 குடை தானம், 10. வேஷ்டி அங்க வஸ்திரம் தானம், 11. நெல் தானம், 12. கண்ணாடி, வேலைப்பாடு செய்த நவரத்தினம் பதித்த சால்வை தானம் இவை தவிரத் தானியங்கள் பலவற்றைக் குவியலாகக் கொடுத்தார்.

தங்கத்தால் லட்சுமிநாராயணர், சப்தரிஷி, அஸ்வினி நவக்கிரகம், லோக பாலன், துவாதசி அஷ்டவசு, ருத்தரன் சூரியன் 12, மச்ச கூர்மம் முதலிய பத்து அவதாரங்களின் தங்கப் பிரதிமம், இன்னும் பல மூர்த்திகளின் பிரதிமைகளும் தானம் கொடுத்தார். இவ்வாறு பல தானங்கள் செய்து, மாலையில் சிவலிங்கத்திற்குத் தீபாராதனை செய்து, பிரஹதீஸ்வரர்பிரசாதம் பெற்றுத் திரும்பினார்.

அன்று இரவு பிரஹதீஸ்வரர் ரிஷப வாகனத்திலும், சுப்ரமணியர் மயில் வாகனத்திலும், விநாயகர் மூஞ்சுறு வாகனத்திலும், பீடத்தில் சண்டிகேசுவரரும் அமர்ந்து, பூப்பல்லக்கு மற்றும் ஓலையால் செய்த சப்பரத்தில் வைத்து அலங்காரம் செய்து, மங்கல வாத்தியம் ஒலிக்க, சுவாமி

புறப்பாடு நடந்தது. அதற்கு முன்பாகத் தேவதாசிகள் நடனமாடிக்கொண்டு சென்றார்கள். பிரஹதீஸ்வரசுவாமி ஹாஜாரத்திற்கு முன்பாக வந்தபோது மத்தாப்பு வாணங்கள் கொளுத்திப் பிரகாசப்படுத்தியும் ஹாஜாரத்தில் தீவட்டிகள் ஏற்றியும், சந்திரன் ஒளியைப் போல் செய்வித்தார்கள். பலவிதமான வாணவேடிக்கைகள் செய்வித்தார்கள். தேவதாசிகள் நர்த்தனத்துடன் தீபராதனை நடைபெற்றது.

பிராமணர்கள் ஸ்வஸ்தி வசனம் கூறினார்கள். அவர்களுக்குச் சந்தனம், புஷ்பம், தாம்பூலம் முதலியவை கொடுத்து வணங்கி மரியாதை செய்விக்கப்பட்டது. இவ்விதமாக பிரஹதீஸ்வரர் கும்பாபிஷேக மகோற்சவம் வெகு விமரிசையாக ஊர்வலத்துடன் முடிவுறச் செய்தார்.

தற்போது 3-4-1980-ல் நடைபெற்ற மூன்றாவது மகா கும்பாபிடேகம் நடைபெறுவதற்கு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமி அவர்களால் ஆசீர்வாதம் செய்து தேதி நிர்ணயித்துத் தரப்பட்ட பிரகாரம் "அஷ்டபந்தன மகா கும்பாபிசேகம்" நிறைவுற்றது. அன்றைய தினம் அவர்களால் அனுக்கிரகித்து அனுப்பப்பட்ட, பிரகதீஸ்வரருக்குக் கரைபோட்ட பட்டு வேட்டி இரண்டு, பட்டு வஸ்திரம் ஒன்றும் பிரஹன் நாயகிக்குப் பட்டுப் புடவை ஒன்றும் இரவிக்கை ஒன்றும் இவை யாவும் தஞ்சாவூர் மேலவீதி ஸ்ரீ சங்கர மடத்திலிருந்து மேள தாளத்துடன் ஊர்வலமாகக்கொண்டுவந்து சுவாமிக்குச் சாத்தப்பட்டன இந்த மகா கும்பாபிடேகத்தை ஏறத்தாழ 2லட்சம் பேர்கள் கோயிலுக்குள் இருந்தும் மற்றும் 7 லட்சத்திற்கு அதிகமான பேர்கள் கோவிலைச் சுற்றி உள்ள கோட்டை மதில் மீது இருந்தும், நகரத்தில் பல பகுதிகளிலிருந்தும் கண்டு' ஸ்ரீ பிரகதீஸ்வரரின் அருளுக்கும் ஸ்ரீ பிரஹந் நாயகியின் அருளுக்கும் பாத்திரர்கள் ஆனார்கள்.

பெருவுடையார் பெருநாமம் வாழ்க !

Glimpses into our Modi Raj Records

Dhanvantari Mahal

S. GANAPATHI RAO,
L. R. U., Sarasvati Mahal Library, Thanjavur.

Situated amidst pleasant surroundings with a glorious past, Thanjavur, was an Avon of intellectual recreation for the scholars as well as scientists from the days of the valiant Cholas. The development that took shape under their care in this town, in the fields of Arts and Science can boldly be acclaimed as unique in its variety as well as magnitude. A perennial contribution towards the enrichment of the cultural splendour which made Thanjavur, the centre of permanent attraction from the days of the Cholas to this day, distinguishes this town from the other ancient cities and towns, reputed as centres of learning and culture. The ceaseless care and patronage of three dynasties of rulers, the Cholas, the Nayaks and the Marathas, who were culturally different is indeed the unique fortune of Thanjavur that makes it second to no other place in the realms of Art and Science.

The centre of all these cultural activities was and is Sarasvati Mahal. Though it is known to-day as a Library, it is not in fact, a mere repository of ancient palm-leaves and modern books. For, from even a superfluous glance of the Modi records in the Sarasvati Mahal, one never fails to learn that at least during the times of Raja Serfoji (1798—1832), the activities of this famous

institution did not stop with a mere collection of good books and manuscripts, but were extended to research work also, in a variety of subjects amongst which the medical field had a special attraction for the Raja. Besides basic research on many ailments, excellent work had been done on diseases like cancer, Polio, Diabetes and Tuberculosis, by this institution in Ayurvedic and Siddha field

The flourishing days, in the sense that successful attempts at discoveries in medicine were pursued, were, the period when the great Serfoji, relinquishing the admininistration of the Maratha principality in the hands of the British East India Company, devoted his entire time and resources to medical research which, a century after him, has now provided the basis for the establishment of a Literary Research Institute by the Union Government of India, which is silently and humbly contributing is devoted services in furtherance of a cause, so dear to its royal founder and so beneficial to humanity at large.

Though at the thought of Dhanvantari Mahal automatically and simultaneously springs up in one's memory, the name of Raja Serfoji, it can be asserted that Dhanvantari Mahal was in existence long before the commencement of Raja Serfoji's rule over Thanjavur. No clear testimony which can determine the exact period of the birth of this institution is available now; but the Modi papers in the Mahal which contain a continuous account of important as well as casual incidents recorded from the times of Ekoji, the first Maratha ruler, might throw more light on this regard, if studied deeply.

Besides patronizing scholars by gift of houses and lands acquiring manuscripts and books with money precious gems and jewellery, the Raja indifatigably

devoted himself to the progress of research, in Dhanvantari Mahal by bringing together Siddha, Ayurvedic and Unani physicians of repute. As the result of their discussions, the best among the tried and effective remedies are embodied in the series of works named Sarabendra Vaidya Muraigal. These works are composed in easy Tamil in verse form to facilitate easy memorising. These have been published by the Library in sixteen volumes, each dealing with one particular category of diseases.

If yet some faint doubt lingers in the hearts of sophisticated modern doctors or patients, the letters received from medical men and lay people, after the use of the recipes will surely disperse any hesitation on their part, in calling the recipes as infallible or tested. This line of research, calling for actual administration of drugs on patients and proof of their curative efficacy was the original experiment and invention of Raja Serfoji.

The Dhanvantari Mahal also contained a wing of Research for animal husbandry. Lots of recipes for the diseases of domestic as well wild animals and birds show the broad realm contemplated by the Raja, for implementation in the Dhanvantari Mahal. It will be understood, this wing also was a part of Dhanvantari Mahal as these recipes are classified under the title Dhanvantari Mahal in the Modi papers which contain them. The Sarasvati Mahal possess many manuscripts on Elephant lore and horse lore, which deal with the diseases and treatments of these animals. It is yet to be known where from the Raja obtained treatments for the diseases of the bird-kingdom. A manuscript titled 'Bajanama' is preserved in the Library and it contains some recipes for birds. Yet treatments which

do not originate from this Persian work are entered in these Modi papers.

The concept of research, especially of a clinical nature is comparatively modern and even some modern systems do carry on research on rabbits and other animals. But at a comparatively earlier period, Raja Serfoji's doctors were confident enough to prove their drugs on human beings. An album of case sheets with the natural colour of the eye with its diseased appearance painted is preserved in the Sarasvati Mahal lending ample proof of the working of a separate department for diseases of the eye in the Dhanvantari Mahal. As this method of recording the case and its history has been in practice, it will not be wrong to assume such a record having been maintained in the other departments of Dhanvantari Mahal also. It is hoped that an earnest attempt to explore the hidden treasures of knowledge in the vast mines in the abundant manuscripts of Sarasvati Mahal will one day bring to light facts and figures which will enable us to construct a correct picture of Dhanvantari Mahal and its activities. What is attempted here is only based on the very little that is available in a hurried search with limited resources.

In the Modi bundle No. 181/545 as item No. 5 the following information is available :

Appointment of Doctors and other staff in the Arogyasala :

1. **Devaraja Pillai**
2. **Appu Pillai**
3. **Viswanatha Pillai**
4. **Palania Pillai**

5.	Tyagaraja Pillai				
6.	Samba Dhikshitar				
7,	Swami Sastri				
8	Narayana Sastri				
9.	Venkatarama Sastri				
10.	Sethupathi				
			Rs.	A.	P.
	(Total Salary per diem)	...	80	0	0
11.	Parangipettai Vaidyar in-charge of preparation of medicines (Salary per month)	...	50	0	0
12.	Dressers. (wages per month)	...	1	11	9
13.	Muthusamy (per month)	...	4	0	0
14.	Kanakku Narayana Pillai (P.M.)	...	3	0	0
15.	4 Workers at daily wages of	...	1	11	9

Total Rs. 226—3—0

The English opthalmologist who was associated with Dhanvantari Mahal was Dr. Mc. Bean, who received a sum of Rs. 4000/- as recorded in bundle 76 (c). Further scrutiny of papers may probably clarify, whether this amount was the annual remuneration or the total amount paid to the doctor for the entire period of his services.

Another Dr. Brookin has been paid, in 1841, a sum of Rs. 51,789—8—0. Details for this disbursement are wanting. On the same day, books on medicine have been purchased for Rs. 43—4—0. In the month of August, books and surgical instruments have been purchased for a sum of Rs. 1,093—4—11. Mention of one Appu Sastri as eye-doctor is found in the papers in bundle No. 57. Likewise we find the names of Karimkhan and Madikhan in bundle No. 18 (c) as doctors (vaidyas) in charge of the treatment of horses.

In many of the recipes we find the name of the doctor or physician who prescribed it. Probably it was meant to get in contact with the doctor in case of any complication as a result of the prescription or as a faithful record of the activity of Dhanvantari Mahal.

The Dhanvantari Mahal was considered as the headquarter of a number of units, spread over in rural parts. Whether research activities were carried on in these units can be ascertained only after a special search in this direction. But there were medical units which had Dhanvantari Mahal as their centre is certain from the papers in bundle 57, mentioning the treatment of patients at the Arogyasala of Vijaya Saidambalpuram etc. The main title in this paper is Dhanvantari Mahal and the Arogyasala is noted as a branch of the Dhanvantari Mahal.

The Dhanvantari Mahal which saw its golden age during the times of Raja Serfoji was carrying on its activities even during the times of Shivaji, the last ruler of Thanjavur. A paper dated 1858 shows the payment of Rs. 154/- for certain establishments in the Dhanvantari Mahal Patient and earnest investigation may disclose the exact nature of the activities of the Dhanvantari Mahal. during those days. However that research activities were in contemplation and was under the favourable consideration of Prince Shivaji, is evident from an information in the year 1848, preserved in bundles 46 and 47 showing the purchase of Anatomical plates of both sex, surgical instruments and books useful for maternity and also medicines. It can be seen that this very purchase indicate that research activities were to be continued even in the year 1848, sixteen years after Raja Serfoji left his mortal coil.

The three doctors :- 1. Prasanna Krishna Vaidyar 2. Swami Vaidya and 3. Devaji Govinda Rao occur in a number of papers.

They were perhaps more closely connected with the day to day activities of the Dhanvantari Mahal and in the case of Swami Vaidya, who has been very often called to the presence of the king it can be surmised, that either he was also the royal physician, or the king often discussed him matters concerning Dhanvantari Mahal. However the Doctor's name is associated with Dhanvantari Mahal and not included in the papers relating to King's own or private affairs.

While doctors of Siddha and Ayurveda systems of medicine were engaged, doctors of Unani system also took part in the activities of Mahal. The names of a few doctors of this system, engaged by the Dhanvantari Mahal are.—

1. Dr. Masten 2. His son and 3. Sheik Mohideen

Besides the research activities in medicine, a miniature university was started in the days of Raja Serfoji which was named Nava Vidya Kalanidhi Sala, in which a department was established for the teaching of medical science. A paper in bundle No. 104, describes, all the departments in the Nava Vidya Kalanidhi Sala — Arts, Philosophy, Astronomy. Music, Sculpture, Languages (Persian, Arabic, Telugu, Sanskrit, Marathi, Hindi and English).

தஞ்சை சகசி மன்னர் ஆட்சியில்
மலர்ந்த
குறவஞ்சி இலக்கிய மலர்கள்

முனைவர் **பொ. சண்முகம்,**
ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு

சகசி மன்னர் (கி. பி. 1684 - 1712) தஞ்சை மராத்திய மன்னர்களில் சிறந்த கலை வல்லுநராகவும், இலக்கிய மேதையாகவும், பன்மொழிப் புலவராகவும், ஆட்சியின் பொற்காலத்தை ஏற்படுத்திய மிகச் சிறந்த அரசராகவும் விளங்கினார். இவர் புலவர்களுக்குச் சாகரராசபுரம் என்னும் திருவிசநல்லூரைப் புலவர் முற்றூட்டாகிய கல்விக் கொடையாக வழங்கினார். இவரைப் புலவர்கள் 'அபிநவ போஜன்' என்று பாராட்டினார்கள். தெலுங்கு இலக்கிய உலகில் பேரரசர் கிருஷ்ணதேவராயர், இரகுநாத நாயக்கர் வரிசையில் இணைக்கப்பெற்று, இவர் தெலுங்கு இலக்கிய மும்மணிகளில் ஒருவராகப் போற்றப்பெற்றார். இவர் இயற்றிய நூல்களும் இவர் ஆட்சியில் புலவர்கள் இயற்றிய இலக்கியங்களும் எண்ணிக்கையில் மிகுதியாகவும் ஈடு இணையற்றவையாகவும் உள்ளன.

சகசியின் தோற்றப் பொலிவு "சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களில் சிற்பங்களும் ஓவியங்களும்" நூலில் குடவாயில் பாலசுப்பிரமணியன் அவர்கள் காட்டியுள்ளார் [1]. தஞ்சை மராத்திய மன்னர்களின் வரிசையில் சகசி மிகச் சிறந்தவர் என்று பெயர் பெற்றார். "இயல்,

இசை, நாட்டியம் என்றும் முத்துறைகளையும் வளர்த்து, தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த சகசி மன்னர் தஞ்சை மன்னர்கள் வரிசையில் மிகவும் குறிப்பிடத்தகுந்த பெரும்புகழாளர்". 2

தஞ்சை மராத்திய மன்னர்கள் தமிழ்ப்புலவர்களுக்கு அதிக ஆதரவு காட்டி வந்தார்கள். தமிழ்ப்புலவர்களும் தங்கள் மன்னர்கள் மேல் குறவஞ்சி இலக்கியங்கள் இயற்றினர். "ஏகோஜி, சகஜி, துளசாஜி, சரபோஜி, சிவாஜி, எனத் தலைமுறை தலைமுறையாகக் குறவஞ்சி நூல்களால் பாடப்பெறும் சிறப்புப் பெற்றுள்ளனர், மராத்திய மன்னர்கள்." 3 சகசி மன்னர் ஆட்சியில் மட்டும் தியாகேசர் குறவஞ்சி. சகசி மன்னர் குறவஞ்சி, மோகினி விலாசக் குறவஞ்சி என்ற மூன்று குறவஞ்சி இலக்கிய மலர்கள் மலர்ந்து நறுமணம் வீசுகின்றன.

களம்பக உறுப்பு குறம் வளர்ந்து, 'குறம், குறவஞ்சி' என்ற இலக்கியங்களாக விரிவடைந்தன. குறவஞ்சி இலக்கியம், குறவஞ்சி நாடகம், குறவஞ்சி நாட்டியம், குறவஞ்சித் தமிழ் என்ற பல பெயர்களால் விளங்குகின்றது. இது இயற்கை கனிந்த இலக்கியம் ; பாமரர் இலக்கியம் ; பாமரர் வழங்கும் சொற்கள் மரூஉவாகவும் கொச்சை யாகவும் பச்சையாகவும் காணப்படுகின்றன. "இறையோ, அரசனோ தலைவனாக உலா இணைந்த முற்பகுதியை ஆக்கி, பிற்பகுதியில் குறவர் வாழ்வை விளக்கிப் புதுவகைப் பிரபந்தமாக உருப்பெறுகின்றது." 4 இது ஒரு நாட்டுப் புறப் பண்பாட்டு இலக்கியம். இதில், "எண்வகைச் சுவை களும் பக்திச் சுவையும் இடம் பெறுகின்றன." 5

தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி கி. பி. 1633 - 1673 கால எல்லையில் ஆண்ட விசயராகவ நாயக்க மன்னர் காலத்தில் இயற்றப்பெற்றது ஆயினும், இதில் குறவஞ்சி இலக்கியத்திற்குரிய அமைப்பு இல்லாததாலும் குறம் என்ற அகச்சான்று உள்ளதாலும் இது குறம் அல்லது போலிக் குறவஞ்சி என்று வழங்கப் பெறுகிறது. மராத்திய

மன்னர் ஏகோசி (கி. பி. 1676 - 1683) ஆட்சியில் பாபநாச முதலியாரால் இயற்றப்பெற்ற கும்பேசர் குறவஞ்சி, 'இரவலர் தருவான் தஞ்சை யேகோசிராசன் (பா. 6) என்று குறிப்பிடுகிறது. எனவே, கும்பேசர் குறவஞ்சி முதற் குறவஞ்சி இலக்கியம் என்பது பொருந்தும். இதனைத் தொடர்ந்து தஞ்சைப்பகுதியில் சகசி மன்னர் ஆட்சியில் தியாகேசர் குறவஞ்சி, சகசிராசன் குறவஞ்சி, மோகினி விலாசக் குறவஞ்சி என்பன தோன்றியுள்ளன. திருக்குற்றாலக் குறவஞ்சி மதுரை விசயரங்க சொக்கநாத நாயக்கர் (கி. பி. 1706 - 1732) ஆட்சியில் படைக்கப் பெற்றதாகும். முதற்குறவஞ்சிக்கும் இதற்கும் சுமார் 40 ஆண்டுகள் இடைவெளி உள்ளன.

தியாகேசர் குறவஞ்சி :

தியாகேசர் குறவஞ்சி சகசி மன்னரைக் குறிப்பிடுகிறது. இதனை இயற்றிய புலவர் பெயர் தெரியவில்லை. முத்துப் புலவர் இதன் ஆசிரியர் என்பர் என். சீனிவாசன் அவர்கள்.[6] "தியாகேசர் குறவஞ்சியின் ஆசிரியரை நிர்ணயிப்பதற்கான போதிய ஆதாரங்கள் குறவஞ்சிப் பாடல்களிலோ, சமகாலத்திய இதர நூல்களிலோ கிடைக்கப் பெறாமையால் இக் குறவஞ்சியை இயற்றிய புலவர் இரண்டாம் சஹஜி மன்னர் காலத்தவரென்றும். திருவாரூர் தியாகேசர் மீதில் அளவு கடந்து பக்தி கொண்டவரென்றும் தெரியவருகிறது" என்பர் வே. பிரேமலதா அவர்கள்.

தஞ்சை சகசி மன்னர் ஆட்சியில், திருவாரூரில் கோயில் கொண்டுள்ள தியாகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, இசை நாட்டிய நாடகமாக இற்றப்பட்டது. இக்குறவஞ்சி. இத்தியாகேசர் குறவஞ்சி, "திருவாரூரில் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி ஆலயத்தில், கீழைக் கோபுரத்திற் கருகில் உள்ள தேவாசிரிய மண்டபத்தில், பங்குனி மாதத்தில் நிகழும் பிரம்மோற்சவத்தின்போது நாடக

மாக நடத்தப்பட்டு வந்ததாக ஆதாரப் பூர்வமாகக் கிடைத்துள்ள செய்தி கூறுகிறது." [8] இக்குறவஞ்சி எளிய நடையில், இசை நாட்டிய நாடக வடிவில், மதுர பக்தி யுடன், மக்களுக்குப் புரியும் வகையில் அமைந்துள்ளது. அதனால், திருவிழாக் காலங்களில் சிறப்பு நிகழ்ச்சியாக நடத்தப்பட்டு வந்தது.

இந்நூலில், திருவாரூரின் சிறப்பு.

அ. "நிறைந்த சேந்தமிழ் சேராரூர்பதி" (பாடல்8)

ஆ. "மூவர் தமிழ் விளங்க நிற்கும் வாசல்"
(பாடல் 25)

இ. "தேரணியும் மதிலணியும் சிறந்த திருவாரூர்"
(பாடல் 39)

என்று கூறப்படுகிறது.

அ. "பங்குனி உத்தரநாதர் பார்புகழ் தியாக
விநோதர்" (பாடல் 35)

ஆ. "பையரவக் கங்கணத்தார் பங்குனித் தியாகர்"
(பாடல் 51)

என்ற வரும் வரிகள் இத்தலத்தில் பங்குனி உத்திரம் சிறப்பாகக் கொண்டாடப்படுவதை விளக்குகிறது.

இக்குறவஞ்சியில் காப்புப் பாடலில்,

"தங்கமா மகுடஞ் சூடும்
சகசி ராசேந்திரன் போற்றும்
மங்கைமா வரையர் ஆரூர்
வன்மீகத் தியாகர்" [9]

என்னும் வரிகளில், சகசி மன்னர் பொன்முடி சூடிய இராசேந்திரனாகப் புகழப்படுகின்றார்.

"ராசராசர் பணியேக
ராசனுதவிய சகசி
ராசமகபதிச் சோழ
ராசதேசஞ் சேர

ராசமோகினியைத் தேடி
    ராசயோகம் மிகும் தியாக
ராசர் மருவுங் கமலை "10

என்னும் பாடலில், ஏகோசி மன்னன் ஏகராசன் எனவும், அவர் மகன் சகசி ராசமகபதிச் சோழராசன் எனவும் பாராட்டப்படுகின்றனர். தஞ்சையில் ஆள்பவர் சோழர்கள் என்று கூறும் மரபு வெளிப்படுகிறது.

இக் குறவஞ்சியில்,

" வாசலிது வாசலிது
    மகராசன் வாசலிது
மலர் மகளும் கலைமகளும்
    வளர்ந்தோங்கும் வாசலிது
சிலைமதவேள் சகசிராசன்
    தினம் பணியும் வாசலிது
சைவ நெறி யாகமங்கள்
    தழைத் தோங்கும் வாசலிது
மெய்யுரை செய்மூவர் தமிழ்
    விளங்க நிற்கும் வாசலிது. "11

என்னும் பாடல் மிகவும் புகழ் வாய்ந்தது. இப்பாடல், தியாகேசர் கருப்பக்கிரகத்தின் தென்புறம் பலகணியின் அருகில், நித்திய வழிபாட்டின் பொழுதும் சிறப்பு விழாக் காலங்களிலும் தேவரடியார்கள் நின்று பாடும் சிறப்புடையது. " இது காரணம் பற்றியே இப்பலகணிக்குத் தென்வாசல் என்ற பெயர் நிலைத்துவிட்டது": 12

" சிந்துரவாணுதல் மானே மன்னர்
    தேசமெல்லாஞ் சொல்லுவேனே
நந்துலவும் பழனத் திகழாரூர்
    நாதர் தியாகவினோதர் நன்னாட்டில் ... ...
கண்டதேசம் இன்னமுண்டு ஒரு கோடி
    கமலைத் தியாகர் நாட்டில் கனிமொழியே கேள்;
மண்டலாதிபதி சகசி ராசேந்திரன்
    வாழுஞ் சோழ தேச வளம் பார்க்க வந்தேன் "

என்ற குறத்தி தான் தேசவளம் பார்த்து வரும் விவரம் கூறி, சகசி ராசேந்திரனின் சோழ தேச வளம் பார்க்க வந்ததும் கூறுகிறாள்.

இறுதியில் வரும் குறவன் குறத்தி உரையாடல் எளிமையும் இனிமையும் தருகின்றது. பிரிந்தவர் கூடினர்; பேசுகின்றனர்.

" எந்தன் மையல் தணிந்திடவே
இரங்கி என்னை அணைத்திடுவாய் — சிங்கி;
இரதியும் மன்மதனும் போலே
இருவருமாய் வாழ்ந்திருப்போம் — சிங்கா"[13]

என்றும் பாடுகின்றனர். இறுதியில், வாழ்த்துப் பகுதியில்,

" கார்வாழி நதிவாழி கற்றவர்கள் வாழி;
கனதனங்கள் வளர்ந்திருக்கும் அரசர்கள் வாழி;"[15]

என்று வரும் வாழ்த்தில். சகசி மன்னர் முதலான அரசர்கள் வாழ்த்தப் பெறுகின்றனர். சகசி மன்னர் ஆட்சியின் தாக்கம் பெற்ற இவ்வியலிசை நாடகம் கற்றாரும் கல்லாரும் பாராட்டும் பண்பு பெற்றதாகும்.

சகசி மன்னர் குறவஞ்சி :

தஞ்சையை ஆண்ட சகசி மன்னரையும் காவேரியையும் சிறப்பித்துக் கூறும், "ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள்" என்ற நூல் தஞ்சை சரசுவதி மகால் வெளியீடாக வெளிவந்துள்ளது. இவ்வைந்தில் சகசி மன்னர் குறவஞ்சி கும்பேசர் குறவஞ்சியின் மரபு நெறியில் அதனை அடுத்துத் தோன்றியதாகும். இது சகசி மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு படைக்கப்பெற்று, நடிக்கப் பெற்ற நாடகம். இசை நாட்டிய நாடக மரபுக்குரிய இசைப் பாக்களும் உரைநடைப் பேச்சும் விரவி வர ஆக்கப் பெற்றது. "இந்நாடகம் யட்சகான மரபுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு"[16] என்பர். இதனைச் சகசி மன்னரின் அவைக்களப் புலவரான முத்துப்புலவர் இயற்றியுள்ளார்.

தஞ்சை சகசி மன்னர் உலா வரும்போது, அவரைக் கண்டு காதல் கொண்டாள், இராச கன்னிகை. அவள் விரக வேதனையுடன் சிங்கார வனம் வருகிறாள்; மன்மதனையும் சந்திரனையும் தென்றலையும் நொந்து கொள்கிறாள்; பல தூது விடுகிறாள். குறத்தி குறி கூற வருகிறாள்; குறி கூறுகிறாள். இராச கன்னிகை கொலுவிருக்கும் சகசி மன்னரிடம் சென்று வணங்கி வேண்டுகிறாள். சகசி மன்னர் மணம் புரியச் சம்மதம் தெரிவிக்கிறார். தோழிகள் சோபனம் பாடுகிறார்கள்.

தோடய மங்கலம், மங்கலத் தருவுப் பாடல்கள் தொடக்கத்தில் உள்ளன, தோடய மங்கலம் வடமொழியிலும் மங்கலத்தருவு தெலுங்கிலும் உள்ளன. பின்பு வரும் இசைப் பாடல்கள் நடிப்புக்கு ஏற்ப எளிமை வாய்ந்துள்ளன. உரைநடை அமைப்பு நாட்டுப்புற எளிய உரை நடையே எனலாம். குறத்தி,

" பாலும் தேனும் கலந்த தென்ன
வனப்புடன் மிக வாழ்வீர்காண்.
மாலும் தாமரை மாது போலவும்
வாழ்வீர் காண் அம்மே "17

என்கிறாள். இராச கன்னிகை மன்னரிடம்,

" என்னைக் கல்யாணம்
பண்ணிக் கொள்ளும் சகசேந்திரா
இதமாக உன்பாதம்
நம்பி வந்தேன்காண் "18

என்கிறாள்.

முடிவில் மங்களத் தரவு,

" நாகரிக மகராச நரபதிக்கு வாகையணி
ஏக ராச பாலனுக்கு
மேக நிற மாயனுக்கு
வித்யாதி காரனுக்கு

போக தேவேந்திரனுக்கு
சகசி பூபதிக்கு ...
சோபனமே சோபனம்
சோபனமே சோபனம் "19

என்று முடிகிறது. இதில் இவர், ஏகராசபாலன் (ஏகோசி மகன்) என்று குறிப்பிடப்படுகிறார். பாட்டுடைத் தலைவனே, காதல் மங்கையின் மணவாளனாக வரும் சிறப்புடையது இக் குறவஞ்சி.

மோகினி விலாசக் குறவஞ்சி :

தஞ்சை சகசி மன்னரின் அரசவையில், தமிழும், வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் இன்னிசை நாட்டிய நாடக மோகன விலாசக் குறவஞ்சியை இருமொழிப் புலவரான சப்தரிஷி என்பவர் இயற்றி, வாசுதேவ கவி, இராமபாரதி, முத்துக்கவிராயர் ஆகிய புலவர்களின் முன்னிலையில் அரங்கேற்றம் செய்தார். இக் குறவஞ்சியின் இலக்கியச் சுவடி சமர்த்த இராமதாசரின் சீடர் மரபினரால் தஞ்சை தெற்கு வீதியிலுள்ள மடத்தில் பாதுகாக்கப் பெற்று, தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் சேர்க்கப் பெற்று, அங்குள்ள உபய வித்துவான் என். சீனிவாசன் அவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. சகசி மன்னர் அவையில் அரங்கேறிய குறவஞ்சியை, அவர் அரசு கட்டிலேறிய 300-ஆம் ஆண்டில் நம்மிடையே புத்தக வடிவில் அரங்கேற்றிய பெருமை இப் பதிப்பாசிரியரைச் சாரும். இக்குறவஞ்சி இருமொழி உலகுக்கும் புதுமையானவள் எனவே, குறவஞ்சி இலக்கியப் பெயர்ப்பட்டியல் தொகுத்து 115 நூல்களைக் குறிப்பிட்டுள்ள நிர்மலா மோகன் அவர்களின் கண்களில் இந்த மோகன விலாசக் குறவஞ்சி தென்படவில்லை.

இக்குறவஞ்சியில்,

"இந்திரன் எனவே போற்றி
இப்புவி வேந்தரெல்லாம்

வந்தடி வணங்கும் சகஜி
மன்னன் "[21]

என்று ஆசிரியர் மன்னரைப் புகழ்கின்றார்.

தலைவி கமலாவதி தலைமகனை எண்ணி வருந்தி,

" சகஜி மகிபன் இங்கே வாரானோ — என்னைச்
சரசமாய் வந்து முன்போல் சேரானோ ?
நகக்குறி வைத்தென் மோகந் தீரானோ — கூடி
நயமாய்ச் சருவிமுத்தந் தாரானோ ?" [22]

என்று கூறி ஏங்கும் பாடல் நாட்டுப்புற இலக்கியப் பாங்கினை வெளிப்படுத்திப் பாமர மக்களையும் பரவசமடையச் செய்கின்றது. தலைவி குறவஞ்சியிடம்,

" தாட்டிகன் சகஜி ராசன் தன்னையுன் குறியினாலே
கட்டினால் உனக்கு மானே கோடி பொன்
தருகுவானே[23]

என்று கூறும் பாடற்பகுதியில், அவள் தலைவனை அடைய விரும்பும் ஆர்வமிகுதியும், மோக மிகுதியும் உலகியல் பாங்கில் வெளிப்படுகின்றன.

சகசி மன்னரின் படை செஞ்சியை ஆண்டு வந்த சிவாஜியின் மகன் ராஜாராமிற்குத் துணையாகச் சென்று ஔரங்கசீப்பின் படைத் தளபதி ஜீல்பிர்கானை வெற்றி கண்டது என்பது வரலாற்றுச் செய்தி. இச்செய்தியினை,

" வல்லமையால் மிக்க மன்ன ரெவராலும்
வெல்லப்படாத தில்லி வேந்தன் படையை வென்ற
செல்வன் ரணவிஜயன் செந்தமிழ் வாணர்கள்
சொல்லுக்குகந்தருள் சுகுணன் சகஜி தீரன் "[24]

என்ற பாடல் விளக்குகின்றது.

சிங்கி சிங்கனிடம் உரையாடி மகிழும்போது,

(அ) " வாராயோ சகஜி மன்னனைப் போற்ற நீ
சிங்கா ",

(ஆ) " சகஜி மகிபனைச் சந்திக்க வந்தேன் நான்
சிங்கா ".

(இ) " செல்வமுங் கீர்த்தியும் சீரும் புகழும் மேன்
மேல் - இன்னம் நல்ல வரிசையும் நாடும் வரு
மென்று சொன்னேன் நான் சிங்கா !"25

என்று சகசி மகிபனைப் போற்றிப் புகழ்கின்றாள் !

கவிஞர் தம் மனம் மகிழ வாழ்த்தும்பொழுது,

" செந்தமிழோர் போற்றும் ஏகோஜி மைந்தன்
சேனையெல்லாம் இப்புவியில் சிறந்து வாழி !
சந்ததமும் சப்தரிஷிகவி கொண்டாடும்
சகஜி பூபாலன் நித்தம் வாழி தானே !"26

என்று வாழ்த்துகின்றார்; செந்தமிழ் நாட்டுச் சேனையும் மன்னரும் வாழக் கவிஞர் வாழ்த்துகின்றார் !

மூன்று குறவஞ்சி இலக்கிய மலர்களும் அக்கால மக்களின் இலக்கிய ஆர்வத்திற்கும் இலக்கியத் தேவைக்கும் மன்னரின் போற்றுதலுக்கும் பக்தி வழிபாட்டிற்கும் பயன்பட்டன; திருவிழாக்காலங்களில் நெகிழ்ச்சி பெற்ற இன்னிசை நாட்டிய நாடகமாக நடத்தச் செய்து கண்டும் கேட்டும் களிப்படைவதற்கும் நன்கு பயன்பட்டன !

எண்கள் குறிக்கும் இடங்கள்

1 குடவாயில் பாலசுப்பிரமணியன், சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும், ப- 299
2 மேற்படி, ப-298
3 நிர்மலா மோகன், குறவஞ்சி இலக்கியம் ப-26
4 சுப்பிரமணியன் ச. வே. இலக்கிய வகையும் வடிவும், ப-341
5 குமரவேலன் இரா. குறவஞ்சி இலக்கியம் இலக்கிய கொள்கை-6 ப-148
6 சீனிவாசன், என். பதிப்பாசிரியர், மோகினி விலாசக் குறவஞ்சி,
7 பிரேமலதா, வே. பதிப்பாசிரியர், தியாகேசர் குறவஞ்சி, முன்னுரை, ப-33
8 மேற்படி, ப-33-34
9 தியாகேசர் குறவஞ்சி, பாடல்-2

10 மேற்படி, பாடல்-15
11 மேற்படி, பாடல்-25
12 மேற்படி, பக்கம்-34
13 தியாகேசர் குறவஞ்சி, பாடல்-31
14 மேற்படி, பாடல்-65/6
15 மேற்படி, பாடல்-67
16 வேணுகோபாலன், வ. நாடகக் கதைச் சுருக்கம் ஐந்து தமிழ்ப் நாடகங்கள், ப-11
17 மேற்படி, சகசி மன்னர் குறவஞ்சி, பாடல்-48/5,6
18 மேற்படி, பாடல்-49
19 மேற்படி, பாடல்-50 மங்களம் தரவு
20 குறவஞ்சி இலக்கியம், பக்கம் 292-296
21 மோகினி விலாசக் குறவஞ்சி, பாடல்-7
22 மேற்படி, பாடல்-20/4
23 மேற்படி, பாடல்-38
24 மேற்படி, பாடல்-40/3
25 மேற்படி, பாடல்-47/10, 11
26 மேற்படி, பாடல்-48

இரண்டாம் சரபோஜியின் சமயப் பணிகள்

வித்துவான் **வே. மகாதேவன்** எம்.ஏ., எம்.ஃபில்,
கும்பகோணம்.

சமயமும் வரலாறும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை, இந்நாடு சமய நம்பிக்கைகள் பலவற்றின் நல்லடித்தளத்தில் அமைந்துள்ளது.

கி. பி. 1797-ல் வேற்று மதத்தைச் சேர்ந்த வெள்ளைக் காரனொருவன் தஞ்சைப் பெரியகோவில் ஸ்ரீ விமானத் தின்மேல் ஏறினான். வேற்று மதத்தவன் திருக்கோயிலுள் நுழைந்தமைக்காகத் தஞ்சைப் பெரியகோயிலுக்கு மகா சம்புரோட்சணம் செய்து தூய்மை செய்தனர் மராட்டிய மன்னர்கள். இது ஆவணங்களில் கண்ட உண்மை.[1]

இதே காலக்கட்டத்தில்தான் தஞ்சைத் தரணிக்குரிய மராட்டிய இளவரசன் - தத்து புத்ரன் மாற்று நாட்டவரும் வேற்று மதத்தவரும் அன்னிய மொழியினருமான ஸ்வார்ட்ஷ் பாதிரியாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தான்.

துளஜாராஜா (1764-87) தனக்கு ஆண் வாரிசின்மையால் சரபோஜியைத் தத்தெடுத்துக்கொண்டான்; காப்பாளனாக சரபோஜியின் சிற்றப்பன் அமர்சிங் நாடாண்டான் (1787-1798). தத்தெடுத்த நிகழ்ச்சி 1787 ஜனவரி 22-ல் நடந்தது.

1. மோடி ஆவணம் க. ப. 4 - 380.

"துளஜா சரபோஜியைத் தத்தெடுத்தமை செல்லாது" என்ற அறிஞர்கள் பின்னர் ரெவரெண்ட் பாதிரியார் ஸ்வார்ட்ஷ் அவர்களின் முயற்சியினால், "தத்தெடுத்தமை செல்லும்" எனக் கூறினார். 1787-ல் 'சர் ஆர்ச்சி பால்ட்காம் பெல்' கமிஷன் செய்த முடிவு பின் முறிவுற்றது; ரெவரெண்ட் ஸ்வார்ட்ஷ் பாதிரியாரின் முயற்சியினால் கிழக்கிந்தியக் கம்பெனி சரபோஜியை அங்கீகரித்தது. எனினும் பட்ட மேற்பினைப் பாதிரியார் பார்க்கவில்லை. சரபோஜி 1789 ஜூன் 28-ல் அரசனானார்.[2]

ஸ்வார்ட்ஷ் பாதிரியாருடன்

இரண்டாம் சரபோஜி தன்னிளம் பருவத்தை ஸ்வார்ட்ஷ் பாதிரியார் அரவணைப்பில் கழித்தார்: கிறித்துவச் சூழலில் வளர்ந்தார்.

ஸ்வார்ட்ஷ் மறைந்த பின்னர் "அவருக்கு உருவச்சிலை அமைத்தார்". "ஸ்வார்ட்ஷ் மாதாகோயிலமைத்தான்"[3] நன்றி கூர்ந்து ஆங்கிலக் கவி புனைந்தான்.[4] – இவை தன்னை வளர்த்து ஆளாக்கிய பெரியவர்க்கு அவன்

---

2. The Great Temple at Tanjore - J. M. Somasundaram Pillai. page 76.

3. I.B I D. page 78 – 79. இவன் அமைத்தது அன்று என்றலும் உண்டு மராட்டிய மன்னர் அரசியல் சமுதாய நிலையும் - கா. ம. வேங்கடராமையா. ப, 211.

4. "Scared to the memory of
The reverend Christian Frederic Swartz
Missionary to the Honourable
Society for promoting Christian knowledge in London
Who departed this life on the
13th of the February, 1798
aged seventy one years and four months.
Firm wast thou, humble and wise,
Honest, pure, free from disguise,

செலுத்திய அஞ்சலிகள், மிஷினரிகள், சர்ச்சுகளையும் பள்ளிகளையும் நடத்தத் தஞ்சைப் பகுதிகளில் ஓரளவு நிலக்கொடைகள் அளித்தமை[5] இவன் கிறித்துவத்துக்கு ஆற்றிய தொண்டு.

கிறித்துவச் சார்பினனா ?

சரபோஜி மன்னன் ஸ்வார்ட்ஷ் பாதிரியாரால் வளர்க்கப்பட்டமையும் வேதநாயக சாஸ்திரிகளின் தொடர்பும் இவனைக் கிறித்துவ மதத்தை முறையாக அறியச் செய்தன; மதிக்கச் செய்தன. எனினும் இவன் 'சார்ந்ததன் வண்ணமாகாதவனாய்' – ஹிந்து உணர்வு மிக்கவனாய் இலங்கினான்.

ஸ்வார்ட்ஷ் பாதிரியாரால் அரியணை பெற்ற இவ்வரசன் தான் அரியணை ஏறியவுடன் "தஞ்சைப் பெருவுடையாருக்கு விலையுயர்ந்த அணிகலன்களை அளித்து வழிபட்டான்" என்று ஓர் கல்வெட்டுக் காட்டுவது இவன் மனவுணர்வினைக் காட்டுவது.

கி. பி. 1801 - முதலாகவே சரபோஜி ஏராளமான கோயிற் பணிகளைப் புரிந்துள்ளான். கி பி. 1801 - சரபோஜியின் சமய உள்ளத்தைத் தெற்றெனக் காட்டுவது: இவன் இவ்வாண்டில் சோழ மண்டல யாத்திரை செய்தமை; கும்பாபிஷேகப் பணிகள் ஆற்றியமை; காஞ்சிப் பெரிய

Father of orphans. the widows' Support,
Comfort in sorrow of every Sort,
To the benighted dispenser of light.
Doing. and pointing to that which is right.
Blessing to princes, to people to me;
May I. My father, be worthy of thee !
Wisheth and prayeth the "Sarabojee"
— The Great Temple at Tanjore p. 79

5. The Great Temple at Tanjore. Page 79

வரைத் தரிசித்தமை; கனகாபிஷேகம் புரிந்தமை; அகோபில ஜீயர் சுவாமிகளைத் தரிசித்தமை - முதலியன இப்பணிகள்.

காஞ்சிப் பெரியவர் தரிசனமும் அகோபில ஜீயர் சுவாமிகளோடு ஏற்பட்ட தொடர்பும் ஒரு புறம் சமய உணர்வினை மன்னன் மாட்டு மிகுவித்தன.

சரபோஜி தினந்தோறும் ஆத்மார்த்தமாகச் சிவபூஜை செய்யும் ஒழுகலாறுடையவனாய் இலங்கி வந்தவன். அரசரொடு நெருக்கமான பழக்கமும் உறவும் கொண்டிருந்த கிறித்துவ மதத்தினருட் சிலர் ஒரு புறம் அரசனுக்கு ஆதரவாக இலங்கினர்; மறுபுறம் கிருத்துவருட் சிலர் 'அமர்சிங்'குக்கு ஆதரவாக ஜபங்கள் புரிந்தனர்.

வேதநாயக சாஸ்திரிகள் எளிய தமிழ்ப் பாடல்களில் ஏராளமான கிறித்துவச் சார்புடைய நூல்களை எழுதினார். இந்நூல்களுள் மிகப்பல தமக்குமுன் வாழ்ந்த ஹிந்து சமயச் சித்தர்களான சிவவாக்கியர் ஞானிகளான ஆதிசங்கரர் போன்றோர் பெயரில் ஒளிந்துகொண்டு இவரால் எழுதப் பட்டவை. கி. பி. *1796 - 1800*களில் போலிப் பெயரால் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட இந்நூல்கள் ஹிந்துமதப் பழக்கவழக்கங்களைத் - தத்துவங்களைக் கேலி பேசின; சாடின. இந்நூல்கள் முகமதியர்களையும் விமர்சித்தன.

இத்தகு நடவடிக்கைகளால் - தீவிரமான மதமாற்ற நடவடிக்கைகளால் சரபோஜி மனவருத்தம் கொண்டவனாதல் வேண்டும். எனவே *1801* முதலாகவே தீவிரமாக ஹிந்து சமயத்தை ஆதரித்தனன் எனலாம். அரண்மனை ரிக்கார்டுகளில் வேதநாயக சாஸ்திரிக்கு வருஷசம்பாவனையாகவோ கௌரவமாகவோ அரண்மனையில் இருந்து பொருட்செலவு செய்யப்பட்டதாகக் குறிப்பு ஒன்றும் இல்லாமை இவரை அரசர் ஆதரிக்கவில்லை என்பதனைக் குறிப்பாகக் காட்டுவதாகும்.

சரபோஜி காசி இராமேச்வர யாத்திரைகள் புரிந்து மீண்டபின் - கி. பி. 1822க்குப்பின் ஹிந்து மத வளர்ச்சிப் பணிகளில் பெருந்தீவிரமாக ஈடுபட்டான். கி. பி. 1828-ல் வேதநாயக சாஸ்திரிக்கும் சரபோஜிக்கும் முழு வேறுபாடு முகிழ்த்தது. அவர் மன்னரால் முற்றாக அவமதிக்கப்பட்டார். இவ் வேறுபாடு கி. பி. 1800-ல் தோன்றிக் கி. பி. 1828 - இல் முழு வடிவம் பெற்றதொன் றெனலாம்.

சரபோஜி வேற்றுச் சூழலில் வளர்ந்தனன். ஆனாலும் கிறித்துவ சமயத்தை மதித்தாலும் அச் சூழல்களால் பாதிக்கப் படாமல் - ஹிந்துவாய் ஹிந்து மத தத்துவங் களில் - வழிபாட்டு நெறிகளில் - நம்பிக்கைகளில் வழிவழி யாக வந்த உணர்வுகளில் லயித்த மனமுடையவனாக இலங்கினான்; இந்துமத வளர்ச்சிக்கு அருந்தொண்டுகள் ஆற்றினான்.

வழிபடு தெய்வம் :

தஞ்சை மராட்டிய மன்னன் பிரதாபசிம்மன் காலத்தில் காஞ்சிப் பெரியவர் மாட்டு மராட்டிய மன்னர் கொண்ட பெரும் பக்தியால் உருவான சிறுகோயில் ஸ்ரீ சந்திர மவுலீச்வரர் ஆலயம்' இது தஞ்சையரசரின் வழிபடு தெய்வம். 6 காஞ்சிப் பெரியவருடன் தஞ்சைக்கு வந்த ஸ்வர்ணமயமான பங்காரு காமாக்ஷி அரசன் விரும்பியவாறு தஞ்சையில் உறைந்தாள். இப் பங்காரு காமாக்ஷி ஆலயத் திலும் சரபோஜி பேரீடுபாடு கொண்டிலங்கினான். கல் வெட்டுக்களில் காணும் 'ஸ்ரீ காமாக்ஷி சகாயம்' என்ற தொடர் 7 இது காட்டும்.

---

6. IBID p 98 ச. ம. மோ. த. 3-23; காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அருள் வரலாறு - மகா தேவன், வே. பக் 168.163,

7. மராட்டிய மன்னர் செப்பேடுகள். பக்.

ஆற்றிய பணிகள் :

சரபோஜி ஹிந்துமத உணர்வு சான்றவனாய் அகரங்கள் பல அமைத்தான்; அந்தணர்க்கு அன்னம் பாலித்தான். வேதநெறி தழைத்தோங்குவித்தான். அன்ன சத்திரங்கள் அமைத்தான்; எண்ணில்லாத் திருக்கோயிற் பணிகள் புரிந்தான். பக்தி இலக்கியங்கள் படைத்தான்; படைப்பித்தான். உப வேதங்களில் ஒன்றான வைத்ய சாஸ்த்ரத்தில் பெரிதும் ஈடுபட்டான்; காசி சேது பர்யந்தம் ஸ்தல யாத்திரைகள் ஆற்றினான். அத்வைத சைவ வைணவ மடங்களின் மீது பெரும் ஈடுபாடுகொண்டு பேணினான்.

அகரங்கள் அமைத்தமை :

அகரங்களமைத்தல், பிரமதேயச் சிற்றூர்கள், சதுர்வேதி மங்கலங்கள் உருவாக்கல் மன்னர்கள் பேணிய தொல்நெறி. இரண்டாம் சரபோஜி தன் காமக்கிழத்தியின் பெயரால் 'முக்தாம்பாள் அக்கிரஹாரம்' என்னும் அகரத்தை அமைத்தான். இங்கு வசித்த ஒவ்வொருவர்க்கும் ஆண்டொன்றுக்கு ஐம்பத்தொரு கலம் நெல் மானியம் கொடுக்கப்பட்டது என்பது ஆவணங்களில் கண்டது [8]

அந்தணர்க்கு அன்னம் பாலித்தல் :

அந்தணர் ஓம்பல் இல் வாழ்வார் கடமை அதிலும் ஆயிரம் அந்தணர்க்குணவிடலும், (சகஸ்ர பிராமண போஜனம்) லக்ஷம் பிராமணர்க்குணவிடலும் மிகப்பெரும் புண்ணியங்கள். இரண்டாம் சரபோஜி லக்ஷம் பிராமணருக்கு 1801 - இல் அன்னமிட்டான் [9] இதே யாண்டில் முத்துலக்ஷ்மி பாயி தஸ்நான் மகாலில் லக்ஷ பிராமண போஜனம் நடத்தினாள்.[10] பிராமண போஜனத்துக்குச்

---

8. போன்ஸ்லே வம்ச சரித்ரம். ப. 136 ச. ம. மோ. த 23-28.
9. தமிழ்ப் பல்கலை. மோடி 2-227.
10. „ „ 2-165.

சாமான் வாங்கச் செலவழிக்கப்பட்ட தொகை 5000 சக்கரம் (700 சவரன் பொன் பெறலாம்) இவ்வொரு குறிப்பே மிகச் சிறப்புற லக்ஷ பிராமண போஜனம் (நடத் தப்பட்டமை காட்டுவதாகும். இரண்டாம் சரபோஜி காசியில் நாடொறும் அந்தணர்க்கு உணவிட ஏற்பாடு செய்தனன்.

வேதவேதியரைப் புரந்தமை :

வேதம் வல்ல பிராமணர்க்கு இரண்டாம் சரபோஜி நிலக்கொடைகள் தந்துள்ளான். பலப் பல சான்றுகள் இது பகரும்.

'மகாலிங்க ஜடாவல்லபம்' என்பவருக்கு கி. பி. 1823ல் இரண்டாம் சரபோஜி எட்டு வேலி நன்செய் நிலமும், மூன்று வேலி புன்செய் நிலமும் தானமாக அளித்தான். [11]

வேள்வி நடந்த ஊரையே யக்ஞேஸ்வரனுக்குத் தான மாகத் தருவது பழைய செப்பேடுகளில் கண்ட நெறி. 1828-ல் 'வெங்கட ராயர்' என்கிற ரெட்டிராயருக்குக் காவிரிக்குத் தென்கரை 133 குழி நிலத்தை '**யாகசாலா தர்ம**' மாக இரண்டாம் சரபோஜி அளித்துள்ளான் [12]

வேள்விமல்க உதவியமை : (விதிமுறை விளக்க நூல்கள்)

வேத நெறிப்பட்ட தர்மச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மராட்டிய மன்னர்கள். பல்வேறு வகையான யாகங்களை நடத்துவது தொடர்பாகத் தாமுற்ற ஐயங்களைக் காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகட்கு விண்ணப்பித்துத் தீர்த் துக்கொண்ட வழக்காறு இருந்தமை காஞ்சி ஸ்ரீ மடம் ஆவணங்களால் புலனாகிறது. இதே மரபினனான

---

11. ச. ம மோ. த. 4-5.

12. மோடி தொகுதி 2-253-254.

இரண்டாம் சரபோஜி பல்வேறு யாகங்களுக்குப் பொருளுதவி புரிந்து வேள்விகள் மல்குவித்தான்; ஒரத்தநாடு சத்திரத்தில் நித்யாக்னி ஹோத்திரம் நிகழவும் எண்ணற்ற வேள்விகள் புரியவும் இரு பெரு வேள்விச் சாலைகளும் ஹால்களும் அமைத்தான். [13]

சரபோஜி கி. பி. 1801-ல் 'பிரநிஷ்டிக சபா த்வித்யாத்யக்ஷ அப்பா சாஸ்திரி' என்பவர் 'குண்டல இஷ்டி' என்னும் யாகம் புரிய 20 சக்கர [14] மளித்தான்; இதே யாகம் புரிய 1826 - இலும் உதவினான். [15]

கி. பி. 1824 - ல் திருவாலங்காட்டினரான அப்பைய தீக்ஷிதரின் மரபினைச் சேர்ந்த 'குப்பா தீக்ஷிதர்' என்பவர் 'அக்னிஷ்டோமம்' என்னும் யாகம் புரிய இவன் உதவினன். இவ்வியாகம் வஸந்த ருதுவில் ஐந்து நாள் ஆற்றி 'அக்னிஷ்டோம ப்ருஷ்டஸாமா' என்னும் சாமவேத மந்திரத்தால் முடிக்கப்படுவது. [16]

கி. பி. 1825 - ல் சிவராமபுரியினரான 'ராம வாஜபேர்' என்பவர் 'வாஜ பேயம்' 'பௌண்டரிகம்' என்னும் யாகங்களைச் செய்யப் பேருதவி புரிந்தான். சுவேத சத்ரதானம் செய்யச் செலவுத் தொகை கொடுத்தான். [17] இவரே பஞ்சநத க்ஷேத்திரத்தில் 'சர்வதோ முகம்' என்னும் பெரு வேள்வி புரிய உதவினன். [18]

கி. பி. 1827 - சிவகங்கைத் தென் கரையில் 'குப்பாச் ச்ரௌதிகள்' என்பவர் பசுபந்தம் என்னும் யாகம் புரிய உதவினான். [19] 1829 - இல் 'நாகபட்டு சதாசிவ பட்டு

13. The great Temple at Tanjore. பக். 84.
14. *ச. ம. மோ. த. 2-21*
15. ,, *5-34*
16. ,, *5-35*
17. ,, *4-37*
18. ,, *4-37*
19. ,, *9-10*

லாண்டகே' என்பவர் வர்ஷ பசு பந்தம்' செய்தார். இரண்டாம் சரபோஜி அந்த யாகத்தில் சென்று கலந்து கொண்டு யாகம் புரிந்தவர்க்கு இருபது சக்கரம் தக்ஷிணை அளித்தான். [20]

இச் சான்றுகள் அரசன் வேத நெறி யாகங்கள் நிகழ் வதில் ஊக்கம் கொண்டு ஊக்குவித்தமை காட்டுவனவாகும்.

வேதநெறியில் அறக்கொடைகள் தந்தமை :

மன்னன் சரபோஜி வைதிக வழிப்பட்ட எண்ணில்லாத் தானங்களை எழில் பெறப் புரிந்தவன்.

தானங்களில் 'கோ தானம்' 'கஜ தானம்' முதலானவை மராட்டிய மன்னர்களால் அடிக்கடி செய்யப்பட்டவை. 'கஜ தான' விவரங்களைக் கோரிக் காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடத்தில் கடித ஆவணங்கள் உண்டு.

திருப்பழனம் சிவாலயத்தில். மராட்டிய மன்னர் பொருளாதரவு கொண்டு தினந்தோறும் ஒரு கோதானம் 1813 வரை நிகழ்ந்து வந்துள்ளது. [21]

ஒரே சமயத்தில் பன்னூறு பசுக்களைத் தானம் செய்வதுண்டு. கி. பி. 710ல் அரசரான அரிகேசரி பராங்குச மாறவர்மன் எண்ணிறந்த கோசகஸ்ரம் மன்னனின் மிசை செய்தவன். மன்னன் சரபோஜி கி. பி. 1819 - ல் ரூபாய் 51139 செலவில் கோ சகஸ்ர தானம்' செய்தான்; [22] கி. பி. 1832 - ல் பாத்தியூர் தமிழ்ச் சாஸ்த்ரிகளுக்குக் கோ சகஸ்ர தானம்' அளித்தான். [23]

---

20. மோடி தொகுதி 1-233-4
21. ச. ம மோ. த. 1-35
22. ,, 5-36
23. ,, 10-15

கஜதானம் - உடையார்பாளையம் ஜமீன்தார்களால் காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதியர்களிடம் விளக்கம் கேட்கப்பட்ட அரியதொரு தானம். சரபோஜி மன்னன் வைத்தீச்வரன் கோயிலுக்கு, 'ஆனந்தவல்லி' என்னும் பெயரிட்டு ஒரு யானைக் குட்டியினைக் கஜதானமாக அளித்தான்.[24]

யானையையும் விருஷபத்தையும் பொன்னாற் செய்து தருதலும் இத்தான வகையினதேயாகும். பதினாறு தான வகைகளில் ஒன்று ஹிரண்ய விருஷப தானமாகும். சரபோஜி யரசன்[25] தஞ்சைப் பெருவுடையார்க்கு 1826-ல் முதலில் தங்க யானையும் பின்னர் அதேயாண்டில் தங்க (ஹிரண்ய) வ்ருஷபமும்[26] 1832-ல் வெள்ளி விருஷபமும்[27] செய்தளித்திருக்கிறான்.

அரிகேஸரி பராங்குச மாறவர்மன், முதல் ராஜராஜன் முதலிய அரசர்கள் துலாபார தானம் புரிந்தவாறு போலச் சரபோஜி காசி சென்று திரும்பி வந்து சேது யாத்திரையை நிறைவு செய்து வெள்ளி கொண்டு துலாபார தானம் செய்துள்ளான்.[28]

அன்ன சத்திரங்கள் அமைத்தமை :

மன்னன் சரபோஜி மராட்டியர் புரந்த அன்னசத்திரங்களைச் சிறப்புற நிலைநிறுத்தியவன். இவை வெறும் சோற்றுக் கூடங்களாகத் திகழ்ந்தன அல்ல; என்பதனை 28—1—1801க்குரிய தொரு ஆவணம் காட்டுகிறது.[29] இது சரபோஜி காலத்திய சத்திரங்களின் அருமையான நிலை காட்டும் அரிய சான்றாகும்.

24. மோடி ஆவணத் தொகுப்பு 2 - 259.
25. ச. ம. மோ. த 5 - 36.
26. ச ம. மோ. த. 5 - 36.
27. ,, 10 - 15
28. தஞ்சை மராட்டியர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் - கா. ம. வேங்கட ராமையா. பக். 281.
29. The great Temple at Tanjore பக். 84 - 85 F. N.

"சத்திரங்களில் மூன்று வேளையும் வழிச் செல்வோர்; அற்றார்; அலந்தார்; அந்தணர்க்கு உணவுவழங்கப்பட்டது; உலுப்பைகளும் வழங்கப்பட்டன"

"சமூகத்தின் அனைத்துத் தரப்பினர்க்கும் நள்ளிரவு வரை நல்லுணவு வழங்கப்பட்டது."

"சத்திரங்களை ஒட்டி அமைந்த கல்விச் சாலைகளில் வேதக்கல்வி, கலைக்கல்வி அளிக்கப்பட்டது".

"பயணிகட்கு மருத்துவர் மருத்துவ வசதி நல்கினர்; மருந்துகள் தேவையானவர்க்கு அளிக்கப்பட்டன"

"நான்கு நாட்கட் கொருமுறை ஸ்நாநத்துக்கு எண்ணெய் தரப்பட்டது".

"கர்ப்பிணிகள், நோய்வாய்ப்பட்டோருக்குப் பால் நாடொறும் தரப்பட்டது".

"மகப் பெற்றோர் மருத்துவ வசதி பெற்றனர்; மூன்று மாதம் பராமரிப் புற்றனர்"

"மதச் சடங்குகள் புரிவோர் தேவையான வசதிகளும் உதவிகளும் உற்றனர்" என்கிறது ஆவணம்.

மன்னன் சரபோஜி முன்பிருந்த சத்திரங்களில் அதாவது ராமேச்வரம் தனுஷ்கோடிச் சத்திரம் உட்பட்ட பதினாறு சத்திரங்களின் பணிகள் சிறப்புற நடைபெற உதவியதோடு மேலும் மூன்று சத்திரங்களை அமைத்தான். அவற்றுள் முதலாவது தன் மனைவியின் பெயரால் நீடா மங்கலத்தில் அமைத்த 'யமுனாம்பாள் சத்திரம்' இரண்டாவது தன் மகள் பெயரால் அம்மாசத்திரத்தில் அமைத்த 'சக்வராம்பாள்புரம் சத்திரம்'. மூன்றாவது தன் காமக் கிழத்தியின் பெயரால் அமைத்த 'முக்தாம்பாள் சத்திரம்'. ஓரத்த நாட்டில் இருந்த இந்தச் சத்திரத்தில் வேத வேள்விகள் நிகழ்ந்தன. இதற்காக இரு பெரிய ஹால்கள் கட்டப் பட்டிருந்தன என்று இரு வடமொழிப் பாடல்கள் கூறு

கின்றன.[30] இங்கு இருந்த தோட்டங்களில் அரிய மூலிகைகள் பயிரிடப்பட்டன.[31]

ஆய்வறிஞர் முக்தாம்பாள் சத்திரத்தின் பெருமை புலப்படுத்துவர்.[32] இச்சத்திரம் ஓரத்தநாட்டில் தன் காமக்கிழத்தியின் பெயரால் சரபோஜியினால் 16—1—1802-ல் கட்டத் தொடங்கப்பட்டது. மூவேளை உணவும் உலுப்பைகளும் வழங்கப்பட்ட இச்சத்திரத்தில் தரும கல்யாணங்களும் நிகழ்ந்தன; 1825-ல் 13007 கலம் நெல் இச்சத்திரத்தின் வருடாந்திரச் செலவாக இருந்தமை இது சோறு மணக்கும் இடமாக இலங்கியமை காட்டும். ஒவ்வொரு நாளும் 4020 பேர் மூன்று வேளையும் உணவுண்டனர். இங்கு ஐந்து கல்வி நிலையங்கள் இயங்கின. ஆங்கிலக் கல்விப் படிப்புட்படப் பல்வேறு கல்விகளை 641 மாணவர் பெற்றனர்.

திருக்கோயில் பணிகள் :

வைதிக நெறி வளர்ச்சியில் பேரீடுபாடு கொண்டது போலவே ஆகம வழிப்பட்ட ஆலயப் பணிகளிலும் அரசன் சரபோஜி அரும்பணி பல ஆற்றினான். இப்பணிகள் நால் வகையின: 1) புது ஆலயங்களை எடுப்பித்தமை 2) ஆலயங்களைப் புதுப்பித்தமை; கும்பாபிடேகங்கள் ஆற்றியமை 3) திருவிழாக்கள் நடைபெற உதவியமை. 4) நித்திய வழிபாடு முட்டின்றி நிகழ நிவந்தங்கள் நல்கியமை என வகைப்படுத்தலாம்.

நூதன ஆலயங்கள் அமைத்தமை :

கி. பி. 1812-ல் தஞ்சையில் கீழவாசல் லக்ஷ்மி நரசிம்ம சுவாமி கோயில் 3050½ சக்கரம் பொருட் செலவில் எடுப்பிக்கப்பட்டது.[33]

---

30 The Great Temple at Tanjore. pages 83-84.

31 IBID. page 83 F. N.

32. தஞ்சை மராட்டிய மன்னர் அரசியலும் சமுதாய நிலையும் பக். 271-2.

33. ச. ம. மோ. த. 3-21.

கி. பி. 1826-ல் தஞ்சை வடக்கு வீதியில் ரத்னபுரீச்வரச் சுவாமி கோயில் என்னும் புதுச் சிவாலயப் பணி நடைபெற்றது. [34]

சரபோஜி தஞ்சைக் கோயிலில் 108 சிவலிங்கங்களைக் கி. பி 1801 - ல் எழுந்தருள்வித்தான். இது 'அஷ்டோத்ர சிவாலயம்' எனப்படுவது. பல்வேறு இடங்களில் இருந்து லிங்கங்களைக் கொணர்ந்து ஓரிடத்தில் பிரதிஷ்டித்தமை இவன் ஈடுபாட்டைக் காட்டுவதாகும்.

திருப்பணிகளும் கும்பாபிடேகங்களும் :

எண்ணில்லாத் திருப்பணிகளை மண்ணின் மிசை செய்த மன்னன் சரபோஜி தஞ்சையில் ஆற்றிய பணிகளைக் கல்வெட்டுக்கள் விளக்கும்.

இவன் கி. பி. 1801 - தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள எல்லாச் சுற்றாலயங்களிலும் திருப்பணிகள் புரிந்தான்; புதிய மண்டபங்களைக் கட்டினான்; பிரகாரத்தில் தள வரிசை பரப்பினான்; கணபதியார் ஆலயத்தில் கணபதியார் திருவுரு (பழைய சிலைக்குப் பதிலாகப் (புதிதாகச் செய்தளிக்கப்பட்டது என்கிறது ஒரு சாசனம். [35]

மூன்று கல்வெட்டுக்கள் [36] தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்து வடக்குத் திருச்சுற்று மாளிகையில் இவன் பல இடங்களில் திருப்பணியாற்றிமை காட்டுகின்றன.

கி. பி. 1802 - ல் சபாபதி மண்டபத்தின் முன்னுள்ள 'மணிகர்ணிகா தீர்த்தம் இவனால் திருப்பணியுற்றது என்கிறது ஒரு சிலாலேகை. [37]

---

34. மோடி ஆவணத் தொகுப்பு 4 - 481 - 2.

35. A. R. E. 1924 INS No. 423.

36. ,, 1924 INS Nos. 415 -

37. ,, INS No. 419.

கி. பி. 1801 - ல் கணேசர் ஆலய கருப்பக்கிரஹ முட்டடப் புனருத்தாரணம் செய்து அர்த்த மண்டபம் மகா மண்டபம் முதலானவை அமைத்தான் மன்னன் என்கிறது ஒரு கல்லெழுத்து. [38]

தஞ்சைக்கோயிலில் சுப்பிரமணியர் ஆலயம், பெருவுடையார் கோயில் முன்னுள்ள படிக்கட்டுகள், அம்மன் கோயிலில் உள்ள தேவி பாகவத ஓவியங்கள், குறவஞ்சி மேடை முதலியன இவன் ஆற்றிய பணிகள்.

தஞ்சையில் மட்டுமின்றிப் பல்வேறிடங்களில் சரபோஜி கும்பாபிடேகங்கள் செய்வித்தான்.

1801 - ல் திருவையாறு பஞ்சநதீச்வரர்க்கும் [39] வேதாரண்யம் சிவாலயத்திற்கும், [40]

1800 - ல் கும்பகோணம் கும்பேச்வரர்க்கும் [41]

1803 - ல் தஞ்சைப் பெரியகோயில் சுப்பிரமணியர் சண்டேச்வரர்க்கும் [42]

1819 - ல் இரத்தினபுரீச்வர்க்கும் [43]

1821 - ல் கருத்தட்டான்குடி ஆனந்தவல்லி தஞ்சாபுரீச்வரர்க்கும் [44]

1826 - ல் நாகை நீலாயதாட்சிக்கும்[45] கும்பாபிடேகங்கள் நடைபெற்றன.

38. A.R.E 1924 INS. No. 420.
39. மோடி ஆவணத் தொகுதி 1 - 10.
40. ச. ம. மோ. த 24 - 12.
41. ச. ம. மோ. த. 3 - 9. 1800ல் கும்பாபிடேகம் 1801ல் மகாபிஷேகம் ச. ம. மோ. த 1 - 10.
42. ச. ம. மோ. த. 24 - 1.
43. ச. ம. மோ. த. 9 - 13.
44. ,, 6 - 9.
45. மோடி ஆவணத் தொகுதி 4 - 251; 429.

திருவிழாப் புறங்கள் :

தஞ்சைப் பெரியகோயிலிலும் ஏனைய மிகப் பல தேவாலயங்களிலும் திருவிழாக்கள் நடைபெறச் சரபோஜி பெரும் பொருட் கொடைகள் அளித்துள்ளான். இவன் தஞ்சைப் பெரியகோயிற்கு நைமித்திய வழிபாட்டுக் களித்த நன்கொடைகளை ஆவணங்கள் [46] விரிவாகக் கூறுகின்றன.

தஞ்சை மட்டுமன்றி வேறு சில இடங்களிலும் உற்சவங்கள் நடைபெற உதவினன். திருவாப்பாடியில் முகமதியர் படையெடுப்புக்குப் பின் தேர்த் திருவிழா நின்று போனது. இரண்டாம் சரபோஜி வைகாசிப் பெருவிழாவில் தேரைப் பழுது பார்த்து விழா எடுப்பிக்க 100 சக்கரங்கள் அளித்தான். [47]

ஆபரணங்கள் நல்கியமை :

சரபோஜி தான் அரியணை ஏறிய ஆண்டிலேயே மிக விலையுயர்ந்த பொன்னணிகளையும், வெள்ளிப்பாத்திரங் களையும் தஞ்சைப் பெருவுடையாருக்கு அளித்தமை சாசனம் ஆற்றும் செய்தி. [48]

இவன் தமிழகத்தின் பல்வேறு ஆலயங்கட்குச் சென்று வழிபாடாற்றியகாலங்களில் விலையுயர்ந்த ஆபரணங்களை அளித்துள்ளான். இவன் 1804 - ல் திருவையாறு பஞ்சநதீச்வரரைத் தரிசித்தபோது சோமாஸ்கந்த மூர்த்தி, அம்மனுக்குக் கல்லிழைத்த கிரீடமும் காதணிகளும் சமர்ப்பித்தான்.[49] இவன் 1816 - 17ல் மதுரை சோமசுந்தரர்க்குச் சார்த்த

---

46. ச. ம. மோ. த. 13 - 17; 24 - 19; 2 - 167.

47. ச. ம. மோ. த. 5 - 46.

48 A. R. E. year 1924 No. 422.

49. ச. ம. மோ. த 8 - 26.

'நாகாபரணம்' சமர்ப்பித்தமை ஆவணங்களாலும்[50] கல்வெட்டாலும்[51] அறியப் பெறுவது.

விமரிசையான வழிபாடுகள் :

சரபோஜி மன்னரால் மிகச் சிறப்பான வழிபாடுகள் ஆலயங்களில் நடத்தப்பட்டன. அரசனும் அரசியரும் போட்டி போட்டுக்கொண்டு அருட் பணிகள் புரிந்தனர்.

கி. பி. 1801-ல் சரபோஜி லக்ஷம் அந்தணருக்கு அமுது படைத்தான். இதேயாண்டில் இவன் காமக் கிழத்தி முக்தாபாய் தஞ்சைப் பெரியகோயிலில் லக்ஷம் தீபங்களை ஏற்றினாள்; மனைவி அகல்யாபாய் ஒரு லக்ஷம் தாமரைப் பூக்களால் பெருவுடையாரை அருச்சித்தாள்.[52] இதே போலப் பெருவுடையாருக்கு ஒரு லக்ஷம் எருக்கம்பூ; கொங்கணேச்வரர் கோயில் சனீச்வரருக்கு ஒரு லக்ஷம் செம்பரத்தம்பூ; பிரதாப வீர அனுமாருக்கு லட்சம் துளசி அருச்சனைகள் நடந்தன. 1799-ல் பெருவுடையாருக்கு லட்சம் வில்வார்ச்சனை நடந்தன.

நாள் வழிபாட்டு நிவந்தங்கள் :

திருக்கோயில்களில் நாள் வழிபாடு சிறப்புற நடைபெறுதலில் நாட்டங் கொண்ட நல்லரசனான இரண்டாம் சரபோஜி நாள் வழிபாட்டுக்காக முன்னையோர் தந்த நிவந்தங்களைச் சிறப்புறப் பரிபாலித்ததுடன் புது நிவந்தங்களும் தந்தான். 30—6—1801- நூற்றெட்டுச் சிவலிங்க வழிபாட்டுக்காக மாதம் 200 சக்கரம் வீதம் அளித்தான்; பின் 1820-ல் தொகை 400 சக்கரமாக உயர்த்தினான்.[53]

---

50. மோடி ஆவணத் தொகுதி 5-303.
51. தஞ்சை மராட்டிய ...... வாழ்க்கையும். பக். அடிக்குறிப்பு.
52. ச. ம. மோ த. 2-19.
53. மோடி ஆவணத் தொகுதி 2-165.

தான் காசியாத்திரை மேற்கொண்டபோது பூரி ஜெகந்நாத்தில் நித்ய பூஜை செய்ய ஒரு நிவந்தம் ஏற்படுத்தினான். தினந்தோறும் 12 பானைகள் சாதமும் பருப்பும் கறிகளும் சமைத்து ஜகந்நாதருக்கு நிவேதித்துக் குருடர் முடவர் முதலியோருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தான்; ஆண்டுதோறும் ரூ. 720 அனுப்ப இசைந்து முதலாண்டுக்குரியதொகையை அளித்தான்.[54] இந்நிவந்தம் இவனுடைய இறையன்பையும் மனித நேயத்தையும் காட்டுவதாகும்.

சரபோஜி கி. பி. 1815-[55] யாழ்ப்பாணர் நைவேத்யேச்வரர்க்கு நித்யபடி பூஜாக் கட்டளைக்காக 31$\frac{7}{8}$ சக்கரம் அளித்துள்ளவை கடல் கடந்த நாடுகளில் கூடச் சிவாலய வழிபாடு சிறப்புற நடைபெற வேண்டும் எனும் எண்ணமுடையவனாய் இவன் இலங்கியமையைக் காட்டுவதாகும்.

திருத்தலப் பயணங்கள் :

சமய நோக்குடன் எண்ணற்ற இடங்களுக்குச் சென்று கலை பலவும் கற்ற காவலன்; சரித்திரப் புகழ் பெற்ற சாதனையாளன். 'அங்கங்கே கலைகள் தேரும் அறிவன்' என்னும் இலக்கியத் தொடர்க்கு இலக்கணமாக இலங்கியவன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முறைமை அறிந்து இவன் மேற்கொண்ட பயணங்கள் முப்பெரும் பயணங்கள் எனலாம்.

முதலாவது சோழமண்டல சவாரி. இது 1801-ல் நிகழ்ந்தது. செலவு 4000 சக்கரம்.[56] தரிசித்த தலங்களைப் பட்டியல் இடுகின்றன சரஸ்வதி மகால் ஆவணங்கள்.[57]

54. மராட்டிய ... நிலையும் பக்
55. ச. ம. மோ. த. 46-45
56. ச. ம. மோ. த. 24-11
57 ,, 1-11; 5-5; 16-27; 24-11

இத்தலயாத்திரையின் விளைவாகத் துண்டி ராஜ பட்டரின் மகனான (துண்டி சுத) சிவ என்னும் கவிஞர் யாத்த 'சரபேந்திர தீர்த்தாவளி' எனும் மராட்டிய நூல் மலர்ந்தது.

இரண்டாவது காசி யாத்திரை. சரஸ்வதி மகால் ஆவணங்களில் உள்ள 1886 என்னும் மூட்டை சரபோஜி 1820 - 22களில் மேற்கொண்ட இப்புனிதப் பயணத்தை விளக்குகிறது. மிகப் பெரும் பொருட் செலவில் மிகப் பலருடன் பயணம் மேற்கொண்ட சரபோஜி, மங்கள கிரிக்கு வலம் புரிச் சங்களித்தமை; கயையில் 50 நாள் உறைந்தமை; அஷ்ட கயை ஆற்றியமை; பூமி ஜகந்நாதத்தில் புஷ்பாஞ்சலி செய்தமை; ஏழுகால நிவேதன தரிசனம் ஆற்றியமை; ஜாட கண்ட வைத்ய நாதம் (தேவகர்) என்னும் ஸ்தலத்தில் ஈடுபாட்டொடு வழிபாடாற்றியமை; காசியில் முறைப்படி க்ஷேத்திர உப வாஸம், தீர்த்த விதி, மணிகர்ணிகா ஸ்நாநம், தீர்த்த ஸ்ரார்த்தங்கள் புரிந்தமை முதலான செயல்கள் இம்மன்னவனின் சமய ஈடுபாட்டைக் காட்டுவன.

காசியாத்திரை முடித்து வந்த பின் இராமேச்வரம் சென்று மீண்டான் சரபோஜி. 9—5—1822, 10—5—1822 ஆகிய இரு நாட்களும் இராமேச்வரத்தில் சிறப்பு வழிபாடுகள் ஆற்றினன்.

சரபோஜி மேற்கொண்ட இப் பயணங்கள் பன்னூறு அரிய சமய நூல்கள் பாதுகாக்கப்பட - பிரதி எடுக்க வழி கோலின. யாத்திரையின் பயனாகத் 'திரிஸ்தல யாத்ரேச லாவண்ய' என்னும் லாவணி நூல் உருவாயிற்று. இந்நூலாசிரியர் சரபோஜி என்கிறார் மாடிக்[58] துண்டி சுத சிவ எழுதினன் என்று டி. எம். சோமசுந்தரம் பிள்ளை கூறுவர்.[59] இந்நூல் உட்கே கோவிந்தாசார்யார் என்பவர்

---

58. சரஸ்வதி மகால் வெளியீடு 37 முன்னுரை. (1751)
59. The great temple at Tanjore page 86

எழுதியதாகலாம் என்று பேராசிரியர் கா. ம. வேங்கட ராமையா கூறுவர்.[60]

சரபோஜி காசியில் 'கேதார் காட்' கோயில்த் திருப் பணி செய்தான்; விச்வேச்வரர்க்கு வெள்ளிக் கவசம் செய் தளித்தான்; 'மணிகர்ணிகா காட்' கட்டினன். பெரியதொரு சத்திரத்தைக்கட்டினன். காசியில் சரபோஜி கொண்டபக்தி ஈடுபாட்டின் விளைவாகத் தஞ்சை கீழ வீதியில் மணிகர்ணி கேச்வரர் கோயில் எடுப்பித்தனன்.[61]

பக்தி நூல்கள் பாடப்பட்டமை :

இரண்டாம் சரபோஜியும் இவன் அவைக்களப் புலவரும் பக்தி நூல் பல பாடினர். மன்னன் பாடிய ஆறுக்கும் மேற்பட்ட இசை நாடக நூல்களும்[62] 'கிராத் தார்ச்சுன நிம்பன' எனும் நூலும்[63] இவன் கொண்டிருந்த சமயப் பற்றினைச் சாற்றுவன. இவன் சிவக்கொழுந்து தேசிகர் முதலான புலவர் பலரை ஆதரித்தமை.[64] கோடீச் வரக் கோவை தஞ்சைப் பெருவுடையார் உலா சரபேந்திர பூபாலக் குறவஞ்சி[65] முதலான நூல்கள் முகிழ்க்கக் காரண மாயிற்று.

---

60. மராட்டிய மன்னர் ... நிலையும். பக்.
61. The great temple at Tanjore. p 86
62. தஞ்சை மராட்டிய ... பக்,
63. 1) ராதாகிருஷ்ண விலாசம்
    2) மோகினி மகேச பரிணய
    3) கணேச லீலார்ணவம்
    4) தேவேந்திர குறவஞ்சி நாடகம்
    5, கணேச விஜயம்
    6) கங்கா விச்வேச்வர பரிணயம் என்னும் ஆறு நாடக நூல் களும் 'கிராத்தார்ஜுன நிம்பன' என்னும் நூலும் இவன் யாத்தன, - The Great Temple at Tanjore - p, 77
64. IBID pages 77 - 78
65. இந்நூல் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் நடிக்கப்பட்டது.

திருமடங்களுடன் தொடர்பு :

சரபோஜி காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் ஸ்ரீ மடம் சமஸ்தானத்தைப் பெரிதும் மதித்துப் போற்றியவன். காஞ்சிப் பெரியவர் வியாச பூஜா நிகழ்ச்சிகள் நிகழ்த்த மராட்டிய மன்னர்கள் ஆண்டுதொறும் 4500 சக்கரம் வழங்குவார். இதனைச் சரபோஜி II தொடர்ந்தான். கி. பி. 1798 - ல் 4625 சக்கரம் பொன் தரப்பட்டமை ஆவணங்களில் காணப்படுகிறது.[66]

இவன் காலத்தில் காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபராக இலங்கியவர் ஜகத்குரு ஸ்ரீ மகாதேவேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளாவார்.[67] இவர் 63 ஆவது பீடாதிபர்; 1783 - 1813-ல் அருளாட்சி புரிந்தவர். 1801 -ல் கும்பகோணம் சென்று தரிசித்த சரபோஜி 500 சக்கரம் பொருட் செலவில் அதாவது சுமார் 560.89 கிராம் மதிப்புள்ள பொன்கொண்டு கனகாபிஷேகம் புரிந்தான்.[68]

இவன் காஞ்சிப் பெரியவர் பால் பெரும் பக்தி கொண்டவன். காஞ்சிப் பெரியவர் தஞ்சை அரண்மனைக்கு எழுந்தருளி அருள்பாலிக்க வேண்டும் என்று வேண்டி விண்ணப்பித்துக் கொண்டவன். கி. பி. 1808 - ல் சரபோஜி மன்னன் வேண்டிக்கொண்டு காஞ்சி மாமுனிவர்க்கு எழுதிய கடிதம்[69] காஞ்சி ஸ்ரீ மடத்துள்ளது. இரண்டு பக்கங்களாலான இம்மடல் சமஸ்கிருதத்தில் இலக்கிய வளம் கொழிக்க எழுதப்பட்ட இனிய கடிதமாகும்.

---

66. காஞ்சிப் பெரியவர்க்குக் கனகாபிஷேகங்கள் - மகாதேவன் வே. பக், 17 - 25
67. காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடம் ... வரலாறு பக். 174
68. காஞ்சி ... கனகாபிஷேகம் 38 A - 41
69. காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடம் ... அருள் வரலாறு, பக்கம் 200 - 202

காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபர்களே மராட்டிய மன்னர் மரபினரின் குருநாதர். சரபோஜி 1806 செப்டம்பர் 19ஆம் நாள் ரெசிடென்ட்க்கு எழுதியதொரு மடலில்,

எல்லீசு துரை ... ஸ்ரீ சங்கராசார்யர் கருத்துக்கேற்பச் செயல்படுவது என்று எடுத்துள்ள தீர்மானம் மிகவும் சரியானது; அவரே எம் எல்லோருக்கும் குருநாதர்; சமய சம்பந்தமான சிக்கல்கட்கு மாறுபாடுகட்கிடமின்றி விடை கூறத் தக்கவர் இவரே'' என்று கூறுகிறான். இக் கடிதம் காஞ்சிப் பெரியவரை முதன்மையும் பெருமையும் உடையராக இவன் மதித்துப் போற்றியமையைக் காட்டும்.[70]

கி. பி. 1813 - ல் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளாட்சி பீடம் ஏறினர்.[71] மன்னன் சரபோஜி மா‌பெரும் பட்டணப் பிரவேஸம் நடைபெறப் பெருமுயற்சிகள் மேற்கொண்டான்.[72] அதன்பின் கி. பி. 1821 - ல் பூஜ்யம் பெரியவாள் ஸ்ரீ சந்திரமௌளீச்வர பூஜை' ஆற்றுவதற்காகக் கும்பகோணம் மடத்தில் ஒரு கோயில் கட்டுவித்தான். இச்செய்தியைக் கும்பகோணம் மடம் கல்வெட்டும் சரஸ்வதி மகால் ஆவணமும் காட்டும்.[73]

சரபோஜி பனசை துறைசை தருமை முதலிய சைவ சித்தாந்த மடங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தான்.[74] அவற்றுள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துடனான தொடர்பு மிக நெருக்கமானது. சரபோஜி காசி சென்றபோது காசி மடத்தில் தங்கியமை; காசித்தம்பிரானிடம் ஏடுகள் தேடும் பொறுப்பும் தொகையும் தந்தமை; காசியிலும் கயையிலும் தான் ஏற்படுத்திய தர்மங்களை

70. IBID 198-199 and 200ன் அடிக் குறிப்பு
71. IBID பக். 205
72. IBID 205 - 6
73. IBID 107 - 8
74. The Great Temple at Tanjore. page 85 - 86

நிர்வகிக்கும் பொறுப்பை தம்பிரானிடம் அளித்தமை முதலியன சரபோஜி காசி மடத்தவருடன் கொண்டிருந்த நெருக்கத்தைக் காட்டும்.[75]

சரபோஜி அகோபில மடத்தோடு நெருக்கமான தொடர்பு பெற்றான். இது புதிய தொடர்பு. 1801 - முதல் வியாச பூஜைக்கு ஆண்டு தோறும் அகோபில மடத்துக்கு நன்கொடைகள் அளித்தமை 1801, 1831ஆம் ஆண்டு ஆவணங்கள் காட்டுவது.[76] அகோபில ஜீயர் 1811இலும் 1829இலும் தஞ்சை அரண்மனைக்கு எழுந்தருளினர். மன்னன் கனகாபிடேகம், பாதுகா பூஜை, அன்னம் பாலிப்பு இவற்றை 228 சக்கரம் செலவில் செய்தான்.[77]

4—5—1821 - ல் சரபோஜி கயாவில் அகோபில ஜீயர் சுவாமிகளைத் தரிசித்தான்; மந்த்ராக்ஷதை பெற்றுத் தன் முடி மீது தரித்தான்.[78]

முடிப்புரை :

இதுகாறும் கூறியவற்றால்

1) சரபோஜி ஸ்வார்ட்ஷ் பாதிரியாரை மதித்தனன்: எனினும் ஹிந்து மத உணர்வு சார்ந்தவனாகவே இலங்கினான்.

2) கி. பி. 1801 முதலாகவே ஹிந்து சமயப் பணிகள் புரிந்தான்;

---

75. விரிவான விவரங்களுக்கு தஞ்சை மராட்டிய மன்னரும் ...... நிலையும். பக்கம் 422 முதல் 431 வரை காண்க.

76. ச. ம. மோ. த. 2 - 32; 18 - 116

77 ,, ,, 4 - 14

78 ச. ம. மோ. த. 5 - 75

3. கி. பி. 1822க்குப் பின் வேத வைதிக சமயப் பணிகளில் தீவிரம் காட்டலானான்.

4) அரசனின் சமய ஈடுபாடும், கிறித்துவ சமயச் சான்றோரான வேதநாயக சாஸ்திரியாரோடு கருத்து மாறுபாடு தோன்ற வழி கோலியது; இவ்வேறுபாடு 1828 களில் அதி தீவிரமுற்றது.

5) மன்னன் சரபோஜி கிறித்துவ மத மாற்றங்களை வெறுத்தவனாதல் கூடுமாயினும் கிறித்துவ சமயத்தினரையும் முகமதிய சமயத்தினரையும் மதித்து 1822க்குப்பின்னரும் நிலக்கொடைகள் நல்கியுள்ளான். என்ற செய்திகள் பெறப்படும். மொத்தத்தில் அதி தீவிர கிறித்துவ வாதத்தை ஆதரிக்காமல் பிற மதங்களை மதித்து ஹிந்து சமயம் புரந்த மன்னன் இரண்டாம் சரபோஜி ஆவன் என்ற உண்மை பெறப்படும்.

சரபோஜி 212-ஆவது பிறந்தநாள் விழா (24-9-89) கருத்தரங்கக் கட்டுரை.

சரபோஜி மன்னரும், மராத்தி இலக்கியமும்

T. R. BHEEMA RAO,
Marathi Pandit

தஞ்சை. பெருமை வாய்ந்த மூன்று பேரரசுகளால் ஆளப்பட்ட சிறப்புடையது. அவை சோழவம்சம், நாயக்க வம்சம், போசலவம்ச மகாராஷ்டிரர்கள்.

இவர்கள் முறையே நாட்டைச் செவ்வனே ஆட்சி புரிந்து மக்கள் நல்வாழ்விலேயே தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். இச்செய்திகளை வரலாறு மெய்ப்பிக் கிறது.

நாட்டை ஆண்ட அரசர்கள் கலைவளர்ச்சியில் ஆர்வம் கொண்டு விளங்கினர். தஞ்சையை அரசாண்ட இரண்டா வது மகாராஷ்டிர அரசரான சகஜி முதல் கடைசி அரசர் சிவாஜி ராசா வரையில் கலைவளர்ச்சியில் ஆர்வம்கொண்டு தங்களை அதில் ஈடுபடுத்திக்கொண்டனர். அவ்வகையில் இரண்டாம் சரபோசி மன்னர் தம் நேரம் முழுவதையும் கலைக்காகவே செலவழித்தார். மிகப்பழமையான சரசுவதி பண்டாரகத்தையும் பாதுகாத்தார்.

மன்னர் சரபோசி, மன்னராக நியமிக்கப்பட்டபோது அரசு நிர்வாகம் யாவும் அன்னிய நாட்டவர்களான ஆங்கி லேயர் வசம் சிக்கி இருந்தது. மன்னர் என்ற பெயரில் சரபோசி அரசராக இருந்தார். அக்காலத்தில் இருந்த

சூழ்நிலைக்குத் தக்கவாறு ஆங்கிலேயர் சரபோசி மன்னரு டன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு தஞ்சையின் அரசுரிமை யாவற்றையும் பெற்றனர். இதனால் நாட்டு நிர்வாகப் பொறுப்பிலிருந்து சரபோசி மன்னர் விடுவிக்கப் பட்டார்.

இச்சந்தர்ப்பத்தை, சரபோசி மன்னர் நல்லவிதமாகப் பயன்படுத்திக்கொண்டார். இவர் சிறுவயது முதற் கொண்டே டேனிஷ்பாதிரி ஸ்வாட்ஸ் அவர்களிடம் ஆங்கி லம் கற்றதனால், பொது அறிவு வளர்ந்தது. சமஸ்கிருதம், மராத்தி, தமிழ் யாவற்றையும் தக்க புலவர்களிடம் பயின்று தேர்ச்சிபெற்றார். இவர் பல மொழிகளைப் பயின்றத னால் பல அரிய விஷயங்கள் தெரிந்துகொள்ள முடிந்தது! இவருக்குப் பிற்காலத்தில் பேரும் புகழும் கிடைத்தன.

ஆட்சிப் பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட சரபோஜி தாம் கற்ற பல மொழிப் புலமையை உபயோகித்து பல புலவர்களை தம்வசம் வைத்துக் கொண்டு, அரிய பல இலக்கியங்கள் இயற்றக் காரணமாக விளங்கினார். மன்னர் சரபோஜியும் சங்கீதம், நாடகம், நாட்டியம், சித்திரம் போன்ற கலைகளில் ஆர்வம்கொண்டு இத்துறையில் பல பணிகளைச் செய்து தம் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.

சரபோசி மன்னர் ஆதரவில், சமஸ்கிருதம், மராத்தி மற்றும் தமிழ் ஆகிய மொழிப் புலவர்கள் இயல், இசை நாடகம் ஆகிய மூன்று துறைகளில் பல நூல்களை இயற்றி னார்கள். அந்நூல்களில் சரபோசி மன்னரின் குணாதிசயங் களைப் புகழ்ந்து பாடியும், தெய்வபக்தி, தர்மசிந்தனை, மொழிப்பற்று, கலைத்திறமைப் புலவர்களை ஆதரித்துப் பொன்னும், பொருளும் கொடுத்து மொழி வித்யாசம் பார்க்காமல் ஆதரித்த தன்மை இவை யாவற்றையும் கூறி யிருக்கின்றனர். புலவர்கள் தனியாகப் பல நூல்களை எழுதியும், சரபோஜி மன்னர் பெயரில் பல நூல்களை

எழுதியும் அரங்கேற்றியும் இருக்கிறார்கள். மன்னர் சரபோசியின் புகழ்ச்சியில் மகிழ்ந்த புலவர்கள் "மன்னரின் நிழலில் வாழும் நாங்கள் செஞ்சோற்றுக் கடனைச் செலுத்துவதற்காக இந்நூல்களைச் சரபோசி மன்னர் வேண்டுகோளின்படி இயற்றினோம்" என்று கூறியுள்ளனர்.

மன்னர் சரபோசி புலவர்களுக்குக் கொடுத்துவந்த ஆதரவினாலும், கொடையாலும், சமஸ்கிருதம், மராத்தி, தமிழ் ஆகிய மொழியில் இலக்கியமும், வைத்திய சாஸ்திரமும், சித்திரக்கலையும் வளர்ந்தன.

இப்படைப்புக்கள் யாவும் இன்னும் புகழ்பெற்ற சரசுவதி மகால் நூல் நிலையத்தில்' இருந்து மன்னர் சரபோசியின் புகழை எடுத்துக் கூறுகின்றன. இந்நூல்கள் இருக்கும் வரையில் மன்னரின் புகழ் ஓங்கி நிற்கும். பெருமை வாய்ந்த மன்னர் சரபோசியின் காலத்திய புலவர்களைப் பற்றியும், மராத்தி நூல்களைப்பற்றியும் இங்கே காண்போம்.

மன்னர் சரபோஜியும் மராட்டிப் புலவர்களும்

இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் வாழ்ந்தவர்கள்

விருபாட்சகவி, ரங்கநாதகவி, கோவிந்தகவி, உட்கே கோவிந்தாச்சாரியார், துண்டிசுதசிவா, ராமசகா முதலியவர்கள்.

இப்புலவர்கள் தம் தாய்மொழியான மராத்தி மொழியில் பல இலக்கியங்களைப் படைத்தனர். இவர்களைத் தவிர கிருஷ்ண சாஸ்திரி, வெங்கடேச சாஸ்திரி, நரசிம்ம சாஸ்திரி, அப்பு தீட்சிதர், கிருஷ்ணசுவாமி சக்கரவர்த்தி, தம்மாசார், மன்னார் கிருஷ்ணாச்சார், ஸ்ரீனிவாசகவி சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதர் மராட்டியப் புலவர் ஹீருசாமி காட்கேயும், சமஸ்கிருதம்,

மராத்தி ஆகிய மொழிகளில் புராண வரலாறு ஆதாரங்களைக்கொண்டு பல இலக்கியங்களைப் படைத்தார்கள். தங்களை ஆதரித்த சரபோசி மன்னனைப் புகழ்ந்துபாடியும் பெருமையுறச்செய்து உள்ளார்கள். இப்புலவர்களைப் பற்றியும் இவர்கள் இயற்றிய இலக்கியப் படைப்புக்களைப் பற்றியும் விவரமாகக் கீழே காண்போம்.

விருபாட்சகவி :

விருபாட்சகவி சரபோஜி மன்னருக்கு மிகவும் வேண்டியவராக இருந்தும், சரஸ்வதி பண்டாரகத்தில் உள்ள சமஸ்கிருத மொழியில் காணும் பல புராண இதிகாச நூல்களின் ஆதாரத்தைக் கொண்டும் மராத்தி மொழியில் பல நூல்களை மொழி பெயர்த்துள்ளார்.

பவிஷ்யோத்திச புராணத்தை ஆதாரமாகக் கொண்டு அக்னீஸ்வர மகாத்மியம், ஸ்காந்தம் சனத்குமார சம்ஹிதா சிவரகஸ்ய ஸ்தோத்திர கண்டத்தின் ஆதாரத்தைக்கொண்டு ஆதிகைலாச மகாத்மியத்'தையும். பத்மபுராணத்தின் ஆதாரத்தைக் கொண்டு 'மகாமகாத்மியம்'; பிர்மகைவர்த்த புராணத்தின் ஆதாரத்தைக் கொண்டு திருவையாற்றில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் வரலாற்றையும், காவேரி நதியின் ஐந்து பிரிவுகளைப்பற்றி விரித்து 'பஞ்சநத மகாத்மியம்', என்ற தலைப்பில் ஒரு நூலும் எழுதியிருக்கிறார். இவ்வாசிரியரின் இப்பஞ்சநத மகாத்மியம் நூல் நமக்கு முழுவதுமாகக் கிடைக்கவில்லை. அது ஒரு பெருங்குறையே. இவருடைய மற்றோர் அரிய படைப்பைப் பற்றி நாம் மிகவும் பெருமை கொள்ளத் தக்கதாக இருக்கிறது. அது யாதெனில் தமிழ் கூறும் நல்லுலகம், சிறப்புடன் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றுப் பெருமைகளைக் கூறும் 'சிவபக்த மகாத்மியம்', என்னும் தலைப்பில் வடமொழியில் ஹரதாசர் என்பவர் இயற்றியதை ஆதாரமாகக் கொண்டு, 'பக்தவிலாசம்' என்ற தலைப்பில் மராத்தி மொழியில் ஒரு நூல் இயற்றி இருக்கிறார்.

இப்புலவர் வடமொழியில் காணும் பல புராண வரலாற்றினைப் பாமர மொழியினரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் மராத்தி மொழியில் மொழி பெயர்த்து எழுதினார் அது போற்றத்தகுந்ததே. இவையாவும் தெய்வத்தன்மை பொருந்திய வரலாறுகள் ஆகும். அதைவிடப் பெருமைப் படக்கூடியது என்று புலவர் நினைத்து, தமிழ் நாட்டில் தெய்வ பக்தியும் சமயநெறியும் கொண்டு பண்புடன் வாழ்ந்து, சைவத்தை வளர்த்த பெரியோர்களின் வரலாற்றினையும் தம் தாய்மொழியினர் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் மராத்தி மொழியில் மொழிபெயர்த்து எழுதியிருக்கிறார். இதனால் மொழி வேறுபாடு கொள்ளாமல் புலவர் இலக்கியப்பணி செய்தது நமக்குப் புலனாகிறது.

விருபாட்ச கவி தாம் இயற்றிய மேலே கூறிய நூல்களைச் சரபோசி மன்னரின் வேண்டுகோளின்படியே வடமொழியிலிருந்து மராத்தி மொழியில் மொழி பெயர்த்ததாகத் தம் நூலில் கூறுகிறார். மேலும் சரபோசி மன்னரின் தெய்வ சிந்தனையையும் தயாள குணத்தையும், அவர் புலவர்களிடம் கொண்டுள்ள மதிப்பினையும், தானதருமங்களையும் புகழ்ந்து கூறுகிறார். மேலும் சரபோசி மன்னர் காசி முதலான புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று வந்த நிகழ்ச்சிகளையும் புகழ்ந்து கூறுகிறார். மேலும் மன்னர் சரபோசியின் "நவவித்யா கலாநிதிசாலா" என்ற கல்விக் கூடத்தினைக் கூறிப் புகழ்கிறார். இவ்விதமாக மேலே கூறிய நூல்களைப் புலவர் கி. பி. 1826 முதல் 1828 முடிய ஆண்டுகளில் இயற்றியதாகத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ரங்கநாதகவி

ரங்கநாதகவி சரசுவதி பண்டாரகத்தில் காணும் புராண ஆதாரங்களைக்கொண்டு மராத்தி மொழியில்

நூல்களை மொழி பெயர்த்துள்ளார். அவை 'கார்திக மகாத்மியம்', 'துலா மகாத்மியம்' முதலியவையாகும்.

இவ்வாசிரியர் இவைகளைத் தவிர நாடக இலக்கியத்திற்கு அரும்பணி புரிந்திருக்கிறார். மராத்தி மொழியில் முதன் முதலில் நாடக இலக்கியம் தஞ்சை மகாராஷ்டிராகள் ஆட்சியில்தான் படைக்கப்பெற்றன. இதை மிகத் தெளிவாக மகாராஷ்டிர தேச தற்கால சரித்திர நூல் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும் அப்பெருமையை முழுவதும் பெறக்கூடிய நாடக இலக்கிய கர்த்தா, தஞ்சையை அரசாண்ட முதல் மகாராஷ்டிர மன்னர் ஏகோஜியின் மூத்த மைந்தர் சகஜி மன்னரையே சாரும். சகஜி மன்னர் நாடக இலக்கியத்திற்கு நல்ல சேவை செய்து. சமஸ்கிருதம், மராத்தி, தெலுங்கு தமிழ் மற்றும் ஹிந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புராண வரலாறுகளின் ஆதாரத்தைக்கொண்டு பல அரிய தலைப்புக்களில் நாடகங்களை இயற்றியிருக்கிறார். அவை சங்கீத சாகித்யங்களைக்கொண்டு முதன்மையாகத் திகழ்கின்றன.

சகஜியைப் பின்பற்றி அவருக்குப்பின் தஞ்சையை அரசாண்ட பிரதாபசிம்ம ராஜாவும் பல நாடக நூல்களை இயற்றினார்.

இவர்களை முன்னோர்களாகக்கொண்டு இரண்டாவது சரபோஜி மன்னர் பெயரில் சில நாடக நூல்கள் காணப்படுகின்றன. ஆனால் அவை யாவும் மேலே கூறிய ரங்கநாதக் கவியின் இலக்கியப் படைப்புக்களேயாகும்.

ரங்கநாதகவி இயற்றிய கணேசவிஜயம், கணேசலீலார்ணவம் ஆகிய நாடகங்களில் அவற்றைத் தாம் இயற்றியதாகவே அந்நாடகங்களில் கூறுகிறார். இவை தவிர சரபோசி மன்னர் பெயரில் காணும் மற்ற நாடகங்களான சிவராத்திரி உபாக்கியானம், கங்காவிஸ்வேஸ்வர பரிணயம், மோகினி மகேச பரிணயம், ராதாகிருஷ்ண விலாசம்

முதலிய நாடகங்களின் அமைப்பை நோக்குங்கால் மேலே கூறிய ரெங்கநாத கவியின் படைப்புக்களை ஒத்துக் காணப் படுகின்றன. ஆகையால் இந்த நாடகங்களும் ரங்கநாத கவியே இயற்றி சரபோசி மன்னர் பெயரில் பரந்தமனத்துடன் அங்கிதம் செய்திருக்கிறார் என்பது கண்கூடு. மேலும் ரங்கநாதர் கவி தம் நாடகங்களில் சரபோசி மன்னரை ஆசீர் வதித்துப் புகழ்ந்து கூறுகிறார்.

இவ்வாறாக ரங்கநாதகவி இயற்றிய நாடகங்கள் நவ ராத்திரி விழாவிலும், விநாயகசதுர்த்தி உற்சவ விழாவிலும் அரசர் அரண்மனை அரங்கிலும், பிருகதீஸ்வரர் கோவிலில் வசந்த உற்சவகாலத்திலும் நடத்தியிருப்பதாக நாடகக் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது.

இந்நாடகங்கள் மராத்தி மொழியில் அமைந்து இருந்த போதிலும், அக்காலத்தில் தஞ்சையில் வாழ்ந்த மக்கள் இந்நாடகங்கள் உயர்ந்த சங்கீத அமைப்பிலும் புராண வரலாற்றைப் பின்பற்றியும் இருப்பதை உணர்ந்து நல்ல விதமாக ஆதரித்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

ஆசிரியரின் சிவராத்திரி உபாக்கியானம் கங்காவிஸ் வேஸ்வர பரிணயம், மோகினி மகேச பரிணயம் போன்ற நாடகங்களில் சரபோசி மன்னரை இரண்டாம் துளஜா தத்து எடுத்துக்கொண்ட விவரத்தினையும், அவர் வம்ச பரம்பரை விவரத்தையும் குறிப்பிட்டிருக்கிறார். அத்துடன் சரபோசி மன்னரின் நிழலில் வாழும் நான் இந்த நாடகத் தினை இயற்றினேன் என்றும் குறிப்பிடுகிறார். இவை யாவற்றையும் நோக்குங்கால் சரபோசி மன்னர் காலத்தில் இயற்றிய நாடகங்கள் யாவற்றிற்கும் ரங்கநாதகவியே ஆசிரியர் என்று நமக்கு நன்றாக விளங்குகிறது. இதைத் தவிர தேவேந்திர குறவஞ்சி என்னும் நாடகம் உலகத்தில் உள்ள பல கண்டங்களையும் அவற்றில் உள்ள தேசங்களை யும் அத்தேசங்களில் உள்ள முக்கிய நகரங்கள், மலைகள், ஆறுகள் முதலிய பெயர்களையும் வருணித்து உலக

பூகோள வரலாற்றை அறியும் வண்ணம் அமைத்து அதை ஒரு குறப்பெண் வாயிலாகப் பாடல் மூலமாக உணர்த்துவதாக இவ்வாசிரியர் இந்நாடகத்தினை இயற்றியிருக்கிறார். இந்த விதத்தில் மராத்திய போசலகுல மன்னர்கள் ஆதரவினால் இதுபோன்ற நல்ல இலக்கியப் படைப்புகள் கவிஞர்களால் படைக்கப்பட்டன.

மேலே கூறிய நாடகங்களைத் தவிரத் தமிழில் நாயன்மார்களின் சரித்திரத்தில் புகழுடன் காணும் திருநீலகண்ட நாயனார், திரு கண்ணப்ப நாயனார் இவர்கள் வரலாற்றையும் மராத்தி மொழியில் ஹரிகதாகாலட்சேபம் செய்யும் வடிவத்தில் ஸ்லோகம், ஆர்யா, சாகி, திண்டி, பதம், லாவணி போன்ற மராத்திமொழி சந்தத்தில் அமைத்து இயற்றப்பட்டிருக்கிறது. இவை யாவும் சரபோசி மன்னர் பெயரிலேயே நம் நூல் நிலையத்தில் காணப்படுகின்றன. இந்நூலின் தொடக்கத்திலும் முடிவிலும் மாத்திரம் சரபோசி மன்னர் பெயர் குறிப்பிடப்படுகிறது. ஆனால் கதையில் காணும் பாடல்களிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ சரபோசி மன்னர் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆகையால் இந் நூலாசிரியர் கதையை அமைத்துத் தொடக்கத்திலும் முடிவிலும் அரசரைப் புகழ்ந்து பாடி இச் சங்கீத நூல்களை இயற்றி இருக்கிறார் என்று கருத வேண்டியதாக இருக்கிறது.

மேலேகூறிய இருகதைகளைத் தவிர ஸ்காந்த புராணத்தில் காணும் கிராதார்ஜுனியம் உமாமகேஸ்வரவிரதம் பஞ்சாட்சரி, விபூதி சிவராத்திரி மகிமையை வருணிக்கும் கதையையும் சனிப்பிரதோஷம், பஞ்சப்பிரதோஷம் போன்ற விரதத்தின் மகிமையைக் கூறும் கதையும் இவரால் இயற்றப்பட்டிருக்கிறது.

இவ்வாறாக ரங்கநாதகவி சரபோஜி மன்னரின் ஆதரவிலிருந்து மன்னர் மனமறிந்து மேலே கூறிய அரிய புராண வரலாற்று நூல்களை இயற்றிப் பரந்த மனத்துடன்

சரபோஜி மன்னருக்கு அங்கிதம் செய்து மதிப்புடன் வாழ்ந்து தன் தாய் மொழியான மராத்தி மொழிக்கு அரிய இலக்கியப்பணி செய்திருக்கிறார் என்று அறிய முடிகிறது.

கோவிந்தகவி

கோவிந்தக்கவி சமஸ்கிருதத்தில் ஆக்நேய புராணத்தின் ஆதாரத்துடன் 'தனுர்மாத மகாத்மியம் ஸ்கந்த புராணத்தின் ஆதாரத்துடன் 'வைகாச மகாத்மியம்' பிர்மகைவர்த்த புராணத்தின் ஆதாரத்தைக்கொண்டு 'பஞ்சநத மகாத்மியம்' என்ற திருவையாற்று ஸ்தலபுராண நூலும் மொழி பெயர்த்திருக்கிறார். இந்த 'பஞ்சநத மகாத்மியம்' நூல் முழுவதுமாக நமக்குக் கிடைக்கவில்லை. இப்புலவர் தம் நூல்களில் மன்னர் சரபோசியை, 'சிறந்த சிவபக்தன், தயாள குணமுள்ளவன், தர்ம சிந்தனை கொண்டவன் புலவர்களை அன்புடன் ஆதரிக்கும் தன்மையுடையவன்' என்று புகழ்ந்து கூறியிருக்கிறார்.

உட்கே கோவிந்தாச்சாரியார்

இப்புலவர் சரபோசி மன்னருக்கு மிகவும் அன்புடையவராக இருந்து 'சிவலீலா, ஹரிலீலா', 'ராம-உமா சம்வாதம்' என்ற தலைப்புகளில் ஹரிகதை செய்யும் வடிவத்தில் (நிருபணம்) அமைத்துச் சிறு நூலாக இயற்றி இருக்கிறார். இவர் சோதிட சாஸ்திரத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக இருந்திருக்கிறார்.

'துவாதசபாவ' என்ற தலைப்பில் பன்னிரண்டு ராசிகளின் தன்மைகளை விவரித்துச் சிறு நூலாக அமைத்து மங்களாஷ்டகம் பாடும் பாணியில் இயற்றி இருக்கிறார். இதைத் தவிர சரபோசி மன்னரைப் புகழ்ந்து பல பாடல்களும், மங்களாஷ்டகம் சுலோகங்களும் இயற்றி இருக்கிறார்.

துண்டி சுத சிவா

சிவா, சரபோசி மன்னர் தமிழ் நாட்டில் ஸ்தல யாத்திரையாகச் சென்றுவந்த விவரத்தினையும், வடநாட்

டில் காசி முதலான புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வந்த விவரத்தினையும் ஒரு யாத்திரை நூலாக வருணித்து இயற்றியிருக்கிறார். இந்நூலில் சரபோசி மன்னர் கோவிலுக்குப் புண்ணிய ஸ்தலத்திற்கும் சென்ற விபரமும் அவ்விடங்களில் செய்த தான தர்மங்கள், பூசைகள் மற்றும் அப்புண்ணிய ஸ்தலங்களின் புராண வரலாறு விபரத்தினையும் சிறு குறிப்புகளுடன் தெரிவித்து மிகவும் நல்லவிதமாக இந்நூலை இயற்றி இருக்கிறார். இந்நூலின் மூலமாக ஸ்தலங்களின் வரலாறுகளைத் தெரிந்துகொள்ள மிகவும் பயன் உள்ளதாக இருக்கிறது.

'தீர்த்த யாத்திரை லாவணி' என்ற தலைப்பில் ஒரு நூல் காணப்படுகிறது. இந்நூல் சரபோசியின் ஸ்தல யாத்திரையைக் குறிக்கும்படி இருக்கிறது. இந்நூல் சரபோசிமன்னர் இயற்றியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்நூலின் நடையும் மொழியில் காணும் தன்மையும் பார்த்தால் 'சரபேந்திர தீர்த்தாவளி' இயற்றிய துண்டி சுதசிவாவே இயற்றி மன்னர் பெயரில் அங்கிதம் செய்து இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. அதற்குக் காரணம் யாதெனில் இந்நூலில் ஒவ்வொரு லாவணியின் அங்கத்தின் முடிவிலும் 'சரபோசி சொல்கிறார், மன்னருக்கு இப்புண்ணிய ஸ்தலத்தில் ஸ்நானம்செய்ய, 'தெய்வத்தினைத் தரிசனம் செய்ய பாக்கியம் கிடைத்தது' போன்ற வாக்கியங்களால் முடிவடைவதால் இந்த யாத்திரை லாவணி நூல் மன்னர் இயற்றியதாகக் கொள்ள முடியாமல் இருக்கிறது மன்னரே இயற்றி இருந்தால் தம் பெயரைச் சந்தேகமறக் குறிப்பிட்டிருப்பார். மேலும் முதலில் கூறிய 'சரபேந்திர தீர்த்தாவளி' என்ற நூல் 'சரபோசி மன்னர் யாத்திரைசெய்த விவரத்தினைக் கேட்டு நான் இயற்றினேன், நான் மன்னருடன் ஸ்தல யாத்திரை செய்யவில்லை' என்றும் குறிப்பிட்டுள்ளார். இவைகளை நோக்குங்கால் 'தீர்த்தயாத்திரை லாவணி' நூலும் திருதுண்டிசதாசிவனே இயற்றியிருக்கிறார் என்று நமக்குச் சந்தேகமறத் தெரிகிறது.

சிவா இதைத்தவிர சரபோசி மன்னர் தஞ்சை பிரகதீசுவரர் கோவிலில் செய்த திருப்பணிகள் சிவலிங்க பிரதிஷ்டை, ஸ்ரீரங்கம், திருவானைக்கோயில் முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வந்த விவரத்துடன் 'சரபேந்திர சிவதர்ம' என்ற நூலை இயற்றியிருக்கிறார்.

இவ்வாசிரியருடைய அரிய படைப்பு நாட்டிய அபிநயத்திற்கான சங்கீத சாஹித்யங்கள் ஆகும். இவை சமஸ்கிருதத்தில் காணும் அபிநய தர்ப்பணம், நிருத்யாத்யாய போன்ற நூல்களிலிருந்து ஆதாரத்துடன் இந்த நாட்டியப் பிரபந்தங்களை மராத்தி மொழியில் இயற்றியிருக்கிறார். இச்சாஹித்யங்கள், தமிழ் நாட்டில் மிகவும் புகழுடன் விளங்கும் கர்நாடக சாஹித்யங்களை ஒத்து நல்ல முறையில் அமைக்கப்பட்டிருப்பதால், மகாராஷ்டிரர்கள் நாட்டிய அபிநயத்தில் ஆர்வம் கொண்டு செய்ய நினைப்பவர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

ராமசகா

ராமசகா என்னும் புலவர் சரபோசி மன்னரின் ஒரே ஆண் வாரிசான திரு சிவாசி ராசாவுடையதும் மற்ற ஐந்து பெண்களின் திருமண வைபவத்தையும் வருணித்து 'மங்களாஷ்டகம்', என்ற ஸ்லோக வடிவத்தில் அமைத்து ஒரு நூல் மிகவும் அருமையாக இயற்றி இருக்கிறார். இதில் மாப்பிள்ளை வீட்டாரின் குலம், கோத்திரம் பெண் வீட்டாரின் குலம், கோத்திரம் மகாராஷ்டிர மன்னர்களின் திருமணச் சடங்குகளின் விவரங்கள், அதைச் செய்யும் விதம், மணமக்களின் ஆடை அணிகலங்களின் வருணனை, திருமண மண்டபத்தின் ஜோடனைகள் பற்றிய வருணனை, திருமணத்திற்கு வருகை தந்த பிரமுகர்கள் பற்றியதும், அரச குடும்பத்தினரைப் பற்றியதும் வருணனை, வைபவத்தில் முழங்கிய மங்கள வாத்யங்களின் வருணனை முதலியவைகளை நேர்த்தியாக விவரித்து இப் பாடல்களில் கூறியுள்ளார்.

'மங்களாஷ்டகம்' என்பது இந்துக்களின் திருமண வைபவத்தின் சமயத்தில் ஒரு முக்கியமான கட்டத்தில் சொல்லப்படும் ஸ்லோகம் ஆகும். இது மகாராஷ்டிரர் களின் திருமண வைபவத்தில் முதன்மையாகக் கொள்ளப் படுகிறது. இக்காலத்திலும் இப் பழமையான சம்பிரதாய முறை விட்டுப் போகாமல் மகாராஷ்டிர குடும்பத்தின் திருமண சமயத்தில் இந்த 'மங்களாஷ்டக' ஸ்லோகம் பாடப்பட்டு வருகிறது.

திருமணச் சடங்கின்போது ஒரு பக்கத்தில் மணப் பெண்ணையும் ஒரு பக்கத்தில் மணமகனையும் உட்கார வைத்து இருவருக்கும் நடுவில் ஒரு மங்களப்பட்டு வஸ்திரத் தைப் பிடித்துக்கொண்டு இருவர் நிற்க, வைதீகர்கள் விநாயகர் ஸ்துதி முதற்கொண்டு ஆண்டவனின் பல லீலா விநோதங்கள், குணாதிசயங்கள் முதலியவற்றை வருணித்து மங்கள அஷ்டக ஸ்லோகம் பாடுவார்கள். இவர்களைப் போலவே பல தேர்ச்சி பெற்ற மகாராஷ்டிர சங்கீத விற் பன்னர்கள், நடைபெறும் திருமண வைபவத்தில் காணும் விழாக் கோலத்தையும், சாப்பாட்டு வகைகளையும், நகர வருணனை, ஸ்தல வருணனை, கோயில்கள் வருணனை நதி வருணனையும், சங்கீத ராகங்கள் அமைப்பு புஷ்பங்களின் பெயர்கள் போன்றவைகளையும், இம் மகாராஷ்டிரர்களின் பழமையான சம்பிரதாய முறையை அனுசரித்து, திரு ராம சகா புலவர் சரபோஜி மன்னரின் மக்களின் திருமண வைபவத்தை வருணித்துப் பாடி இருக்கிறார். இப்பாடல் களின் மூலமாக நாம் சரபோஜி மன்னர் காலத்திய திருமண வைபவ முறைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

சரபோஜி மன்னரைப் புகழ்ந்து பாடிய புலவர்கள்

திரு கிருஷ்ண சாஸ்திரி, சக்கரவர்த்தி, தர்மாச்சார், நரசிம்ம சாஸ்திரி மன்னார் கிருஷ்ணாச்சார், சங்கீத மும் மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீக்ஷிதர், வெங்கடேச சாஸ்திரி, ஸ்ரீனிவாச கவி, சுப்பு தீக்ஷிதர், ரங்கநாத கவி,

முதலிய புலவர்கள், சரபோஜி மன்னரின் குண நலன்கள், தர்ம சிந்தனை, தெய்வபக்தி, புலவர்களை ஆதரிக்கும் தன்மை, மொழிப்பற்று முதலியவைகளைப் புகழ்ந்து, சமஸ்கிருதம், மராத்தி ஆகிய மொழிகளில் பல பாடல்கள் பாடி இருக்கிறார்கள் இவர்களைத் தவிர மராட்டிய புலவர்கள் கவிராஜோபா, உட்கே கோவிந்தாச்சார், ஹீருசாமி காட்கே, போன்றவர்களும் சரபோஜி மன்னரைப் புகழ்ந்து பாடி இருக்கிறார்கள்.

இப்புலவர்களின் பாடல்களைப் பார்க்கும்போது மன்னர் சரபோஜி புலவர்களை நல்ல விதமாக மதித்து ஆதரித்து வந்திருக்கிறார் எனத்தெரிகிறது.

சரபோஜி மன்னர் காலமும், வைத்திய நூல்களும்

சரபேந்திர வைத்ய ரத்னாவளி வெளியீட்டில், பதிப்பாசிரியர் திரு கிருஷ்ணசாமி மாடிக்ராவ் அவர்கள் கூறுவதாவது :

சரபோஜி மன்னர், அரண்மனையில் 'தன்வந்தரி மகால்' ஏற்படுத்தி, வைத்திய சம்பந்தமான ஆயுர்வேதம், சித்தம், யூனானி நூல்களைப் பண்டிதர்களைக்கொண்டு ஆய்வுசெய்தார். பழமையான நூல்களில் உள்ள விஷயங்களைத் தொகுத்து அநுபோக வைத்திய முறைக்கு ஒரு புதிய தொகுப்பு தயாரித்தார்.

இம்மன்னர் காலத்தில் வைத்திய நூல்கள் ஆய்வுக்கு, பலப் புலவர்கள் இருந்தார்கள்.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், சுப்பராயக்கவி, வேலாயுத முதலியார் ஆகியோர் ஆவர். வேலாயுத முதலியாரின் வைத்திய முறைத் தொகுப்புப்பற்றி திரு. மாடிக்ராவ் கூறுகிறார்.

முன்னுரை பக்கம் 7ல் வைத்திய நூல் ஆய்வுக்கும் புதிய படைப்புக்கும் உதவியவர்கள் திருவேங்கடம்பிள்ளை,

பிள்ளைப் பெருமாள் வைத்தியர், வெங்கடாஜலப்பிள்ளை, ரங்கநாத நாயக், துபாஷ் கிருஷ்ணப்ப நாயக், அய்யா கண்ணுபிள்ளை, பஞ்சநதப்பிள்ளை முதலியோர் குறிப்பிடப்படுகின்றனர்.

நூலகத்தில் உள்ள வடமொழி, தமிழ், தெலுங்கு மொழியில் வைத்திய சாஸ்திர நூல்களிலிருந்து சரபோஜி மன்னரால் தொகுக்கப்பெற்ற வைத்தியச் செய்திகள் பற்றி திரு மாடிக்ரால் விரிவாக எழுதியுள்ளார்.

ஷஹாஜி மன்னர், முதல் சரபோஜி மன்னர் வரையிலான காலத்திலும் தமிழ் வைத்தியச் சுவடிகள் தொகுக்கப் பெற்றன இவ்விவரம் திரு K. R. சுப்பிரமணியம் தமது 'மராட்டியர் வரலாறு' நூலில் குறிப்பிட்டுள்ளார். அவை இரண்டாம் சரபோஜி மன்னர் படைப்புக்குப் பயன் பட்டன. பிரதாபசிம்மன் எழுதிய மதன சஞ்சீவனம் குறிப்பிடத்தக்க நூல் ஆகும்.

சரபோஜி மன்னரும் கஜ சாஸ்திரமும் :

சரபோஜி மன்னர் கஜ சாஸ்திரம் பற்றி மிகுந்த ஊக்கம் கொண்டவராக இருந்தார். பழமையாக சரஸ்வதி நூலகத்தில் பாதுகாக்கப்பெற்ற உயர்ந்த ஓவியக் கைப்பிரதிகளில் கஜ சாஸ்திரம் தொடர்பான படங்களும், படங்களுக்குடைய பழமையான ஸ்லோக விளக்கங்களும் உள்ளவற்றைப் பின்பற்றிப் புதிய ஓவியக் கைப்பிரதிகளும் வரையச் செய்துள்ளார்.

கஜ சாஸ்திர விளக்கம், ரக்மாஜி பண்டிதரால் சரபோஜி மன்னரின் புதல்வர் சிவாஜி மன்னரின் கட்டளைப்படி எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்டது.

மேலேகூறிய கஜ சாஸ்திரம், பாலகாப்பியா, வைசம்பாயனர் என்ற பெருங்கவிஞர்களால் சில நூற்றாண்டு

களுக்கு முன் தெலுங்கு மொழியிலும், வடமொழியிலும் எழுதப்பெற்றவை. இந்நூல்களைப் பின்பற்றி மராட்டிய மன்னர் காலத்துக்கு முன்பே, சோழர் நாயக்க மன்னர் காலத்தில் நூலகத்தில் தொகுத்து வைக்கப்பெற்றவையே.

கஜசாஸ்திரப் படங்களின் தலைப்பில் வடமொழி மூலத்திலுள்ள சுலோகங்களும் கீழே மராத்தி மொழி ஸ்லோகத்தில் விவரமும் கொடுக்கப்பட்டுள்ளன. ஸ்லோகங்கள் உயர்ந்த இலக்கியத் தகுதியுள்ளவை. மூன்று பெரும் தொகுப்புகள் படவிளக்கக் கைப்பிரதி குறிப்பிடத்தக்கவை இவைகள் பூர்த்தியாகவில்லை. ஆனால் ஒரே ஓவியரால் இவை மூன்றும் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இக் கைப்பிரதி நூல்களில் இவை எழுதப்பட்ட காலம் ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ரக்மாஜி பண்டிதர் குறிப்பிலிருந்து இந்தப் பணி பூர்த்தியானது, கி. பி. 1822 A. D. என்று தெரிகிறது. திரு. P.P.S. சாஸ்திரியவர்கள் அவர் தொகுத்த சமஸ்கிருத ஆகர வரிசைப் பட்டியலில் இச்சுவடிகளைப்பற்றிக் குறிப்பிடாமல் விடுபட்டுள்ளன. படத் தொகுப்புக் கைப்பிரதிகளில், பாலகாப்பியரின் கஜ சாஸ்திர நூல் என்று முடிவில் கூறப்படுகிறது. படங்களில் உள்ள பழமைச் சின்னங்களையும், பின்னர்ச் செய்துள்ள திருத்தங்களையும் கொண்டு பார்த்தால் இப்படங்கள் சரபோஜி மன்னர் காலத்துக்கு முன்னவை என்பது புலனாகிறது. இது சம்பந்தமான வேற்றுமை ஒற்றுமை குறித்து, கஜ சாஸ்திர வெளியீடு முன்னுரையில் திரு மாடிக்ராவ் பக். 8ல் கூறுகிறார்.

"கஜசாஸ்திரப் படங்கள் ஷஹாஜி மன்னர் (1684-1710) காலத்தவை. ஷஹாஜிமன்னர் காலத்தில் யானைப் படை, குதிரைப்படைமிகுதியாக இருந்தன. இப்படங்களைப் பார்த்தே பின்னால் சரபோஜி மன்னர் புதியதாகப் படத் தொகுப்புகளைத் தயாரித்தார்" என்று கூறுகிறார்.

சரபோஜி மன்னர் காசிதேசத்திலிருந்து கொண்டு வந்த நூல்கள் :

மன்னர் சரபோஜி காசி யாத்திரை செய்துவரும் போது பல சமஸ்கிருத, மராத்தி மொழி நூல்களை வாங்கிக்கொண்டு வந்ததாகத் தெரிகிறது. அதில் ஒரே ஒரு நூல் மட்டும் மராத்தி மொழியில் இருப்பது நமக்கு இங்குக் கிடைக்கிறது. அந்நூலின் பெயர் 'முத்தல ராமாயண' என்பவையாகும்.

ஸ்ரீ முத்தலராமாயணம் — இந்நூலின் ஆசிரியர் திரு. கிருஷ்ணதாச முத்தல என்பவர் ஆகும். இவர் எழுதிய இந்த ராமாயணத்தின் யுத்த காண்டம் மட்டும்தான் இப்பொழுது கிடைக்கிறது. ராமாயணத்தின் மற்ற காண்டங்களான பாலகாண்டம் முதல் சுந்தரகாண்டங்கள் வரை எங்கும் கிடைக்கவில்லை. இந்த யுத்தகாண்டத்தில் ஆசிரியர் இத்துடன் சுந்தரகாண்டம் முடிந்தது, இனி யுத்த காண்டத்தைப்பற்றிக் கூறுகிறேன் என்று ஆரம்பிக்கிறார். ஆகையால் ஸ்ரீ முத்தலர் இராமாயணத்தின் இதர காண்டங்களும் இயற்றி இருக்கவேண்டும் என்று மகாராஷ்டிர இலக்கிய ஆராய்ச்சியாளர்களின் முடிவு ஆகும். மற்ற காண்டங்கள் நமக்குக் கிடைக்காதது பற்றி நமக்குக் குறையே ஆகும்.

சரபோஜி மன்னர் காசியிலிருந்து கொணர்ந்த இந்த யுத்த காண்டத்துடன், பிற ராமாயணக் காண்டத்தையும் கொண்டுவந்திருந்தாரேயானால் மராத்தி இலக்கியத்திற்குப் பெரும் உதவியாக இருந்திருக்கும்.

சரபோஜி மன்னர் காசியிலிருந்து ஒரு அருமையான சித்திரம் கொண்டுவந்து நூலகத்தில் சேர்த்திருக்கிறார். அது காசியில் கங்கை நதிக்கரையில் அமைந்திருக்கும் அறுபத்திநான்கு ஸ்நான கட்டங்கள் (புண்ணிய படித்துறைகள்) விவரத்தினைக் கூறும் சித்திரங்கள் தீட்டப்பட்டு விவரக் குறிப்புடன் கூடிய தொகுப்புநூல் ஆகும். மன்னர் தான் நேரில் கண்ட அருமையான கங்கையின்

காட்சியைத் தம் நாட்டு மக்களும் கண்டு அறிந்துகொள்ள வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் நல்ல தேர்ச்சி பெற்ற சித்திரக்காரனை அமைத்துச் சிறிதும் அக்கட்டிடத்தின் அமைப்புகள் மாறாமல் தீட்டச்செய்து, அதைத் தம் அரண்மனை நூலகத்தில் வைத்துப் பாதுகாத்திருக்கிறார். இன்றும் இதைக்காணும் நம் நாட்டு யாத்ரீகர்கள், வெளி நாட்டவர்கள் யாவரும் ஆச்சர்யங்கொண்டு புகழ்ந்து வியக்கின்றனர். இவையாவும் மன்னர் சரபோஜிக்குப் பெருமைதரத் தக்கதேயாகும்.

சரபோஜி மன்னரின் கல் அச்சுக்கூடம் —

சரபோஜி மன்னர் தம் அரண்மனையில் ஆங்கிலேயர் துணையுடன் ஒரு அச்சுக்கூடத்தினை நிறுவி அதில் கல் லெழுத்துக்களால் தேவநாகரி எழுத்துக்களைத் தயாரித்து, சமஸ்க்ருத மொழியில் அமரகோசம், அன்னம்பட்டி, முக்காவளி, மாகமூலம், த்மாரசம்பவசம்பு, காரிகாவளி, ரகுவம்சம் ஆகிய நூல்களையும் மராத்தி மொழியில் ஸ்ரீ ஏகநாதர் இயற்றிய ராமாயணத்தின் யுத்த காண்டத்தையும் (பாவார்த்த ராமாயணம்) அச்சு செய்திருக்கிறார். இந்நூல்களின் கடைசியில் இந்நூல்கள் அச்சுசெய்த அச்சுக் கூடத்தின் விபரமும் கூறப்பட்டிருக்கிறது.

"தஞ்சைமாநகரில் அமைந்த 'நவவித்யா கலாநிதி சாலையில்' சகம் **1731**-ல் குப்பா பட்டரின் எந்திரத்தில் அச்சு செய்யப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்விவரத்தினைக்கொண்டு நோக்குங்கால் மன்னர் சரபோஜி தம் வாழ்நாளில் நூல் நிலையத்தில் உள்ள அரிய நூல்களைப் பாதுகாக்கச்செய்த முயற்சியுடன் அதைப் பிற மக்களும் தெரிந்துகொண்டு பயன்பெறவேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் இப்படிப்பட்ட அரிய செய்கையைச் செய்திருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறது.

மேலே கூறிய புலவர்கள் பற்றியதும், நூல்களைப் பற்றியதும், மன்னர் சரபோஜியைப் பற்றியதுமான

விஷயங்கள் யாவும், நூல் நிலையத்தில் வெளியிட்ட மராத்தி கையெழுத்துப் பிரதிகளின் அகரவரிசைப் பட்டியல் பாகம் 1—4ல் கண்டவைகளிலிருந்து தொகுத்தவையாகும்.

சரபோஜி மன்னரைப்பற்றி மராத்திமொழி ஆராய்ச்சியாளர்களின் அபிப்பிராயம் —

1. Mr. S. G. Thulupule - Marathi Saraswatha Vol. IV-1951

"தஞ்சாவூரில் மகாராஷ்டிர ராஜபரம்பரையினர் பல அரிய கலைகளைக் கற்றறிந்தவர்களாக இருந்தார்கள். இவர்களில் கடைசியில் அரசாண்ட அரசர் ராஜா சரபோஜியின் காலம் அநேகவிதத்தில் மேன்மையுடன் விளங்கியது. ராஜா பட்டத்துக்கு வந்த மறுவருஷத்தில் 1799-ல் ஆங்கிலேயருடன் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அதில் நாட்டு நிர்வாகப்பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு கலை வளர்ச்சியிலும், பொதுச் சேவையிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். டேனிஷ் பாதிரி ஸ்வார்ட்ஸ் அவர்களிடம் ஆங்கிலக் கல்விகற்று பல விஷயங்கள் அறிந்துகொண்டார். அதனால் ஆங்கில மொழி அவர் சரளமாகப்பேசும் திறமை பெற்றிருந்தார் என்று "லார்ட்பெலேன்டாயின்" என்கிற ஆங்கிலேயர் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். அதற்கு ஆதாரமாக சரபோஜி ராஜா தன் குரு ஸ்வார்ட்ஸ் மரணத்திற்குப் பிறகு, ஸ்வாட்ஸின் மேல் ஓர் ஆங்கிலக் கவிதையை இயற்றினார். இதிலிருந்து மகாராஷ்டிரத்தில் பேஷ்வாக்களின் காலத்திற்கு முன்பே இந்த சரபோஜியின் காலத்திலும் தெற்கில் ஆங்கில மொழியின் பிரபலம் ஏற்பட்டதற்கு இது ஒரு ஆதாரமாகும்.

ஆக தஞ்சையில் மராத்திய அரசர்களின் கடைசி ராஜாவான சரபோஜி தம் பரம்பரைப் பெருமையை நிலைநிறுத்தி சமஸ்கிருதம், ஆங்கிலம் இவைகளுக்குச் சரியான இடம்

கொடுத்து ஆதரித்துவந்தார் என்று நினைக்கத்தோன்றுகிறது" என்று கூறுகிறார்.

2. Maharashtra Ithihasa — 'Maharashtra Parichaya'

"ஆங்கில அரசாங்கம் சரபோஜியை அரசாட்சியில் அமர்த்தி, அத்துடன் அரசரிடம் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு அதன்படி ரூபாய் மூன்றரை லட்சம் கொடுத்து அரசு பொறுப்பிலிருந்து தவிர்த்து இருக்கச் செய்தது".

சரபோஜி மகாராஜா தம் நேரத்தைப் பல அரிய நூல்களைச் சேகரித்தல், நூல்களைப் புதுப்பித்தலும், மொழிபெயர்க்கப் புலவர்களுக்கு ஊக்கம் கொடுத்தும் பல மாணவர்கள் சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகள் பயிலப் பள்ளிகளை அமைத்தார். மன்னர் லண்டனிலிருக்கும் 'ராயல் ஏஷியாடிக் சொஸைடியின்' ஆயுள் உறுப்பினராக இருந்து பல அரிய ஆங்கில அச்சுப் புத்தகங்களை வரவழைத்துத் தம் நூல் நிலையத்தில் சேகரித்தார் என்று கூறுகிறது.

மன்னர் சரபோஜி காலத்தில் மராத்திமொழி நூல்களைப் பிரதி செய்தவர்கள் விபரம் :—

1. ஸ்ரீமாதவஸ்வாமியின் ராமாயணத்தின் உத்திர காண்டத்தை, நரசிம்மபூரின்சாமி என்கிற பெயருடைய நான் தாரண வருஷம் மார்கழி மாதம் சஷ்டி திதியில் ப்ருகு வாரத்தில் (வெள்ளிக்கிழமை) சரபோஜி மன்னரின் வேண்டுகோளின்படியே பூராவும் பிரதி எழுதி முடித்தேன்.

2. ஸ்ரீமோரேஸ்வரருடைய 'ஆர்யா ராமாயணத்தை' முழுவதும் திரு சங்கரராவ் ஜகதாப் என்கிற மராட்டி எழுத்தாளர் 1826 A.D. யில் பிரதி செய்தார்.

3. ஸ்ரீ மாதவஸ்வாமியின் ஸ்ரீ விஷ்ணு புராணத்தின் விளக்க உரையை 1827 A. D. யில் திரு போவார் விட்டோபா, கானடா கிருஷ்ணசாமி, முத்திபுஜங்காச்சார், டோணபா கிருஷ்ணசாமி, கானடா போத்தாரசாமி ஆகிய பெயருடைய மராட்டி எழுத்தாளர்கள் பிரதி செய்திருக்கிறார்கள்.

4. ஸ்ரீமாதவஸ்வாமியின் மைந்தர் ஸ்ரீராமபண்டிதர் எழுதிய ஸ்ரீ பாகவதம் முதல் ஸ்கந்தமும், பத்தாவது ஸ்கந்தமும் 1827 A D.யில் தஞ்சையில் வாழ்ந்த சதாசிவ ராவ் மோஹிதேயின் மைந்தர் கேசவராவ் மோஹிதே, ராமசாமி மோஹிதே ஆகியவர்களும், ஆனந்தராவ் ஜகதாப், நானாசாமி ஜகதாப், விடோபா போவார், சஞ்சீவ ராவ் மோஹபத், வெங்கடராவ் சாளோங்கே ஆகிய மராட்டி எழுத்தாளர்களும் பிரதி செய்திருக்கிறார்கள்.

மன்னர் சரபோஜி காலத்தில் ஸ்ரீராமாயணம் இயற்றிய புலவர் :—

தஞ்சையில் ஸ்ரீ சமர்த்த ராமதாஸ ஸ்வாமியின் பிரதான மடாதிபதியான ஸ்ரீ பீமராஜகோஸ்வாமியின் சிஷ்யர் ஸ்ரீகோவிந்தபரள ஸ்வாமியின் பரம்பரையில் வந்த சிஷ்யர் ஸ்ரீ முகுந்தஸ்வாமி என்னும் ஸ்ரீராம பக்தர், 'ஸ்ரீராமகிருபாவிலாஸ்' என்ற தலைப்பில் ஸ்ரீ ராமாயணத்திற்கு விரிவுரை எழுதியிருக்கிறார். இவர் காலம் 1752 to 1830 A.D. ஆகும். இவர் தஞ்சையில் கருத்திட்டைக்குடியில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர் கோவிலின் சமீபத்தில் ஸ்ரீ பிரஹன்நாயகி அம்பாள் சன்னதியில் அமைந்துள்ள தன் ஸ்ரீராமசீதா ஆஞ்சநேயர் சன்னதியில் அமர்ந்து இந்த மராத்திமொழி ராமாயண உரையை எழுதியதாக ஆசிரியர் தம் நூலில் கூறுகிறார். இப்புலவர் வாழ்ந்த காலம் மன்னர் துளஜா, அமரசிம்மன் சரபோஜி மூவர் காலமாகும். சரபோஜியின் காலத்திலும் வாழ்ந்த இந்தப் புலவர் எழுதிய ராமாயணம் நூல் ஒன்று

தான் மிகுந்த சிறப்புடன் விளங்குகிறது. மற்ற எந்தப் புலவரும் இராமாயணத்திற்கு விளக்க உரை இந்தக் காலத்தில் எழுதவில்லை.

சரபோஜி மன்னரின் நூல் அன்பளிப்புகள் :—

சரபோஜிமன்னர் தன் பெண் திருமணத்தின்போது சீர்வரிசைகள் கொடுத்ததுடன், சில அருமையான மராத்தி நூல்களையும் மாப்பிள்ளை திரு ராமசாமி மோகிதே அவர்களுக்குக் கொடுத்தார். அவை, திரு மாதவஸ்வாமி மராத்தி மொழியில் எழுதிய பாரதத்தின் மொழி பெயர்ப்பை, ஓர்பிரதி 1824 A D.யில் செய்வித்துத் திருமண அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறார். அவ்வாறே திரு ராமபண்டிதரின் பாகவதத்தில் உள்ள 'ஹரிவம்சம்', 'சேஷ தர்மம்', போன்ற பகுதிகளை 1619 A.D.யில் பிரதி செய்து சரபோஜிமன்னருக்கு அன்பளிப்பாகத் திருமகாதேவமாடிக் என்ற மராத்தி எழுத்தாளர் கொடுத்திருக்கிறார். இந்நூல் பிரதிகளைக் கொடுத்த நாள் தீபாவளி நன்னாள் ஆகும். இப்பிரதிகள் யாவும் நம் நூல் நிலையத்தில் பாதுகாக்கப் பட்டு வருகின்றன.

இவ்விதமாகப் பல புலவர்களின் அரியபடைப்புகளைப் படைத்தும், மன்னர் புகழ்பாடியும் கலைக்கு அரும்பணி ஆற்றி இருக்கிறார். மேலே குறிப்பிட்ட நூல்கள் யாவும் இன்றும் "சரஸ்வதிமகால் நூல் நிலையத்தில்" சரபோஜி மன்னர் புகழ்பாடிக் கொண்டிருக்கின்றன. இவைகளைத் தவிர சரபோஜிமன்னர் தம் சொந்த நூலகத்தில் வைத்துப் பாதுகாத்த ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், லத்தீன், கிரேக்க, டச்சு ஆகிய பிற வெளிநாட்டினர்களின் மொழியில் அரிய அச்சுப் புத்தகங்களும், தேசப்படங்களும், சித்திரப் படங் களும் இந்நூலகத்தில் உள்ளவை சரபோஜியின் கலைத் திறமைக்குச் சான்றாக அவை விளங்குகின்றன.

["வாழ்க சரபோஜியின் கலைப்பணி"]

RAJA SERFOJI'S CONTRIBUTION TO TECHNOLOGY

K. MANAMALAR. M. A., M. Phil., B. Ed.
Senior Lecturer in History,
K. N. Govt. Arts College for Women.
THANJAVUR.

Rajah Serfoji was a great scholar king among the Maratha Rulers of Thanjavur. He had deep and abiding interest in various branches of learning including science and this made him to assemble with great effort vast collection of Manuscripts and printed books in his world-famous Sarasvati Mahal Library at Thanjavur. He carved a permanent niche in the History of India.

PRINTING PRESS :

Printing was unknown to the Tamilians. The first press with Devanagari type, in South India was started about 1805 A.D. at Thanjavur by Raja Serfoji II. His main object at that time was to print books required for the elementary Sanskrit and Maratha Schools. He had established in Thanjavur a small Hand Press in Devanagari type which was procured probably from Madras. The Raja started a stone type press called 'Navavidya Kalanidhi Sala' 'Varnayantra' in the palace. Mr. Kuppa Bhatta was the Superintendent of the press. The book 'Raghuvamsa' was printed in the press in 1808 A. D. It was printed in Devanagari letters.

Raja Serfoji the great educationist set up the First printing press in Thanjavur. Granite types are still to be found in Sarasvati Mahal Library. Had he survived for some more years, he could have printed many ancient works in several languages.

ENGINEERING :

There are records to show that he was keenly conscious of his duties. He launched a grand plan of laying the drainage construction covering the whole city including the smallest lanes and it had caused him a pretty lot from private funds. The same drainage system built by him under the charge of his officer 'Mankoji Gade' and his koteval 'Nagalinga Servaigan' between the years 1825 and 1828 A.D. is doing service even today, without much alteration. He also made provision for water supply by doing repairs to the big reservoir known as 'Sevappa Naickan Tank'. Outside the fort and he protected the Sivaganga Tank with the fort and constructed a fittering canal called 'Jalasutram' leading from the reservoir to the Sivaganga storage Tank. He also constructed underground feeder channels from the Sivaganga Tank. He also constructed 10 tanks and wells situated in the city. Even today several wells in the city both public and private require direct water supply from the Sivaganga Tank.

SHIP BUILDING :

Raja Serfoji was probably the first Indian who studied all aspects of western and Easter culture, Ship building Industry in Nagapattinam. Tranquebar, Thiru-mullaivasal, Kodikarai were in the hands of the British. So in his own territory he wanted to start a shipping

trade in 'Saluvanayakan Pattinam' later named as 'Sarabhendra Rajah pattinam' which is 10 miles South of Pudukkottai on the sea coast.

He erected a small sea fort in 1814 with regular Ramparts, boats all around, bridge to enter the fort and central tower called 'Manora' to commemorate the victory of the British over Napoleon.

He started to provide and equip the port with facilities to build sea going ships of various types and sizes as could be seen from the records in Modi section of the Library. The ships built in this port carried on coastal trade to places like 'Nagapattinam, Thirumullaivasal, Tranquebar, Kodikarai, Madras, Kerala Ports and with distant lands like Colombo, Jaffna, Andamans and Lakshadeep.

In this shipping yard, ships like 2 masts and 4 masts were built and they were given Indian names like 'Shambu Prasad' 'Rama Prasad' 'Siva Prasad' 'Ganesa Prasad' 'Rajaiakshmi' 'Gaja lakshmi' etc. He stationed garrison of soldiers known as 'Samara dheor supays.'

He also caused the erection of several houses around the fort to accommodate the colony of artisans like Masons, sailors, carpenters and others. To attract local people he made free gifts of land sites to the local labour to build house special dresses were given to the sailors. The regulation dress was 'Mundasu' the head gear, trousers and robes[1]. A new road was laid connecting Rajamadam to the fort site. The mode of transport was by bullock, camel horses and palanquin. The things earried were ropes, black wood, glass wares,

1. Modi bundle No. 81 dated 11—4—1831

luxury goods, cosmetics, liquour, spices, ivory and timber.

We come across several references of trade between Colombo, Yahzpatnam in the years 1830, 31 and 1832. Some ships from Kerala and Jaffna came here for repairs. New Anchors were cast. Iron nails were made from the broken Anchors which were melted down for the use in the construction of new ships[2] when the new boats and ships were launched goats were sacrificed in four directions of the ship to propitiate sea god 'Vamana'[3]

There is a record to show that the English Governors used to visit the Sea Port which served as a summer resort. The beginning the Raja purchased ropes and anchors from the Europeans at Madras. But later on he started his own at the portsite to manufacture them with the help of the local people. There is record to show that four ships were built on 8th January 1826, 26th February 1826, 22nd May 1826, July 29th 1826[4].

Two ships were leased out to the East India company for 6000 pounds per Annum. Records are maintained at the arrival and departure of several ships. Separate Registers were used for visas and permits.

There was a well equipped hospital under the care of an Anglo-Indian Surgeon. An Ayurvedic hospital was run by Appu Vaidyar. Small boats were also built to use in the back waters.

---

2. Vide report dated 30—1—1832
3. Vide report dated 18th Sep. 1832
4. Vide book No. Modi section at Sarasvati Mahal Library

Specially written and printed codes and signs to convey messages from one shlp to the other were maintained, They had separate signs to indicate different acts like sorrow, victory. defeat, run aways. Such sign were shown by means of flags of various colours during the day and meaning signs with the help of oil-fired torches in the night to remember the codes the Raja asked his Pandits to compose the signs in Tamil verses for ready reference by the sailors[5].

There are references of ship wreck along the coats. Raja Serfoji had his own meteorological station from which weather report was transmitted.[6]

Raja set up a factory for the manufacture of guns and muskets. He maintained a naval library with several types of ship building books were kept. There was a naval store called 'Commissary store' which contained naval instruments like Telescope etc. Some 70 years before the birth of Chidambaram Pillai, (VOC) Serfoji had started Native shipping Industry. At first the Europeans encouraged Serfoji but later on they were against his shipping company. After the death of Serfoji they through several obstructions as a result the shipping trade was destroyed and demolished during the time of his son Shivaji. In the year 1845, this grand Port was reduced to the position of an ordinary fishing village bordering the shores of Tamilnadu.

5. Vide record dated 22nd March 1827
6. Vide record dated 25—5—1927

சரபோஜி மன்னரும், கல்வெட்டுக்களும்

உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
யொன்றுநூ றாயிரங் கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
வங்ஙனே யழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே !

என்று கருவூர்த் தேவரால் புகழப்பெற்ற பெரிய கோயிலைக் கட்டிப் புகழ் பெற்றான் " திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் ... " எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியால் புகழ்பெற்ற இராசராசசோழனும். அவன் பின்னர், பல சோழ மன்னர்களும் தஞ்சையை ஆண்டனர்.

சோமேசன் செயலால், சோழர் ஆட்சி மாறி. நாரணனருளால் நாயக்கர் ஆட்சி தோன்றியது. " ஸ்வஸ்தி ஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வர ராஜாதிராஜ பரமேஸ்வர ஸ்ரீ வீரப்பிரதாப, ஸ்ரீ வீர அச்சுததேவராய மஹிராயர் ... " எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியால் புகழ்பெற்ற நாயக்க மன்னர்கள், பல அரிய செயல்களைச் செய்து தம் பெயரையும் புகழையும் நிலைநாட்டினர்,

நாயகன் செயலால், நாயக்கர் ஆட்சி மாறி, மகேசனருளால், மராத்தியர் ஆட்சி உதயமாயிற்று. அன்னை பவானியின் அருள்பெற்ற " ஆதி சிவாஜி " மன்னர்தம்

உடன் பிறந்தாரான "ஏகோஜி ராஜா" எனப்படும் வெங்காஜி மாமன்னர் கி. பி. 1675ல் தஞ்சையில் அரியணை யேறினார். அவர் தம் வழிவழி அரசு நடந்து கி. பி. 1798ல் சத்திரபதி 'சரபேந்திர பூபாலர்' என்று வழங்கப்பெறும் "சரபோஜி மாமன்னர்" பட்டமேற்றார்.

மன்னர் சரபோஜியின் கல்வித்திறனும், கலைவளர் பற்றும், பொதுப் பணிசெய்யும் பாங்கும் பிறவும் வியப்பிற் குரியன. உலகப் பிரசித்திபெற்ற 'சரசுவதி மகாலால்' இன்றும் தன் புகழை மணக்கச்செய்யும் மன்னர், தன் ஆட்சி யாண்டு 6-வதில், அதாவது கி. பி, 1803ல் தஞ்சைப் பெரு வுடையார் கோயிலின் தென்புறத் திருச்சுற்று மாளிகையில் தன் தாய்மொழியான மராத்தி மொழியின் கல்வெட் டொன்றைப் பொறிக்கச்செய்தார். பொதுவாகத் தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள கல்லெல்லாம் கதைசொல்லும்; வடிவெல்லாம் வரலாறு கூறும். அவ்வாற்றால் இக் கல்வெட்டுக் கூறுவது "போசலகுல வரலாறாகும்." போசலகுலம் என்பது, சரபோஜியின் 'போன்ஸ்லே வமிசம் ஆகும்.

"போன்ஸ்லே வம்ச சரித்திரம்" என்ற பெயரால், மூலமொழியாம் மராத்திமொழியிலும், மொழிபெயர்ப் பாம் தமிழ்மொழியிலும், சுருக்கம் ஆங்கிலத்திலும், எமது சரசுவதிமகால் வெளியிட்ட இக் கல்வெட்டின் தொடக்கம் :-

"ஸ்ரீமத் போன்ஸ்லே வம்சமானது, ஆதி ஸ்ரீமந் நாராயண ரிடம், ஸ்ரீஸூர்ய நாராயணர், மனு இக்ஷ்வாகு முதலியவர்கள் மூலமாய், கிருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம் இந்த மூன்று யுகங்களிலும் தோன்றிய புகழுடைய புண்ணிய புருஷர்களான அரசர்களின் பரம்பரையில் உதித்தது.

இவ்வம்சத்தின் மூலபுருஷராகிய சம்பு என்பவர் இக்கலியுகத் தில் சம்புமலைப் பிரதேசத்தில், மஹாராஷ்டிர தேசத்திற்கு அதிபதியாக வீரம், கொடை முதலிய உயர் குணங்களால் பிரசித்தி பெற்று, நீதிமுறைப்படி ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார்.

* * *

அந்த வரத்தின்படியே சம்புராஜாவின் உதர சமுத்திரத்தில் குணரத்தினக் குவியலெனக் கீர்த்தியுடன் "ஏகோஜி ராஜன் பிறந்தார்." என்று தொடங்கி :

"தற்சமயம் சரபோஜி மகாராஜா எப்பொழுதும் சிவ புராணத்தைக் கேட்டுக்கொண்டும் சிவபூஜையைச் செய்து கொண்டும், யாத்திரை செய்து கொண்டும் சரியான வழியில் காலத்தைக் கழிக்கிறார்.........சரியான மார்க்கத்தில் இராச்சிய பரிபாலனம் செய்து வருகிறார். (பக். 136)

* * *

இப்படிப்பட்ட இந்தச் சரித்திரம், முதல் வர்ணத்தைச் சேர்ந்தவரும் மகாராஷ்டிர ஜாதியைச் சேர்ந்தவரும், பகவந்த ராயரின் பௌத்திரரான விட்டல ராயரின் புத்திரரும், தற்சமயம் சோழ நாட்டின் அதிபதியான ஸ்ரீமந்த் ராஜே ஸ்ரீ மகாராஜா சத்ரபதி சரபோஜி மகாராஜா சாகேப் அவர்களின் உண்மையான ஊழியரும் காரியதரிசியுமான, காசியப கோத்திரம், ஆசுவலாயன சூத்திரம், ரிக்வேத சாகையைச் சேர்ந்த 'பாபுராவ்' என்பவரால், சாலிவாகன சகம் 1759, ருதிரோத்காரி வருஷம், மார்க்கசர்ஷ மாதம். கிருஷ்ணபக்ஷ அமாவாசைக்குச் சரியான கி. பி. 1803 ஸ்ரீ டிசம்பர் மீ 13-வ எழுதி முடிக்கப்பட்டது"
என்று முடிந்திருக்கிறது.

இது கி. பி 1803 என்பதால், சரபோஜிமன்னர் காலத்திலேயே வெட்டப்பட்டதாகத் தெரிகிறது. ஆயினும் இது குறித்த ஒருசாராருக்குக் கருத்து வேறுபாடு நிலவுகிறது. "சிவபாரதம்" என்ற நூலின் ஒப்புமையினால் இவ் வரலாறு சற்று மாறுபடுகிறது" என்றும், "வடநாட்டில் 'வெங்கோஜி' என்றழைக்கப்பட்டிருந்தும் தமிழ்நாட்டில் 'ஏகோஜி' என்பது இடைச் செருகல்" என்றும், மகாராஷ்டிரத்தில் உள்ள பூனா நகரைச் சேர்ந்த மேஜர் "நாராயண பாலகிருஷ்ண கத்ரே' அவர்கள் கூறுகின்றார்.

மேலும், அவர், இக்கல்வெட்டு சிவாஜி II மன்னனால் வெட்டப்பட்டது' என்ற சிலர் கூற்றினை மறுத்துத் தன் கருத்தாக "இக் கல்வெட்டு துளஜா மன்னருடைய

காலத்தில் கொஞ்சம் செய்திருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது. ஆங்கிலேயருடைய காலத்தில் சிவாஜி II ஏற்படுத்தினார் என்பது பொருந்தாது. இக் கல்வெட்டு யார் காலத்தில் ஏற்பட்டது என்று ஐயப்பாடாகவே உள்ளது" என்று கூறுகின்றார். மேலும் இவர் சில கருத்துக் களைக் கூறி இதனை நிலைநாட்டுகின்றார். இவை ஆய்வுக்குரியன.

இக் கல்வெட்டுக் கூறும் செய்திகள்:- ஒரு முறையான வரலாறு மகாராஷ்டிர வமிசத்தைப்பற்றி அறிய முடிகின்றது. சம்பு மன்னர் முதலாக ஆதி சிவாஜி ராஜா வரையிலும், அவர் தன் உடன் பிறந்தார் ஏகோஜி முதல் தன் வரையிலும் ஆன வழித்தோன்றல்களையும், அவ்வப் போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் சுவைபடக் கூறி யுள்ளார். ஏகோஜிக்கு முன் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களின் முழுச் செய்தியினையும் கூற வாய்ப்பில்லை போலும். இக் கல்வெட்டில் அரசனாலும், எழுத் தாளராலும், கல் தச்சராலும் சில மாறுபாடுகள் காணப் படுகின்றன.

எனினும் தன்னடக்கமாகத் தற்புகழ்ச்சியின்றி, இக் கல்வெட்டுக் காணப்படுவது வியப்புக்குரியது. மன்னர்கள் தங்கள் மெய்க்கீர்த்திகளைக் கூறிய பின்னரே செய்தி களைக் கூறுவர். ஒரு சிறு செயலுக்காகக் கல்வெட்டு ஏற்படுத்தினும், தமது மெய்க்கீர்த்தியே பெரும்பகுதி இடங்கொள்ளும். இம் மன்னனின் கல்வெட்டுக்களில் ஸ்ரீ மங்கள மூர்த்திர் ஜெயதி ஸ்ரீமந் போசலகுலமணி சரபேந்திர மகாராஜா சாயேப் அவர்கள்" என்று ஒரு சிலவற்றில் மட்டுமே காணப்படுகின்றன. பிறவற்றில் "ராஜ ஸ்ரீ சரபோஜி மகாராஜா" என்றே காணப்படு கின்றன.

மிகப்பெரிய கல்வெட்டு இது' என்றுகூடக் கூறத் தகுதி வாய்ந்துள்ளது இது. இதில் சரபோஜி மன்னர் செய்த பல

அரிய செயல்கள் இடம் பெறவில்லை. இவர் பட்டத்திற்கு வந்த 6-வது ஆண்டில் ஏற்பட்டதால் அக்குறை ஏற்பட்டுள்ளது. இக் கல்வெட்டில் குறிப்பிடத்தக்க சுவையான செய்தி ஒன்றுண்டு.

தஞ்சையில், மராத்திய ஆட்சி, 'ஏகோஜி' மன்னரால் ஏற்படுத்தப்பட்டபோது. அவர்தம் இளவல் சிவாஜி மன்னர் தஞ்சைக்கு வந்து, ஏகோஜி மன்னருக்குத் தெரியாமல், தஞ்சாவூர்க் கோட்டையைச் சுற்றிப் பார்த்து விட்டு. தான் வந்ததற்கு அடையாளமாகத் தன் தலைப்பாகையை ஒரு கடையில் வைத்துவிட்டு (பக். 65)த் தனது இருப்பிடம் சென்று, ஏகோஜி மன்னருக்குக் கடிதம் எழுதித்தான் வந்து தஞ்சையின் அரிய கோட்டையைப் பார்த்ததாகவும். அது கருடனைப்போன்ற உருவத்துடன் இருப்பதாகவும், தான் வந்ததற்கு அடையாளமாக வைத்த தலைப்பாகையை வாங்கி அனுப்புமாறும் தெரிவித்தார். பிற செய்திகளை மேடி நூலில் காணலாம்.

இப் பெரியகோயிலிலுள்ள வேறு (S. II. 420 of 1924 கல்வெட்டினால், இக் கோயில் திருச்சுற்றில் (பிரகாரத்தில்) உள்ள விநாயகர் கோயிலைச் செப்பம் செய்து, கருவறையும் அர்த்தமண்டபமும் மகாமண்டபமும், பிற மண்டபங்களும் கட்டினார் என்று தெரிகின்றது. மேலும், இதில் உள்ள பழைய விநாயகர் உருவத்தினை எடுத்துவிட்டுப் புதியதோர் விநாயகர் உருவச்சிலையினை அமைத்தார்.

இக் கோயிலின் பின் திருச்சுற்று மாளிகையில் 108 சிவலிங்கங்களை அமைத்துக் குடமுழுக்குச் செய்து. அதன் நித்திய பூசைக்காக. சென்னை, மிஸ்தர் ஹாரிங்டன் அவர்களிடம் 29—5—1802-ல் 5. 000 புலிவராகன், வருடத்திற்கு 10 வராகன் விகிதத்தில் கொடுத்து. ஒவ்வொரு ½ ஆண்டிற்கும் 250 புலிவராகன், புலிவராகன் 1க்கு ரூ. 3-8-0 வீதம் ரூ. 875/- வட்டி பெற்று, அதனைத் தவறாமல் செய்ய ஏற்பாடு செய்தார்.

திருச்சுற்றுக்குச் செங்கல் தளவரிசையிட்டுள்ளார். பெருவுடையாருக்கு வெள்ளி (ரிஷப வாகனம்) விடையூர்தி செய்துவைத்தார். மேலும் முருகர் சந்நிதிக்கு முன்னுள்ள கல்யாண மண்டபம் இவர் கட்டியதாகத் தெரிகின்றது.

மற்றுமொரு குறிப்பு S. I. I. Vol II Introductiou Page 13 Footnote - ன்படி.

"The Mahrathi Inscription on the inner wall of the south enclosure which is dated in Saka 1723, Durmathi (= A. D. 1801 - 02) states that the Mahratha King Sarphoji Maharaja executed elaborate repairs to the shrines of Ganeasa, Subramaniar, The Goddess (Brihannayaki), Sabhapathi, Dakshinamoorthy and Chandesva·a built one or two new mandapas and renovated the paraffara walls, the temple kitchen and the flooring of the courtyard" என்று கூறுகின்றது.

இவர் எடுத்த கோயில்களும், புதுக்கிய கோயில்களும், விரிவுபடுத்திய கோயில்களும், அறக்கட்டளை செய்த கோயில்களும், பிறவும் மிகப்பலவாகும். அவற்றுள் ஒன்றிரண்டு காண்போம்.

தஞ்சை அரண்மனை வாயிலுக்கு எதிரே, கீழராஜ விதியில், அருள்மிகு "பாண்டுரங்கன் கோயில்" இருக்கிறது. இதனை, மன்னர் சரபோஜி தான் பண்டரிபுரம் சென்றுவந்ததன் நினைவாகக் கட்டுவித்துள்ளார், அதன் கல்வெட்டு:-

"ஸ்ரீ மங்கள மூர்த்திர் ஜெயதி ஸ்ரீமத்போசலகுலமணி சரபேந்திர மகாராஜா சாயேப் அவர்கள், ஸ்ரீ பாண்டுரங்காலைய பசனசாலா தர்மம் சொஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1740, கலியுக சகாத்தம் 4919 யிதின் செல்லாநின்ற வெகுதான்ய-ஷு மாசி-மீ அமரபட்சம் சதுர்த்தசி சோமவாரம், மகாசிவராத்திரி சுபதினத்தில் இந்த தர்மம்" என்பதாகும்.

இக் கல்வெட்டு கோயில் முன்வாசல் வலது புறத்தில் மராத்தியிலும், இடது புறத்தில் மேலே தமிழிலும், கீழே தெலுங்கிலும் (ஒரே கல்லில்) வெட்டப்பட்டுள்ளது. இதன் நாள் 1—3—1819 ஆகும். மேற்கு நோக்கியுள்ள இக் கோயிலின் பாண்டுரங்கனைப் பண்டரிபுரத்திினின்றும் கொண்டுவந்து அமைத்ததாகக் கூறுவர். பண்டரிநாதனைப் பஜனை செய்வதற்கேற்ப 4 மண்டபங்கள் அமைந்துள்ளன.

இக்கோயிலின் தெற்கே சுமார் 110 கிலோ மீட்டர் தூரத்தில், கீழராஜ வீதியில், கீழ்சரகில் கிழக்குநோக்கிய கோயிலொன்று, அருள்மிகு "மணிகர்ணிகேசுவரர் கோயில்" என்ற பெயரால் இருக்கிறது, இதற்குப் 'புதுக்கோயில்' என்ற பெயரும், இதனை ஒட்டிய சந்துக்குப் 'புதுக்கோயில் சந்து' என்ற பெயரும் இன்றும் வழங்கி வருகின்றன.

இவர், காசியாத்திரை செய்து திரும்பியபின், இது கட்டப்பட்டதாகத் தெரிகின்றது. இவர், காசியில் கங்கைக் கரையில் 'மணிகர்ணிகா' என்றபடித்துறை கட்டியுள்ளார். அதன் நினைவாக இக் கோயிலெழுப்பி, மூலவருக்கு அருள் மிகு 'மணிகர்ணிகேசுவரர்' என்ற பெயர் சூட்டி, அம்மன் சந்நிதி, பரிவார தெய்வங்களான விநாயகர். சுப்பிரமணியன் சண்டிகேசுவரர், சனீசுவரர், பைரவர், சூரியன் முதலானவர் கள் சந்நிதியும் மடைப்பள்ளி முதலியனவும் கட்டி யுள்ளார். பெரிய அளவில் மூன்று கோபுரங்கள் அழகுற அமைந்துள்ளன.

மேற்கூறிய செய்திகளைக் கூறும் கல்வெட்டு காணப் படவில்லை. ஆயினும் இக் கோயிலில் பிற மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

1. 23—8—1865-ல் தஞ்சாவூர் அரண்மனை அகிலாண்ட பாய் அம்மாள் நடராசர் சந்நிதியைக் கட்டியுள்ளதாகத் தெரிகின்றது.

2. 19—12—1892-ல் மேஷ் அரண்மனை ஸ்ரீமன் மங்களவிலாசம் பெரிய தர்மாம்புயாபாயி அம்மாள், ஏஜெண்டு ஆபிஸில் ரூ 250/- கொடுத்து, அதன் வருமானம் கொண்டு, இக் கோயிலுடையாருக்குப் பதினெட்டாம் பெருக்குக்கு ரூ 8/-ம், அன்னாபிஷேகத்துக்கு ரூ. 5/-ம் கொடுத்து. அபிஷேகம், நைவேத்தியம் சுவாமி புறப்பாடு முதலானது செய்ய வேண்டும் என்று கூறுகிறது.

3. 23—4—1897ல் மேஷ் அரண்மனை கோகிலட்சுமுபாயி அம்மாள், கஜானாவில் ரூ. 1000/- கொடுத்து, அதன் ஆண்டு வருமானம் ரூ 60/ ஐக் கொண்டு நித்தியபூசை, நைவேத்தியம் முதலானதுகள் செய்ய ஏற்படுத்தினதாகத் தெரிகின்றது.

தஞ்சாவூர் மேலராஜ வீதியில் அருள்மிகு 'டபீர் விஜயராமசாமி கோவில்' இருக்கிறது. டபீர் ரபபர் என்றும் அழைக்கப் பெறுவர். இக்கோயிலின் வாயிற்படியில்' மராத்தியில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டொன்று காணப்படுகிறது. அதில் சரபோஜி மன்னர் கி, பி. 1805-ல் இக் கோயிலைப் புதுப்பித்துள்ளதும் இக்கோயில் பெருமாளுக்குப் பெரியதோர் தேர் செய்து கொடுத்ததும் அறியக் கிடைக்கின்றன.

தஞ்சையில் 'எல்லையம்மன் கோயில் தெரு' என்று ஐயன் கடைத் தெருவையடுத்துள்ளது. இதில் கிராம தேவதை எனப்படும் அருள்மிகு ,எல்லையம்மன்' கோயில் கொண்டுள்ளாள். இதனை 'ரேணுகாதேவி' என்று மராத்தியர்கள், தங்கள் குலதெய்வமாகக் கொண்டாடுவர். பழைமையதான இக்கோயில், சரபோஜி மன்னர் தனது ஆட்சியாண்டில் விரிவுபடுத்திப் புதுக்கினார். கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், நர்த்தன மண்டபம், முன் கோபுரம், வாயிற்படிகள். திருச்சுற்று, அதிலுள்ள மாதங்கி அம்மன் சந்நிதி, மற்றும் நாக கன்னிகை, சண்டிகேசுவரர்

முதலான பரிவார தெய்வங்களின் சந்நிதிகள், மடைப்பள்ளி மதிற்சுவர், தளவரிசை முதலானவைகளைச் செய்து, திருப்பணி செய்துள்ளார் என்பது இக்கோயிலின் நிலைவாயிற்படி நிலைக்கல்லில் மராத்திய எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர், வடக்கு ராஜவீதி (தற்போது தூய பேதுரு உயர்நிலைப் பள்ளியின் மேற்கு) யில் அருள்மிகு "இரத்தின கிரீஸ்வரர்" திருக்கோயில் உள்ளது. இக் கோயில், சரபோஜி மன்னர் காலத்தில் கட்டப்பட்டது இதற்கு ஒரு சுவையான வரலாறுண்டு.

மன்னர் சரபோஜி தனது காமக்கிழத்தியாம் முக்தம்பா பாயிசாகேப் அவர்களின் உயிர்ப்பலி காரணமாக ஒரத்தநாட்டில் கிடைத்த புதையல் பெரும்பொருள், கொண்டு, அவர்களது வேண்டுகோளின்படி, ஆண்டோர் சத்திரம் கட்டினார். ஒரு பெருவேள்வியும் செய்தார். இப்பெருவேள்விக்குரிய கல்வெட்டொன்று ஷை சத்திரத்தின் வாசலில் உள்ளது. அவ் வேள்வியின் அவிர்ப்பாகத்தினை யாரும் ஏற்றுக்கொள்ள வில்லை. அதனை ஏற்றுக்கொள்வாருக்குப் பெரும்பொருள் அளிப்பதாக மன்னர் கூறவே, பழமானேரி அண்ணா சாஸ்திரிகள் என்பார், அதனை ஏற்று, மிகுசெல்வத்தையும் பெற்று, அப் பொருள் கொண்டு இந்த அருள்மிகு இரத்தினகிரீசுவரர் கோயிலைக்கட்டி, காசியினின்றும் இலிங்கம் கொண்டுவந்து அமைத்து வழிபடலானார். இக் கோயில் ஷை சாஸ்திரிகளுக்கும், அவர்தம் வழித்தோன்றல்களுக்கும் சொந்தமானது.

தஞ்சைக்கு வடக்கே சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில் விண்ணாற்றங்கரைக்குத் தெற்கே கோயில் கொண்டெழுந்தருளியுள்ள அருள்மிகு 'ஆனந்தவல்லி சமேத தஞ்சபுரீசர்' கோயில் மிகவும் தொன்மை வாய்ந்ததும் வரலாற்றுச் சிறப்புடையதும், புராண வரலாறு கொண்டதும் ஆகும். இக் கோயில் 'ஆனந்தவல்லி அம்மன் கோவில்' என்றே வழங்கப்பெறும்.

பராசக்தியாகிய காளிதேவி, தஞ்சன், தண்டகன், தாரகன் ஆகிய அசுரர்களைக் கொன்றபின், மகரிஷிகள் ஆனந்தம் அடையும் வண்ணம் சூலத்துடன் காட்சியளித்ததால் 'ஆனந்தவல்லி' என்றும், தஞ்சைக்குப் பெயர் கொடுத்ததால் 'தஞ்சேசர்' என்றும் தலபுராணம் கூறும்.

இந்த ஆனந்தவல்லி அம்மன் சந்நிதிக்கு எதிரே நர்த்தனமண்டபமும் நந்திமண்டபமும் கட்டிய செய்தியை, அம் மண்டபத்தின் மேற்கு வெளிப்பகுதியில் தெற்கு நோக்கிய மராத்திக் கல்வெட்டு.

'ராஜஸ்ரீ சரபோஜி மகாராஜா அவர்கள் ஸ்ரீ ஆனந்தவல்லி அம்மன் சந்நிதியில் நர்த்தனமண்டபம் செங்கல்லால் கட்டப்பட்ட தருமம்' என்று கூறுகிறது.

சரபோஜி மாமன்னரின் பாட்டனாரான சத்திரபதி பிரதாபசிம்ம மகாராஜா காலத்திலிருந்தே, பிரெஞ்சுக்காரருக்கும், மராத்திய மன்னர்களுக்கும் போர் நடந்து வந்தது. சரபோஜி மன்னர் காலத்தில் கி. பி. 1814-ல் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சு நெப்போலியன் போனபார்த்தேக்கும் போர், வாட்டர்லூ என்ற இடத்தில் நடந்தது. அப்போரில் ஆங்கிலேயருக்கு உதவியாகப் பெரும் சேனைகளை, மன்னர் சரபோஜி உதவினார். அதனால் ஆங்கிலேயர் வெற்றிபெற்றனர். அவ் வெற்றியைத் தன் வெற்றியாகக் கருதிப் பட்டுக்கோட்டை வட்டம், சாளுவ நாயக்கன் பட்டணத்தில் ஒரு கப்பல் துறைமுகத்தை ஏற்படுத்தி, அதில் நினைவுச்சின்னமாக "மனோரா" என்ற வெற்றிச் சின்னத்தை எழுப்பினார். அது கலங்கரை விளக்கமாகவும் அக்காலத்தில் பயன்பட்டது. இதன் சிறப்பு விரிப்பில் பெருகும். இதில் உள்ள கல்வெட்டு :—

" இங்கிலிசு சாதியார் தங்கள் ஆயுதங்களினாலடைந்த செய சந்தோஷங்களையும் போன பார்த்தெயின் தாழ்த்தபடுதலையும் நினைவு கூர்தற்காக இங்கிலீசு துரைத்தனத்தின் சிநேகிதரும், படைத்துணைவருமாகிய தஞ்சாவூர் சீர்மை மகாராசராச சத்திரபதி

சறபோசி மகாராசாவவர்கள் இந்த உப்பரிகையைக் கட்டிவைத் தார்கள், சகம் 1736-ஷ்”. என்பதாகும். இது தமிழ், ஆங்கிலம், மராத்தி, தெலுங்கு, உருது ஆகிய மொழிகளில் உள்ளன.

இதனையடுத்த ‘ மருங்கைப்பள்ளம்’ என்ற ஊரில் உள்ளசிவன் கோயிலில் ஒரு கல்வெட்டும், ‘பாப்பு ராஜ புரம், என்ற ஊரில் வைத்திய நிபந்தக் கல்வெட்டு ஒன்றும், அறந்தாங்கி சிவன்கோயிலில் ஒரு அறக்கட்டளைக் கல் வெட்டும், கும்பகோணம் இராமசாமி கோயிலில் ஒரு கல்வெட்டும் பிறவும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

மன்னர் சரபோஜி அவர்கள்தம் கல்வெட்டுக்கள் யாவும் ஒருசேர வெளிவருமாயின் வரலாற்றுக்குப் பயன் தரும்.

வாழ்க சரபோஜி மன்னர்.

கல்விக்காக

உயிர்வாழ்ந்த மன்னன்

சுந்தரவாதூலன்

தஞ்சையை ஆண்ட மகாராட்டிர மன்னர்களில் கடைசியாக வந்தவர் சரஸ்வதி மகால் நூலகப் புகழ் இரண்டாம் சரபோஜி மகாராஜா. இவர் எப்படி அரசாங்க அலுவல்களை விடுத்துக் கல்விக்கும், கலைக்கும், இந்தியப் பண்பாட்டுக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் என்பது ஒரு சுவாரஸ்யமான கதை.

பிரசித்திபெற்ற பிரதாபசிம்ம மகாராஜாவின் மகன் துளஜாஜி மகாராஜாவுக்கு வாரிசு இல்லை. ஆகையால் தம் முன்னோர் வழிவந்த இந்த சரபோஜியை சுவீகாரம் எடுத்துக் கொண்டார். பையன் வயது வரும் வரை துளஜாஜிக்கு சகோதரர் முறையுள்ள அமர்சிங் என்பவர் ரீஜண்டாக நியமிக்கப்பட்டார்.

அமர்சிங்கிற்கு அரசுப் பதவியைக் கைப்பற்ற மிகுந்த ஆசை. ஆங்கிலக் கம்பெனி அரசிடம் சரபோஜியின் ஸ்வீகாரம் சாஸ்திரப்படி செல்லாது என்று வாதிட்டுத் தன்னை மன்னராக அறிவித்துக் கொண்டார். சரபோஜி தன் பெற்றோருக்கு ஒரே குழந்தை - அவரை சுவீகாரம் எடுத்துக் கொண்ட போது மன்னர் சுயநிலையில் இல்லை. அன்றியும் அப்பொழுது சரபோஜியின் வயது சுவீகாரத்துக்

குரிய வயதைத்தாண்டிவிட்டது என்பது அவருடைய வாதம். வெற்றிகண்ட அமர்சிங் சரபோஜியைக் கொடுமைப் படுத்த ஆரம்பித்தார்.

சரபோஜிக்குத் தெய்வத்தின் அருள் அப்போது தஞ்சைக்கு வந்து நிலைத்து வாழத் தொடங்கிய ஸ்வார்ட்ஸ் என்ற ஆங்கிலப் பாதிரியாரின் உருவில் வந்தது. தம் அரவணைப்பில் வளர்ந்த சரபோஜிக்குப் பாதிரியார் சிறந்த கல்விப் பயிற்சி அளித்ததுமல்லாமல் ஆங்கில அரசாங்கத்துடன் வாதாடி சரபோஜியின் சுவீகாரம் செல்லும் என்ற தீர்ப்பையும் பெற்றார்.

அப்பொழுது கவர்னர் ஜெனரலாக இருந்த வெல்லஸ்லி பிரபு சரபோஜிக்கு மன்னர் பதவியைத் திருப்பி அளித்தாரே ஆயினும் அப்பதவிக்குரிய அதிகாரங்களையும் வருமானத்தையும் பறித்துக் கொண்டார். மகாராஜா என்ற பட்டம் தஞ்சைக் கோட்டைக்குள் நீதிபரிபாலன அதிகாரம், சொந்தமாக முந்நூறு கிராமங்கள் இவைதான் சரபோஜிக்குக் கிடைத்தவை. கிடைத்த அதிகாரத்தையும் கம்பெனி அரசுக்கே தந்து விட்ட சரபோஜியின் செயல் கல்விக்கும் கலைக்கும் பெரிய லாபமாக ஆயிற்று.

முழு மூச்சுடன் தன் முன்னோரால் உருவாக்கப்பட்ட சரஸ்வதி மகால் நூலகத்தை விருத்தி பண்ணுவதில் முனைந்தார். அரிய நூல்களையும் சுவடிகளையும் சேகரித்து நூலகத்திற்கு உலகப் புகழைத் தேடித் தந்தார். நம் நாட்டில் முதல் அச்சகத்தை நிறுவியவர் அவரே. அச்சு எழுத்துக்களை எப்படித் தயார் செய்தார் தெரியுமா? கருங்கல்லில் எழுத்துக்களைச் செதுக்கி அவைகளை உபயோகப்படுத்தித் தான் எழுதிய நூல்களை அச்சிட்டார். அந்நூல்களை இன்றும் சரஸ்வதி மகாலில் காணலாம்.

சரபோஜி மகா மேதாவி. அவர் கற்ற மொழிகள் அநேகம். படிக்காத நூல்கள் இல்லை. அவருடைய கல்வி

யறிவு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் திறமை, அழகிய தோற்றம், வீரம், மனிதாபிமானம், வேதாந்தத்திலுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கை - இவைகளைப்பற்றி அவர் சபைக்கு வந்த பிஷப் ஹீபர், டாக்டர் புகனன் டாக்டர் மிடில்டன் முதலியோர் தங்கள் கருத்துக்களை விட்டுச் சென்றிருக்கின்றனர்.

அசுவ சாஸ்திரத்தைக் கற்றறிந்த அவருடைய ஒரு குதிரையின் தரத்தைக் கண்டுபிடிக்கும் ஆற்றல், புலிவேட்டையில் அமைதியாகவும் துணிச்சலாகவும் குறி தவறாமல் சுடும் திறமை-இவைகளை வெகுவாகப் புகழ்ந்துள்ளார் பிஷப் ஹீபர். தஞ்சை அரண்மனையில் பல மொழிப் பண்டிதர்களுக்கும் பலவிதக் கலைஞர்களுக்கும் பெருத்த ஆதரவு தந்தார். திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் வாழ்ந்தது இவர் காலமே. தஞ்சைப் பெரிய கோவில் உள்பட பல கோவில்களுக்குத்திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்வித்தார் இந்த ராஜரிஷி.

முப்பத்துநான்கு ஆண்டுக்கால ஆட்சிக்குப்பின் 1832ல் மறைந்தார். கலைகளுக்காக வாழ்ந்த இம்மன்னர் இவருடைய மரணத்தைச் சென்னை அரசாங்க சீஃப் செகரடரிக்கு ரிப்போர்ட் செய்த ரெஸிடெண்ட் ப்ளாக் பர்ன் துரையின் 9—3—1832 தேதியிட்ட கடிதம் பல சுவையான தகவல்களைத் தருகிறது.

"மன்னர் இறந்த சில மணி நேரம் எனக்கு ஒரே குழப்பமும் கவலையும் மகாராணி அரசருடன் உடன் கட்டையேற முடிவு செய்து விட்டார். அவருடைய கணவரின் மரணத்துக்குப்பின் ஏற்படக்கூடிய பல பிரச்சினைகளைப் பற்றியும் உடன் கட்டை யேறுதலுக்குக் கம்பெனி ஆட்சிக்குள்ள எதிர்ப்பையும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் பயனில்லை. கடைசியில் அவருடைய ஒரே மகன் (இரண்டாம் சிவாஜி) மற்ற நெருங்கின

உறவினர்கள் இவர்களுடைய அழுகையும் வேண்டுகோளும் தான் அவருடைய முடிவை மாற்றின.

"சவ ஊர்வலத்துக்கு நான் புறப்படத் தயாராகும் போது மன்னரின் ஆறு ஆசைநாயகிகளும் சவம் எரியும் அதேநேரத்தில் தீக்குளிக்கப் பிடிவாதம் பிடித்தனர். யாராலும் தடுக்க முடியவில்லை நான் அவர்கள் வசிக்கும் ஆறையின் வாயிலில் அவர்கள் பார்வையில் நின்றுகொண்டு மகாராணியின் முடிவைத் தெரிவித்தேன். என் வார்த்தைகளை நம்பியே அவர்கள் தீக்குளிக்கும் முடிவைக் கைவிட்டனர்.

வெகுகாலமாக இருந்துவந்த இந்த அரண்மனை வழக்கத்தை (உடன் கட்டை யேறுதல்) நிறுத்திய பெருமை ஆங்கில ஆட்சியையே சேரும்'

'மறுநாள் நடந்த மன்னரின் சவ ஊர்வத்தில் 90,000 பேர் பயபக்தியுடன் கலந்துகொண்டனர். மக்கள் தம் தலைவனை, தந்தையை இழந்ததுபோல் தவித்தனர். அஸ்தி சேகரிப்பின்போது அழைக்கப்படாமலேயே 60,000 பேர் மயானத்தில் கூடிவிட்டனர். கோட்டைக்குள் வசித்த 20,000 பேர் மன்னர் இறந்த அன்று உணவு எடுத்துக் கொள்ளவில்லை" என்று கூறியுள்ளார் ப்ளாக் பர்ன் துரை.

(உண்மையான நகல்)

நன்றி :

தினமணி கதிர் 3—9—89

மருத்துவத் துறையில்
மன்னர் சரபோஜி

புலவர் **ச. திலகம்**,
தமிழ்ப் பண்டிதர்.
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தென்னிந்தியாவின் நெற்களஞ்சியமான தஞ்சையம்பதியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்த மரபினர் பலர். அவர்களுள் சோழர்களையடுத்து நாயக்கர்களுக்குப் பின் வந்த மராட்டிய மன்னர்களே வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ளனர். இம்மராட்டிய மன்னர்கள் வரிசையில், இன்றும் அழியாப்புகழ் பெற்று விளங்கும் மாமன்னர் சத்திரபதி சரபேந்திரபூபாலர் என்கின்ற,சரபோஜிமன்னரேயாவார். இவர் துளஜா மகாராஜாவின் சுவீகாரபுத்திரர் என்றும், இவர் ஆட்சிக்காலம் கி. பி. 1798 முதல் 1832 முடிய என்றும் வரலாற்றால் அறியக் கிடக்கின்றது.

இம் மாமன்னர் சரபோஜி, உலகத்திலே அழியாப் புகழ்பெற்று எந்நாட்டவரும் கண்டு களிக்கும் வண்ணம் கலைக்கோவில் எனத்திகழும் சரசுவதிமகால், சங்கீதமகால், தன்வந்திரிமகால் போன்ற 18 மகால்களை அமைத்தார். அதில் "தன்வந்திரிமகால்" என்ற வைத்திய ஆராய்ச்சிக் கழகம் மன்னர் சரபோஜி வைத்தியத்துறையில் ஆற்றிய அரும்பணிகளைப் பற்றிக் கூறுகிறது.

அரசர்கள் 32 வகை ஆயுதங்களுடன் நான்கு வகைச் சேனைகளையும் காலமறிந்து பகைவர்களை வென்று உயிர்

களைக் காப்பதுபோல் தேவ சிகிச்சை-1, இராக்கத சிகிச்சை-1, மானிட சிகிச்சை-30 என்கிற சிகிச்சாயுதங்களையும், ஔஷாதியென்கிற நால்வகைச் சேனைகளையும் கொண்டு காலமறிந்து வியாதிகளென்கிற பகைவர்களை வென்றார் மன்னர் சரபோஜி. வைத்திய முறைகளை மக்கள் அறிந்து கொள்ள வைத்திய ஆராய்ச்சிக்கழகம் என்னும் தன்வந்திரிமகாலை ஏற்படுத்தி, சித்த வைத்தியம் முதலான மருத்துவங்களின் அனுபோகங்களில் சிறந்த பண்டித சிரோன்மணிகளைக் கொண்டு, தமது ராஜ குடும்பத்திற்கும், நகரவாசிகளுக்கும் உபயோகமாகும் பல விசேஷ திரவியங்களைச் செலவிட்டு மருந்துகளைக் கையாண்டு வந்த அனுபோக முறைகளை மராட்டிய மொழியில் வசன நடையிலும், தமிழ் மொழியில் செய்யுள் வடிவத்திலும் ஓலை ஏட்டுப் பிரதிகளில் எழுதி வைக்கச் செய்தார். அச் சுவடிகளை இன்றும் சரசுவதிமகால் நூலகத்தில் காணலாம்.

இவர், நமது சரீரத்தில் அமையப்பெற்ற ஒவ்வொரு அங்கத்திற்கும் தனித்தனி முறையில் வைத்திய முறை கூறியுள்ளார். அவை 18 தொகுதிகளாகும் அம்முறையில் முதலில் இடம் பெறுவது ஐம்பொறிகளில் முக்கியமான கண், காது, நாக்கு, மூக்கு, இந்நான்கும் அடங்கிய சிரசேயாகும். "எண் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்" என்னும் பழமொழியும் நம் நினைவிற்கு வருகிறது. ஆகவே இந்த நான்கும் அடங்கிய சிரசுக்குச் சிகிச்சை செய்யும் முறைக்கு சிரோரோக சிகிச்சை என்று பெயர்.

இந்த சிரோரோக சிகிச்சையில் தனிப்பட்ட சிரோ ரோகங்களன்றி மூக்கு நோய், வாய்நோய், உதடு, பற்களின் நோய்கள், காது நோய்கள், தொண்டையிலேற்படும் நோய்கள் முதலியவை பற்றியும், அவைகளின் குறிகுணங்களைப் பற்றியும் விளக்குகிறது. கர்ணசூலை, வாதகர்ண சூலை ரோகம், பித்தகர்ணசூலை ரோகம், கபகர்ணசூலை ரோகம், இரத்த கர்ணசூலை ரோகம், ஸந்நிபாத கர்ண

சூலை ரோகம், கர்ணநாதம், கூசிகர்ணம் இது போன்ற இன்னும் பலவகை காது நோய்கள் உள்ளன.

மருந்து

காது மந்தம், வாய்வுக்கு மருள் எண்ணெய் :

மருள்வேர் (சாறு) 1 சேர், நல்லெண்ணை 1 சேர், இவைகளை ஒன்று சேர்த்து வசம்பு 1 காசு எடை, சுக்கு 1 காசு எடை, மிளகு 1 பலம், பூண்டு 1 பலம் இவைகளை இடித்து எண்ணையுடன் கலந்து சிவக்கும்படி எரித்துப் பதத்திலிறக்கிக்கொண்டு தலையில் தேய்த்துத் தினந் தோறும் ஸ்நாநம் செய்துவந்தால் காதுமந்தம் வாயு முதலியவை தீரும்.

இங்ஙனமாக சிரோரோகத்தில் அடங்கிய ஒவ்வொரு வியாதிக்கும் தனித்தனியாக ஆயுர்வேத முறையில் மருத்துவம் கூறப்பட்டுள்ளது.

அடுத்து ஐம்புலன்களில் முக்கியமானது கண். அக் கண்களின் அமைப்பு, அவற்றில் உண்டாகும் வியாதிகளுக்கு மருத்துவமும் கூறுவது நயன ரோக சிகிச்சையாகும். இந்த நயனரோக சிகிச்சையை ஆராய்ந்து பார்த்தால் கண்களுக்கு இத்தனை வியாதிகள் உண்டு என்பதை அறியலாம். அவற்றிற்கான சிகிச்சையும் கூறப்பட்டிருக்கிறது. கண் உறுப்புகளுக்குள் சென்று மிகக்கடுமையாகப் பாதிக்கும் கண் நோய்கள் கண்கலக்கம், கண்வீக்கம், பீளைசாரல், கனத்தல், அனத்தல், கண்களில் வலி, கண்களில் சிவப்பு, இரைப்பையில் குத்துவலி, இமைகளினடியில் உருத்தல், கண் கூச்சம், பார்வைக் குறைவு முதலியன. இவ்வியாதிகளுக்கு நயனரோகசிகிச்சை என்ற நூலில் மருந்துகள் கூறப்படுகின்றன. ஆயுர்வேத முறைப்படி கண்களிலேற்படும் ரோகங்கள் 94 ஆகும் என அவர் மருத்துவத்தினால் அறியப்படுகிறது.

அடுத்து இவர் வைத்திய சாத்திரத்தில் இடம் பெறுவது காச, சுவாச சிகிச்சையாகும். இவற்றில் வாத காச இலட்சணங்கள், பித்தகாசத்தின் குறிகள், கபகாசத் தின் குறிகள், சுவாசம் வருகின்ற விதம், பிரதமகம், காச ரோகம் முதலான சிகிச்சைகள் அடங்கும். இவ்வியாதி களுக்கு இவர் சித்த வைத்திய முறைப்படி மருத்துவம் கூறு கிறது. உதாரணமாக,

இருமலுக்கு சுக்காதிக் கற்பம் :

சுக்கு, திப்பிலி, கடுக்காய்த் தோல் இம்மூன்றையும் சரி எடை எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு அதில் தண்ணீர் சிறிதுவிட்டு. அம்மியின்மேல் வைத்து, நேகவரைத்துக்கொண்டு அவ்விழுதில் ஒரு கொட்டைப்பாக் களவு எடுத்துத் தேனில் குழைந்துச் சாப்பிடவும். இருமல் தீரும். இம்முறை அவர் அனுபவ ரீதியில் கண்டதேயாகும்.

குன்மரோகசிகிச்சை என்ற தொகுதியில் எட்டுவிதக் குன்மங்களையும் அவற்றிற்கான மருத்துவத்தையும் கூறு கிறார். குன்மரோகம் என்பது வயிற்றில் உண்டாகும் வியாதிகளைப்பற்றிக் கூறுவது வாயுக்குன்மம், வாதக் குன்மம், பித்தக்குன்மம், கபக்குன்மம். சன்னிக்குன்மம், எரிக்குன்மம், சக்தி குன்மம், வலிகுன்மம் முதலியன.

அடுத்து நீரிழிவு சிகிச்சை என்ற தொகுதியில் நீரிழிவு, பிரமேகம், பிரமியம், மேகம், வெட்டை என்ற பலவகை மூத்திர ரோகங்களுக்கான முறைகளும் அவற்றிற்கான சிகிச்சைகளையும் கூறுகிறார். இவை பிரமேகம் என்ற இருபது வகை ஜலரோகங்களையும், மேகநீர், மேகப்புண் முதலிய தோலைப்பற்றிய வியாதிகளையும் கூறுகிறது.

வாதரோகசிகிச்சை என்னும் தொகுதியில் மனோ வியாதிகள், தேக வியாதிகளைப்பற்றிக் கூறுகிறார். மனோ வியாதிகளுக்கு ரஜோகுணமும், தமோகுணமும் காரணங்க ளாகும் என்றும், தேக வியாதிகளுக்கு பயம் முதலியன

காரணங்களாகும் என்றும் கூறுகிறார். வாத பித்த, கபங்கள் செய்யும் வேலைகள் பற்றியும், பித்தம், கபம், வாதத்தின் ஸ்தானங்கள், வாதத்தின் வகை, பித்தத்தின் வகை, சிலேஷ்மத்தின் வகை வாத வியாதிகளின் பொதுவான சிகிச்சை முதலியன பற்றிக் கூறுகிறார்.

உதாரணமாக **அண்டவாதத்திற்கு மருந்து :**

வெள்ளைப்பூண்டுத்திரி, வெங்காயம், முடக்கொத்தான் கொழுந்து, கழற்சிக் கொழுந்து இவை வகைக்கு 3 பிடி தனித்தனியே வேக வைத்து 1 உரி ஆமணக்கெண்ணெயிற் பிசைந்து வெயிலில் வைத்து 3 நாள் ஒரு வெருகடிப் பிரமாணம் வீதம் வெற்றிலையில் வைத்து, காலையில் சாப்பிட்டு வீக்கத்தின் மேலும் பூச அண்டவாதம் தீரும்.

ஜுரரோக சிகிச்சையில் ஜுர உற்பத்தி, ஜுரத்தின் வகைகள், வாத, பித்த சந்நிபாத ஜுரத்தின் வகைகள், லக்ஷணங்கள், பூர்வரூபம், ஜுரத்தின் குறிகள் கூறப்படுகின்றன. ஆகந்துக ஜுரவகைகள், தாதுகதஸ்வரங்களின் இலக்ஷணங்கள் கூறப்பட்டுள்ளன.

பாண்டு, காமாலை சிகிச்சையில் பாண்டுநோய் வரும் காரணங்கள் ஏற்படும் விதம், காமாலையின் வகைகளான வாதகாமாலை, பித்தகாமாலை, சிலேத்தும காமாலை, பித்தவாத காமாலை, மஞ்சட்காமாலை, ஊதுகாமாலை முதலிய பலவகையான காமாலைகளின் வகைகளும், அவற்றின் இலட்சணங்களும் ஆங்கில முறைப்படி குறிகுணங்களும், சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன.

உதாரணமாக **கைகால் வீக்கத்திற்கு மருந்து :**

ஆவாரம் பட்டை, சுக்கு இவ்விரண்டையும் சமனெடையெடுத்து 8 மடங்கு ஜலம்விட்டு, எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டிச் சாப்பிடக் கைகால் வீக்கம் தீரும்.

விஷரோக சிகிச்சையில் விஷத்தின் பொதுவான குணங்கள், ஸ்தாவர விஷ நிதானம். பாம்புக்கடியிலுள்ள பேதங்கள், விஷக்கடிக்கும், விஷமற்ற கடிகளுக்கும் உள்ள பேதங்கள், ஸர்ப்ப உற்பத்தி, ஸர்ப்பங்களுக்கு எதிரிகள், விஷத்தின் இருப்பிடம். ஸர்ப்பங்களின் ஜாதிகள், விஷப் பற்களின் கடி லக்ஷணம், விஷப்பரீக்ஷை, பாம்பு கடிக்கக் காரணம், மரணலக்ஷணம், இன்னின்ன தினங்களில் கடிக்கும் பாம்புகளின் பேதமும், விஷம் இருக்கும் இடமும், நல்ல பாம்பு கடித்தால் அதிலிருந்து உண்டாகும் வேகங்கள் முதலியனவும், சிலந்தி, எலி, வெறிநாய், தேள் முதலிய வற்றின் விஷங்கள் பற்றியும், சிகிச்சையும், மேலும் அரளி, சேங்கொட்டை, ஊமத்தை, எட்டிக்கொட்டை, அபினி, கஞ்சா, நாபி முதலியவற்றின் நஞ்சு பற்றியும் கூறுகிறது.

உதாரணமாக **எலிக்கடிக்குச் சாறடை ரொட்டி :**

ஒரு பிடி பச்சையரிசியுடன் முற்றிய சாறடைவேர் இரண்டையும் சேர்த்துத் தண்ணீர் விட்டு ஊறவைத்து நன்றாக அரைத்து அடை தட்டிச் சாப்பிடவும். பசுவின் நெய்யில் தோய்த்து உட்கொள்ளவும். 18 வித எலிகடிகளும் 3 நாட்களில் தீரும்.

அடுத்து இவர் வைத்திய சாஸ்திரத்தில் இடம் பெறுவது விரண ரோகம், கரப்பான் ரோகம் ஆகிய சரும நோய்களாகும், இதில் இவர் முதலில் விரண சிகிச்சைக்குத் தேவையான ஆயுதங்களைப் பற்றியும், அவற்றைச் சுத்தமாகக் கையாள வேண்டிய முறைகள் பற்றியும் கூறுகிறார். சரும நோய்களான பிளவை, புற்றுநோய், குஷ்டம் முதலிய பல நோய்களுக்கும் குறிகளும், அவற்றிற்கான சிகிச்சை முறைகளும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பல மேல் நாட்டு மருத்துவர்களாலும் குணப்படுத்த முடியாத சில புற்றுநோய்கள் சரபோஜி மன்னரின் வைத்திய சாஸ்திரத்தில் கண்ட முறைப்படி சிகிச்சை செய்து அதனால் அந்நோய் தீர்க்கப்பட்டன என்று சில உண்மைகளால் அறிய முடிகிறது.

அடுத்து பித்தரோக சிகிச்சை என்னும் தொகுதியில் பித்தத்தினா லுண்டாகும் பலவித நோய்கள் பற்றியும். அவற்றிற்குப் பயன்பெறக்கூடிய மருந்துகள் பற்றியும் அவை கையாள வேண்டிய முறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. சாத்திரங்களில் கூறப்படும் பித்தத்தின் வகைகளான பாசகம், ரஞ்சகம், ஸாதகம், ஆலோசகம், ப்ராஜம் முதலிய 5 வகைகளைப் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பித்தத்தினால் உண்டாகும் 10 வகைப் பயித்தியங்களையும் பற்றிக்கூறுகிறது. அவைகளுக்குச் சித்தவைத்திய முறைப் படி மருத்துவம் கூறப்படுகின்றது.

உதாரணமாக **பயித்தியம் பிடித்தவனுக்கு நசியம்** :

வெள்ளைச் சாரணைவேர், ஈரவெங்காயம் இவை இரண்டையும் இடித்துப்பொட்டணம் கட்டிக்கொண்டு இரண்டு துளி இரண்டு மூக்கிலும் நசியம் செய்தால் பயித்தியந் தீரும். இவ்வாறு 3 நாட்கள் செய்யவும்.

அடுத்து பேதிமுறைகளும், அதிசார சிகிச்சையும் பற்றிக் கூறப்படுகின்றன.

வாதாதிஸாரம், பித்தாதிஸாரம், கபாதிஸாரம், திரி தோஷாதிஸாரம், பயாதிஸாரம், துக்காதிஸாரம், ரத்தாதி ஸாரம் என அதிஸாரம் ஏழும் விளக்கப்பட்டுள்ளன. கிர கணிரோக லக்ஷணங்கள், அதிஸாரநிதானம், கிரகணி நிதானம் முதலியனவும் கூறப்படுகின்றன. இவற்றிற்கு மருத்துவம் பெரும்பாலும் ஆயுர்வேத முறையில் அடங்கு கின்றன.

அடுத்துக் கூறப்படுவது உளமாந்தை, க்ஷயரோகச் சிகிச்சையாகும். இதில் உளமாந்தைகளின் வகைகளான வாத உளமாந்தை, பித்த உளமாந்தை, கபஉளமாந்தை, தொந்த உளமாந்தை முதலியன பற்றிக் கூறப்பட்டுள்ளன. பிறகு க்ஷயரோகங்களின் வகைகளான பிர்மக்ஷய லக்ஷணம்,

ராஜக்ஷயம், வைசியக்ஷயம், சூத்ரக்ஷயம், பித்தக்ஷயம், வாத க்ஷயம், சிலேத்துமக்ஷயம், வாதபித்தக்ஷயம், வாதசிலேத்தும க்ஷயம், பித்தசிலேத்துமக்ஷயம், விகாரக்ஷயம், தொந்தக்ஷயம் சாத்யக்ஷயம் முதலியன பற்றியும் க்ஷயரோகத்தின் நிதானம் குறிகள், காரணங்கள், உளமாந்தை ரோகக் காரணங்கள் முதலியவைகளும் கூறப்படுகின்றன.

செல்வத்துள் எல்லாம் சிறந்தது மக்கட்செல்வம் என நம் முன்னோர்கள் உரைத்தனர். அச்செல்வத்தைப் பெரும் பேறாகக் கருதிய மன்னர் சரபோஜி அதற்கென்று ஆயுர் வேதத்தில் ஒரு தனிப்பகுதியை விவரித்திருக்கிறார். அது கர்ப்பிணி பாலரோக சிகிச்சை முறைகள் என்ற பகுதி யாகும்.

இதில் கர்ப்பம் ஏற்படுவதற்கான ஏதுக்கள், ருதுவின் லக்ஷணங்கள், சரியான கர்ப்பம் தரிப்பதற்காக ஸ்திரீ, புருஷர்கள் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள், கர்ப்பம் மாதந் தோறும் வளர்ச்சியடையும் விதம், கர்ப்பம் போஷிக்கப் படும் விதம் முதலியவைகள் கூறப்பட்டுள்ளன. மேலும் கர்ப்பிணியின் ஆகாரமும், போஷணை விதிகளும், கர்ப்பிணி செய்யக்கூடாத காரியங்களும் அதனால் ஏற்படும் தீமைகளும், அகால பிரசவத்திற்குக் காரணங்கள், கர்ப்பம் தரித்த பின்னர் ஏற்படும் கோளாறுகளும் அவற்றிற்குச் சிகிச்சை முறையும் கூறப்பட்டுள்ளன.

இனி குழந்தைகளுக்கென்று தனிப்பட்ட முறையில் குழந்தைகள் கணச்சூட்டுக்கு மருந்துகள், மாந்த எண்ணெய், பேதி எண்ணெய், உரம் விழுந்த பிள்ளைகளுக்கு மருந்து. தோஷத்திற்கு, குழந்தைகள் புஷ்டியுடன் இருக்க, கீரி நோய்க்கு, கீரிப்பூச்சி நோய்க்கு முதலிய குழந்தைகளின் வியாதிகளுக்குச் சித்த வைத்திய முறைப்படி மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

மன்னர் சரபோஜி மக்களுக்கு மட்டுமின்றி மாக்களுக் கும் வைத்திய முறைகளைச் சேகரித்தும், எழுதியும் வைத்

துள்ளார். நமது பழைய வைத்திய நூல்கள் மிருக வைத்தியமும், பக்ஷிகளின் வைத்தியங்களையும் பற்றிக் கூறுகின்றன. இருப்பினும் மன்னர் சேகரித்து வைத்திருந்த மிருக வைத்திய, பக்ஷி வைத்திய முறைகள் பற்றிய ஏட்டுச் சுவடிகள் மிகக் குறைந்த அளவிலேதான் கிடைத்துள்ளன. அவற்றிலிருந்து ஓரிரு வைத்திய முறைகளே கூறப்பட்டுள்ளன. முதலில் கூறப்படுவது மாட்டு வாகடம் என்னும் பசு, காளை மாடுகளின் வைத்தியமாகும். இதில் மாட்டினங்களின் தேக அமைப்பும், வளர்க்கும் முறைகளும், நோய் காணும் விதங்களும் அந்நோய்களுக்கேற்ற நம் நாட்டு வைத்திய முறைகளும் கூறப்பட்டுள்ளன. பசுக்களின் மகத்துவம், மாடுகளின் ஆயுள், அவைகளின் பற்கள், நல்ல தேக அமைப்புப்பெற்ற மாடுகள், உசிதமில்லாத தேக அமைப்புள்ள மாடுகள், அவைகளின் நிறம், சுழிகளின் தன்மை, மாடுகளைப் பராமரிக்கும் முறைகள், தீனி, குளிப்பாட்டும் விதி, மாட்டுக்கொட்டில் அமைக்கும் விதம், சினை மாடுகள், கன்று இவைகளைப் பாதுகாக்கும்முறை முதலியனவும், பிறகு மாடுகளுக்கு வரும் நோய்களான அழல் வெக்கை நோய், உடுக்கை நோய், கருவடிநோய் போன்ற இன்னும் பலவித நோய்களுக்குச் சிகிச்சை முறையும் மருந்தும் கூறப்பட்டுள்ளன. மேலும் மாடுகளைப் பந்தயங்களுக்குப் பயிற்சிதரும் முறையும் விளக்கப்பட்டுள்ளன.

அடுத்து குதிரை வைத்தியம். இதில் குதிரைகளின் பிறப்பு வரலாறு, உபயோகங்கள், பெருமை, குணங்கள், அவைகளின் பற்களைக்கொண்டு வயதுகளை அறியும்முறை, தேகத்தின் சுப, அசுப லக்ஷணங்கள், நிறங்களின் பிரிவுகள், பஞ்சகல்யாணி, அஷ்ட கல்யாணி, முதலிய குதிரைகள் பற்றியும், குதிரைகளுக்குண்டான கிளிஞ்சல் சுழி, கொடிச் சுழி, மல்லி மொக்குச்சுழி முதலிய 10 சுழிகளின் அமைப்பும், குறிகளும் கூறப்பட்டுள்ளன. அத்துடன் குதிரைகளுக்கு வரும் அண்டசாலை நோய், அரணைகடிக்கு, கமரி நோய், கத்த சூலைநோய், கல்வைநோய், குளம்பு வெடிப்புக்கு முதலிய எண்ணற்ற பலவித நோய்களுக்கும், அவற்றிற்

கான சித்தவைத்திய சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன.

அடுத்து பக்ஷிகளின் வைத்திய முறைகளில் கோழி வைத்தியம், கூறப்பட்டுள்ளன. கோழிகளுக்கு வரும் நோய்களான அகிலி, அம்மை, அஜீரணம், கழிச்சல் நோய், கொக்கு நோய், கருப்பு உருண்டை, தலைநோய், நடுக்கல் வியாதி, பூச்சி (பேன், சள்ளு) உடல் பருக்க, வாந்திக்கு மருந்து போன்ற நோய்களின் தன்மையும், சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளதோடு சேவல் சண்டையும், சண்டைச் சேவல்களையும் பயிற்றுவிக்கும் முறைகளும், வளர்க்கும் விதங்களும் கூறப்பட்டுள்ளன.

இன்னும் அகத்தியர் 2000, போகர் நிகண்டு, சரபேந்திர வைத்திய ரத்னாவளி முதலான பல வைத்திய நூல்கள் அனுபவ சித்தமான முறைகளை விளக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த வைத்திய நூல்களின் பிரதிகள் எமது நூலகத்தில் வெளியிட்டு. விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. மன்னர் வளர்த்த வைத்திய நூல்களில் பல இன்னும் நல்லபலனைத்தந்து பல மக்களையும் காத்து வருகின்றன. எனவே நாம் அனைவரும் அவர்தம் நூல் கொண்டு பலன்பெற்று அவர்தம் நாமம் வாழ்த்தி வாழ்வோமாக.

வாழ்க சரபோஜியின் நாமம் !

SIDELIGHTS ON THE ANNEXATION OF THE
TANJORE KINGDOM
IN 1855 A. D.

Modi Pandit T. K. NAGARAJA RAO and
Major N. B. GADRE.

A large amount of record is available in the English language on this subject. Barrister John Bruce Norton had actually filed a suit in the Madras Supreme Court in 1856, immediately after the 1855 annexation, on behalf of the aggrieved parties and their relatives; and appeals went upto the privy council in London. Consequently, a considerable amount of contemporary literature from the original documents featuring in that case has stuck to the Archives permanently. Even a large quota of newspaper reports is available to the research student, while Indian as well as Britis writers of books on this subject, large and small, have hardly left anything unsaid. Such remarks as the authors may make in this article stand very little chance of putting forth anything new.

And yet there is a valied excuse for writing the article. No effort has so far been made to corroborate such accounts of the annexation with Marathi papers on record, and as the people and rulers of Tanjore then dealt in Indian languages only, all the English books are stories as they are told, and not a record of what-actually took place then on paper. The Marathi records available to the present authors are only the less important ones namely 'part C of Tanjore Raj Records' catalogued during 1952-53 which were "marked for destruction"; and contents of this article can be very greatly improved if the files then carried to and deposited at Madras are searched. Until that can be done by more competant hands at a later date, this article might fill the gap.

Relevant documents may be available in other Archives of Maratha principalities watching the annexation proceedings and earlier events, from a distance; and some of them might have reached the collections of research workers renowned for their studies. No positive indication of any of these, however, is available at present.

SANCTIFIED INJUSTICE

Like the Pouranic chastisement and downthrow of Asur King Balirajah by Almighty Maha-Vishnu in Vaman (dwarf) incarnation, the annexation of Tanjore State by the East India Company first, and by the British crown subsequently, has been described by one and all as

extremely unjust and totally unbecoming of the fair name of Queen Victoria and of the great reputation of British love for justice. Balirajah at least got in the end a promise of promotion to Indraship in the subsequent Manwanter (i. e. epoch); none can imagine that the family then deprived of the Tanjore rulership can hope. at least for a small period any Rajyapal-ship in liberated India!

While disposing finally the Kingdom and private property of the Tanjore Rajas by their order No. 705 dated 5th December 1859, the Madras Government, with the backing of Calcutta and London, wrote* as under :—

"The result (Privy Council) Lordship's opinion is that the property now claimed by the respondent has been seized by the British Government acting as a soverign power, through its deligate the East Indian Company; and that act, so done with its consequences, is an Act of State, over which the Supreme Court of Madras has no jurisdiction".

This argument of the Madras Government amounts to saying that because justice was beyond their jurisdiction, therefore they had no course open to them except that of substantiating and perpetuating an injustice with all power behind them.

DOCUMENTS NOW CONSIDERED:

The Marathi papers in Part C of the Tanjore Raj Records, mentioned above, have yielded to

us on a first glance about a hundred items of note, the summary of which appears on pages 8 to 16 hereafter. The following is a brief appreciation of those items :—

	Item Numbers :
King Shivaji's birth and early childhood	1-5
King Shivaji's position and dealings concerning his household and charitable institutions, and a record of certain events which must have shaped later history.	11-15 ; 17-18 ; 21; 27; 29; and 33
King Shivaji's position in State affairs and dealings with subjects	6-10; 25: 30; 34-35
Dream of Shanker Bhatt Kale at Allahabad	16
Papers concerning Shivaji's marriage with 17 brides on one day	22-24
Queen Kamakshibai's action in court against the East India Company	93-94; 100
State of confusion and helplessness immediately after Shivaji's death, during the years 1855-57. and the increasing influence of Company's officers and the English language.	36-45; 48-57;59-71 73-78 101
Lists of property and personnel involved	46;47;58; 72 90-91;96-99
Control of "Commissioner" established	79-89
Normal procedure under British Rule	102-107

* Vide page lxxxiv of Hicky's "Tanjore Maratha Principality in South India".

The above is by no means an exhaustive list. Many more items of greater weight than those here enumerated by us, can be found on a thorough search; but the above serves our purpose of introducing to our readers the possibilities in this direction. From these papers, the next two pages show facsimile reproductions of serial Nos. 16 and 94.

THE ABSENCE OF AN HEIR-APPARENT

As in the case of several other Indian kingdoms annexed by Lord Dalhousie, Tanjore also was taken over by the British as vacant jurisdiction in the absence of an heir-apparent. How the British had any right above any or all Indians in that state or elsewhere has been well summarised above by the single word "Sovereign Power". That sovereign power came to them by their arm alone — the first, if you may so please to call it. King Shivaji as he grew in years without a male issue was greatly worried on this point Having exhausted all hopes of normal human ambition he propitiated Lord Shiva in Tiruvadi and Kumbakonam several times, and performed the several other rites prescribed in the scriptures and purana volumes for begetting a son.

During 1846 one Brahmin Shankar Bhatt Kale wrote to King Shivaji from Allahabad (vide full copy in Dev Nagari) (Marathi in facsimile of item 16) that he (the brahmin) had been told by God Veni Madhav in his dream that a certain Mantric "Yantra" may be copied,

worshipped and tied into the heir of the queen in the hope that within two or three months thereafter the signs of pregnancy may appear and bless her with a son. Shivaji perhaps did act upon this advice but did not succeed.

Out of sheer exasperation he appears to have hit upon the extraordinary idea which he put into practice during 1852 vide items 22-24. His men went round to Kolhapur, Satara, Konkan etc., and spent large sums of money in negotiating as many as seventeen brides, who were all brought to Tanjore and married to King Shivaji in the same pandal on the same day. What the girls or their relations must have been told in their home-town baffles imagination! Result by way of male issue was nil; but apart from the funny side of the event, the authors feel inclined to believe that the unfortunate king must have brought upon himself considerable ridicule amongst his relatives and subjects, and alienated their sympathy.

EARLIER EXPERIENCES OVERLOOKED

The delay and hurry in the adoption of Sherfoji by King Tulajaji during 1787 had brought a considerable amount of trouble to King Serfoji and great losses of political power to the Tanjore State; and King Serfoji in his turn had taken with great prudence many advance steps to persuade the Company's Directors in London to put on record their acceptance of his own self-born son Shivaji as the next heir-apparent. Knowing those past events so well and seeing

before his eyes the Nagpur and other principalities in India lapsing to the East India Company in the absence of an heir. it is most regrettable that King Shivaji took no positive steps to declare in 184[illegible] or so his wishes to adopt his own nephew Rajaram as his heir-apparent instead of going in for the akward activities described above. In fact the Government of Madras had already issued a strict general note of warning (as contained in their modification of 1[illegible]th March 1346) that they will reject after 1st January 1847 all claims of adoption wherein due notice was not received by them atleast 6 months before the death of the adoptive father. As King Shivaji was a friend and ally. and not a vassel of the East India Company. a timely declaration by him about his heir-apparent would have been accepted; and the Pensioner princes of Tanjore from 1885—1948 would probably have continued as ruling princes. Queen Kamakshibai and Barrister John Aruce Norton would have been saved all the trouble and worry.

Mr. K. R. Subramanian has written in his small book "Maratha Rajas of Tanjore" (1928 Edition. page 75) as under :—

"Had the people no feeling of sorrow for the departed Raj, or had they no courage to express it ? No true psychologist can fail to notice the deepest loyalty of the Indian nation to its "Rajas". and at the same time its highly peaceful nature. But lovers of peace must have the strength to maintain it. For more than half a century the Tanjore

people had looked to the British as their rulers who led them on into the fuller modern life".

It is true that even a peace loving nation must keep its strength and will-power at a high level for peace itself. That is a lesson for all nations in all centuries and all continents; but the authors do think that in this particular case the case of Tanjore in 1855, went wrong, by King Shivaji's specific faults of omission and commission as detailed here,

THE BRAVE QUEEN KAMAKSHI BAI

It is a fact that Queen Kamakshi Bai did not fight and die in the battle-field like Ranee Lakshmibai of Jhansi. But even so what she did achieve in the Supreme Court at Madras and at the Privy Council in London. with the help of Barrister John Bruce Norton, was worth a great deal The conduct of the case, and the judgement about "Act of State by a Sovereign Power" has blackened the moral stand of Britain for all time to come. Britain was not a sovereign power over Tanjore by treaty rights and it had taken wrong advantage of its sheer brute force; and the proof of this in a British Court of Law itself, was certainly a moral victory of great value. In paper No. 94 listed with this article, we find Queen Kamakshibai appointing Barrister Norton on 8th November 1855 to plead for her; and for this purpose she had sworn for accuracy of her statements with salt and Tulasi leaves in her hand.

மாமன்னர் சரபோசி விழாக் கவியரங்கம்

மாமன்னர் சரபோசியின் 213-ஆவது பிறந்தநாள் விழாவையொட்டிக் கவியரங்கம் ஒன்று சங்கீதமகாலில் நிகழ்வுற்றது. தலைமையேற்றவர் நல்லாசிரியர், இலக்கியச் செம்மல் புலவர் சி. இளங்கோவன் அவர்கள். பாடிய பிற கவிஞர்கள் பாவலரேறு ச. பாலசுந்தரனார், நாவலர் அரசப்பனார், புலவர் வீ. சொக்கலிங்கசாமி ஆகியோர்.

தலைமைக் கவிஞர் புலவர் சி இளங்கோவன்
அவர்களின் பாடல்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்து

மூவேந்தர் தம்மடியில் தவழ்ந்ததமிழ்ச் செல்வி
மூன்றாகி வந்தவள்நீ மொழிகட்கோர் முதல்வி !
பூமாந்தர் தம்நாவில் வளர்க்கவளம் கொண்டாய் !
புலவர்களின் நாவிசையில் பொன்னாரம் பூண்டாய !
நாவேந்தர் பாவேந்தர் நயங்கூட்ட மகிழ்ந்தாய் !
நடைமுறையில் மக்களினம் வாழவழி வகுத்தாய்
பூவேந்திப் பொருளேந்திப் புலமைமிகு கவிஞர்
போற்றவந்தார் எம்முடனே நீயுமிருந் தருளே !

தமிழன்னை

அன்னையே ! எந்தம் அருந்தமிழே ! வையகத்தே 1
முன்னர்ப் பிறந்தமு தாட்டியே ! இன்றும்

உயர்மொழி செம்மொழி உற்ற தனிமொழி
மயல்தீர் இலக்கணம் வாய்த்தவோர் நன்மொழி

கன்னடத்தின் தாயே! கவின்மலை யாளமாம்
பொன்னியின் அம்மா! புகழார் தெலுங்கென்னும்

பெண்ணவளைப் பெற்றவளே! பேதை துளுவத்தின்
கண்ணவளே! எங்கள் கனிமொழியே! முக்காலும்

கன்னியாய் நின்றே களிப்பூட்டும் சீர்மகளே!
என்றுன்னைப் போற்றி இரு கரங்கள் தாம்குவித்துப்

பாடுதற்கே வந்தேன்யான் பாமணக்கச் சொன்மலர்கள்
நாடுமணக்கவே நல்லருள்செய் எம் தாயே!

புவியரங்கம் போற்றுகின்ற பொன்னார் தமிழ்மணக்கும்
கவியரங்கம் கேட்டுவக்கும் கண்ணார் தமிழ்ச்சான்றீர்!

ஒன்றா இரண்டா ஒருபத்து நன்மொழிகள்
நன்றாகக் கற்றுணர்ந்து நாட்டுநலம்போற்றும்

பன்மொழியில் பேரறிஞ! பண்பார் தமிழறிந்தார்
நன்மதிப்பைப் பெற்றவொரு நல்லபே ராசிரிய!

செந்தமிழர் தம்மினத்தின் சீராரும் காவலவர்
முந்து தமிழின் முதன்மைப்பே ராசிரியர்

கல்வி அமைச்சர் கலைஞர் புகழ்ச் செம்மல்
நல்லபல கட்சியினர் நயந்துமே போற்றுகின்ற

அன்பழகனார் போற்றும் அறிஞர் பெருந்தகையே!
என் நாவும் போற்றும் இனிய கவிதையினால்

சீரார் சரசுவதி செம்மையுறு பேரேற்ற
ஓர் மகால் நூலகத்தின் ஒப்பில் இயக்குநரே!

சொன்மணக்க யாத்துச் சுவைகூட்டும் நற்பாவை
மண்மணக்கப் பாடவந்த மாண்பார் கவிஞர்களே!

என்வணக்கம் சொன்னேன் இளங்கோ, சரபோசி
தன்புகழை மட்டுமிங்கே சாற்றிடுவேன் கேட்டருள்க!

ஆற்று வளம்பெருக்கி அண்டிவந்த நாட்டார்க்கும்
சோற்று வளந்தந்த சோழர் வளநாடும்

கத்தும் கடலும் திரையாகக் காவலர்க்கு
முத்தளித்துத் தாமுவக்கும் முத்தமிழ்த்தென் பாண்டியும்

ஆழக் கடல் கடந்தும் அன்னைமொழிப் பாவலர்க்கு
வேழக் களிறளிக்கும் வெல்சேரர் நன்னாடும்

கண்டு மொழியும் கனிந்திட்ட பேரறிவும்
கொண்டுவக்கும் சான்றோர்வாழ் தொண்டை வளநாடும்

வள்ளல் எழுவரால் வையப் புகழெல்லாம்
கொள்ளும் நலமேசேர் கொங்குத் திருநாடும்

கல்லும் கதைபேசும் கற்கோயில் கண்டமா 21
மல்லன் புகழ்பாடும் மாநாடு பல்லவமும்

முத்தமிழும் முக்கொடியும் மூன்று பெருவேந்தும்
எத்திசையும் போற்ற இருந்தாண்ட நாள்கழிய

நாம் என்னும் சொல்லின் நலமறந்த தன்மையினால்
ஆம் என்று ஆட்டும் அவலநிலை நாம் பெற்றோம் !

கறையான்கள் தாமுழைப்பில் கட்டிவைத்த புற்றில்
இரை தேடி நாகம் இடங்கொண்டாற் போலவே

வந்தே புகுந்தார் வடக்கிருந்தும் மேற்கிருந்தும்
சிந்தை மயங்கிநின்ற செந்தமிழர் தேசிழந்தார்

வந்தவரோ நாட்டு வளர்மொழியின் சீர்கெடுத்துக்
கொண்டு வந்த தம்மொழியைக் கோலோச்ச
விட்டுவைத்தார் 26

நாடிழந்தும் வீடிழந்தும் நல்லபண் பாடிழந்தும்
ஓடெடுக்கும் பாங்கினிலே உள்ளவர்தாம் நிற்கையிலே

வெள்ளையரும் வந்தார் விருதுகொண்ட சிற்றரசும்
மெல்ல மெல்லச் செத்த விலங்கேற்ற நம்நாடும்

வாணிகத்தைச் செய்து வயிற்றுப் பிழைப்பதனைத்
தானினைத்து வந்தார்க்குத் தாரணியாள் எண்ணத்தை

ஊட்டி வளர்த்தார் உதிர்த்துவிட்ட நெல்லிக்காய்
மூட்டை யென நாடாண்ட மூவருக்கும் பின்வந்தார்

ஆதலால் நாடே அடிமைத் தளையேற்ற
போதிங்கே ஆண்ட புகழார் சரபோசி

அன்னியரா ? நம்மவரா ? ஆய்வுநமக் கெதற்கு ?
நன்மையென்ன செய்துவந்தார் நாடுதலே நம்கடமை

இருளும் ஒளியும் இணைந்ததே இவ்வுலகம்
மருளும் அறிவுநலம் வாய்ந்ததே மக்களினம்

சத்துணவு தந்திங்கே தக்கபடி பாலீந்து
இத்தலத்து மாணவர்கள் ஏங்காமல் கற்றுவக்கப்

புத்தகம் தந்துமே போக்குவர வீந்த
அத்தன் கருணா நிதியைப்போல் அந்நாளில்

ஐயாறு போலே அமைந்திட்ட ஊர்களிலே
மெய்யாகச் சத்திரங்கள் மேலாகத் தாமமைத்து

உண்டி கொடுத்து உறைய இடங்கொடுத்துப்
பண்டுவந்த பன்னூல் பயில வகைசெய்த

மன்னர் சரபோசி மாப்புகழுக் கீடேது ?
அன்னவரைப் போற்றல் அருந்தமிழர் தம்கடமை

பொன்னான இந்நாள் புகலுமொரு செய்தி
புண்ணாகக் கொள்ளாதீர் !பொன்னாக ஏற்பீர் !

இடமொழிக்கு இல்லாத ஏற்றத்தை மன்னர்
வடமொழிக்கே தந்த வளமையினால் கற்றார்

சீர்சமஸ் கிருதமெனும் தெய்வத்தைப் பாடுகின்ற
ஓர் மொழியே கற்றார் உயர் தமிழோ அங்கில்லை

தென்னவனாய் மன்னவனாய்த் தீரனென ஆளவந்து
விண்ணூர்தி தன்னில் விரைந்தேகு மந்நாளில்

பேருலகம் சென்ற பெருமான் ஒரு தமிழன்
சீர்பன்னீர்ச் செல்வமே செந்தமிழுக் கவ்விடத்தில்

ஓர் பங்கு தந்தார் ; உவந்தார் தமிழ்மாந்தர்
நேர்கண்ட நேர்மையான் அவன்புகழே எம்நெஞ்சில் !

பொன்னாசை பெண்ணாசை போற்றுபொருளாசை
கண்ணாகக் கொண்டிருந்தார் காவலரெலாம் அன்று

மன்னன் சரபோசி மாக்கலைஞ னாயிருந்து
என்ன செய்தா ரென்பதனை இங்குநாம் பாடிடுவோம் !

அன்னியரா ? நம்மவரா ? ஆய்வு நமக்கில்லை
என்ன நலம் கண்டார் ? இதைமட்டும் கண்டிடுவோம் !

இருநூறு ஆண்டுகட்கு முன்னர்தாம் இங்கே
இருந்தவர்கள் என் செய்தார் என்று நாம் பார்த்தால்

வம்பிட்டார் வாய்ப்பேச்சில் வீரரென நின்றார்
தெம்பேதும் இல்லாமல் திண்ணைமடங் கண்டார்

அந்நாளில் புகழ்பூத்த பொன்மலரே ஆகிப்
பொன்னாரும் சீர்கலைகள் போற்றிப்புகழ் கொண்டார்

வையத்து அச்சான மொழிபலசொல் நூற்கள் 51
கையகத்துக் கொண்டே களஞ்சியமே கண்டார்

நாட்டியமா ? நாடகமா ! நல்லவிசை நூலா ?
ஏட்டிலே உள்ளவையா ? எல்லாம் எடுத்திங்கே

கொட்டிவைத்த செல்வக் குவியல் மகாலிலே
கட்டியே வைத்தார் கனகமணிப் பெட்டியிலே

சித்த மருத்துவமா ? தேர்ஆயுள் வைத்தியமா ?
மெத்தவுண் டிங்கேதாம் மேலாம் பணியாலே

பண்டை இலக்கணமா ! பதஞ்சேர் இலக்கியமா ?
கண்டுவர வுண்டு கலைசேர் மகால் தனிலே

செந்தமிழா சீர்தெலுங்கா தீரர் மராட்டியமா ?
வந்த வடமொழியா ? வையஞ்சேர் ஆங்கிலமா ?

எந்த மொழி நூலேனும் இங்கில்லை என்னாமல்
கொண்டுவந்து சேர்த்தார்க்குக் கோடிவணக்கம்
சொல்வோம்.

புலவனென வந்தவனைக் கவிஞனெனக் காட்டிப்
பொன்னான தலைமையினை எனக்குமகிழ்ந் தளித்துப்
பலப்பலவாய் எண்வகையில் மெய்ப்பாடே ஊட்டும்
பாநான்கின் கவிதையுறு அறிவுமணம் கூட்டும்
புலமைமிகு கவிஞரெலாம் புன்னகையே காட்டும்
பொன்னான கவியரங்கில் எனக்குவமை ஈட்டும்
பலவாய மொழிதேர்ந்த பன்மொழிப்பே ராசான்
பண்பிற்கோர் சதாசிவமாம் இயக்குநர்க்கென் நன்றி

அரசப்பனார்

சிம்மமெனக் குரல்காட்டி குறள்நெறியே நாட்டிச்
சிறுத்தையெனப் பாய்வதற்கோர் வலிமையினை
ஊட்டி
அம்மம்ம ! நின்கவிதை தென்றலன்று புயலே
அடுத்துவரு பகைநெருப்பை அணைக்கவந்த மேகம்
சும்மாநான் சொலமாட்டேன் தொன்மரபைக்
காட்டும்
சொக்கமுறு தங்கமெனச் சொல்லிமகிழ் வூட்ட
அம்ம ! ஒரு கவிதைமடல் தீட்டிமகிழ் வூட்ட
அரசப்ப ! நாவலரே ! கவிச்சிம்மம் வருக !

பாவலர்

காவலன் நீ இலக்கணத்தின் கரைகண்ட தாலே
கட்டமுதாய் இலக்கியத்தைப் பிட்டுணவே தந்தாய்
நாவலன் நீ மேடைதொறும் நற்றமிழ்ச்சொல்
எடுத்தே
நறுமலர்ப்பூச் சிந்திமணம் நாடெங்கும் குவித்தாய் !
நீவலவன் நால்வகைப்பா நினைக்கொஞ்சி மகிழும்
நினதாற்றல் நாடறியும் நன்னூற்கள் பாடும்
பாவலனே ! சீர்பால சுந்தரமே வருக !
பண்தவழ இசை கூட்டும் பாமணமே மலர்க !

சொக்கலிங்கம்

அரும்பாகிக் கட்டவிழ்த்துத் தேனினையே சொட்டும்
அல்லிமலர் எனக்கவிஞர் சொக்கலிங்கம் இங்கே
தருங்கவிதைச் சுவைகொள்ளும் சுவைஞர்களே ஆகி
தக்கபடி வந்திங்கே வீற்றுமகிழ் கொள்ளும்

சுரும்பாகும் தோழமையீர் ! சொட்டுகின்ற தேனைச்
சுவைத்திடுக ! சொற்றேனை உள்ள மெனும்
கூட்டில்
பெரும்பாகம் சேர்த்திடுக ! எனக்கவிதை மணக்க
பெருங்கவிஞ ! சொக்கலிங்கப் பேசுதமிழ் வருக !

முடிவு

நாவுக்கே அரசரெனும் நாவலராம் எங்கள்
நல்லதமிழ்ப் பண்பாட்டு அரசப்பனார்க்கும்
பாவுக்கே மன்னரெனுப் பாலசுந்தரனார்க்கும்
பழகு தமிழ்ச் சொக்கலிங்கப் பெயருடையார் தமக்
பூவுக்கே சென்றுமணம் பொருந்தவுள மேற்கும் [கும்
பொற்பாடும் அவைமகிழும் சான்றோர்கள் தமக்கும்
பாவுக்கோர் நல்லரங்கம் கண்டஇயக் குநர்க்கும்
பலமுறையும் நன்றியொடு வணக்கமிகச்
சொன்னேன்.

இந்தியக் குடியரசுத் தலைவர் விருதுபெற்ற
நாவலர் சி. அரசப்பனார் பாடியவை

தமிழ் வாழ்க

இன்பத் தமிழை எழில் தமிழை
இனிக்கும் தமிழை என்றென்றும்
குன்றாப் புகழின் முடி நிற்கும்
கோதில் தமிழை எந்நாளும்
செந்நா இனிக்க எண் சுவையும்
சேரப் போற்றிக் கவியரங்கம்
மன்னக் குவியும் சான்றோரின்
மகிழ்வைத் தேடி அலைகின்றேன்.

முத்தமிழின் இனிமைக்கு மூவேந்தர் புகழுக்கு
எத்திசையும் பண்பாடும் இலக்கியக் கவிஞருக்குச்
சித்தமொடு சொல்செயலும் ஒன்றாக்கும் வீரருக்கு
வித்தகனாம் சரபோசி வேந்தருக்கு என் வணக்கம்.

கவியரங்கத் தலைவர் புலவர் சி. இளங்கோவன்.

கோவை இளங்கோவன் ! கோவை இளஞ்சேரன்
சேவைக்கோர் பாவலனாம் செந்தமிழ்க்குச் சொக்கலிங்கம்
பாவல்லார் யாவருக்கும் பணிவான என் வணக்கம்
தேவைக் கவிகாணும் சிற்பிகளே ! கேளுங்கள்

அன்புடைக் கவிஞ ! ஆருயிர் நண்ப !
இன்பமும் நன்மையும் என்றும் மறந்திலை
வன்சொல் வன்செயல் என்றும் கொண்டிலை
கன்னல் மொழியும் கனிபோல் பண்பும்
என்னை மயக்கின யாரே மயங்கார் ?

வேறு

இன்முகமும் நல்லுரையும் கொண்ட மேலோர்
இளமைதரு செந்தமிழில் இன்பங் கண்டோர்
உள்ள வெல்லாம் நாடகமாய் உளத்தே கொள்வோர்
உள்ளொன்றும் வெளியொன்றும் கூறமாட்டார்
மேலோராம் அமைச்சருளம் மேவி நிற்பார்
நல்லோரை என்றைக்கும் மறக்க மாட்டார்
நாவலரைத் தோழமையாய் என்றுங் கொள்வார்
கழகத்தின் காளைகளை ஒன்று சேர்த்தான்
களிப்பூட்டும் வரலாறு கூட்டி வைத்தான்
அருங்குணக் குன்று அழகன் ஆற்றல்
பெருகியே வளரும் செயலின் வீரர்
பெரியாரும் அண்ணாவும் கஙிஞர் தாமும்
பேரா சிரியருடன் கலைஞர் கூடி
ஒருமித்து வாழுகின்ற தமிழர் பார்வை

உலகிற்கே பறைசாற்ற உவந்த தோழர்
அன்பினால் என் தம்பி; ஆதரவால் என் அண்ணன்!
இன்புறுநல் செயல்தப்பால் இனிய நண்பர்
உண்ணுவதும் உடுப்பதுவும் நாகரிகம்
பண்ணுவதும் பாடுவதும் படைக்கும் ஆற்றல்
எண்ணுவதும் எழுதுவதும் என்றும் வேலை
மண்ணுலகில் இவர்செயல்போல் பலரும் வாழ்ந்தால்
மாநிலமும் நானிலமும் புகழும் தானே.

வேறு

தோழமை என்றவர் கூறிய கூற்றிலே தினம் நிற்பார்
ஏழைமை கண்டு இரங்கி உதவிடும் பண்பாளர்
வாழ்வினை இமயத்தின்னொளி ஆக்கிட முயல்கின்றார்
தாழ்வினைத் தானே இடித்து நொறுக்கிடத் துணிகின்றார்
ஓய்விலை என்றும்' உழைப்பே அழைப்பார் உறுதியுடன்
தாய் போல் அன்பர் இதனால் இந்த அரங்கத்தே
இயக்குநர் போன்றோர் அழைப்பை ஏற்றோம்
நவில்கின்றோம் இன்புறுக! செந்தமிழ்க்கவிதை கேட்டே.

கலைவேந்தன் சரபோசி

அன்பிற்கே உறைவிடமாம் அண்ணல் வேந்தன்
ஆருயிர்கட் (கு) கின்பூட்டும் கலையின் மன்னன்
மன்றுள்ளோன் திருவடியே மனதில் கொள்வோன்
மாமன்னன் புரியாத செயல்கள் யாவும்
தொன்றுதொட்டு வந்த ஒலித் திறனினாலே
தொல்புகழும் நன்னயமும் தனதாய்க் கொண்டோர்
தென் தமிழர் உறவோடு ஆங்கிலேயர்
தெளிவுரையும் தாம்கொண்டு சிறக்க ஆண்டார்

கலைவேந்தன் நம்மன்னன் காசி சென்றோன்
கண்போன்ற கலையாவும் தொகுத்துச் சேர்த்தான்
மலைபோன்ற பகையாவும் அடித்து வென்றான்
மன்னர்களை மறந்திடுவான் மக்கள் யாரும்

கலை கூட்டும் மன்னர்மனம் மறப்ப துண்டோ?
கற்கண்டு மொழிபலவும் கற்றமேலோன்;'

விலையில்லாக் கலையாவும் நேர்த்தி யாக
வேண்டியவை வேண்டியவை மிளிர வைத்தான்

ஓவியங்கள் ஒருகோடி திரைச்சீ லைகள்
ஒண்சிற்பம் ஒருநூறு வண்ணத் தோடு
ஆவிநிகர் கலைகளென்றே அவற்றைத் தேர்ந்தான்.
அன்பறிவிற் கெல்லை யுண்டோ அவனி தன்னில்.
கோவிலொடு மகால்யாவும் இனிமை யாகக்
"கொள்க" என்ற வுணர்வோடு கூடிச் செய்தான்
பாவியலும் மருத்துவமும் இசையும் கூத்தும்
பாட்டரங்கும் உரையரங்கும் உணர்ந்த வேந்தன்!

உடற்பயிற்சி மனப்பயிற்சி உண்மை நாட்டம்
ஊர்தோறும் சாவடிகள் மற்போர் மன்றம்
மடந்தையரும் கூடியறம் வளர்த்து நிற்பார்
மன்னவரும் மக்களுமோர் சிந்தை கொண்டார்
வடபுலமும் தென்புலமும் ஒன்றே அன்றோ?
வளர்தமிழும் வடமொழியும் இருகண் அன்றோ!
படர்தொல்லை வறுமைபகை நோயின் துன்பம்
பக்குவமாய்ப் போக்குவது கலையால் அன்றோ?

வல்லினமாய் முரட்டொலியாய் விளங்கும் சொற்கள்
வளமைதரு பண்ணிசையால் மெலிந்து நிற்கும்;
நல்லினமும் தீயினமும் கலைகள் கண்டால்
நளினமொடு மென் மனமும் சொல்லும்
தோன்றும்
கல்வி, கலை கற்காத மாக்கள் தம்மைக்
கண்ணற்றார் என்றன்றோ கூற வேண்டும்
முல்லைமலர் நன்மணத்தால் நிறத்தால் வாழும்
முத்தனையார் கூந்தலுக்கும் அழகு நல்கும்.

அச்சுவடி வானதொரு அழகு நுட்பம்
அன்பறிவைக் கலைக்கூடம் ஆக்கி வைத்தார்
மெச்சுகின்ற மகால்கள் மிளிரும் போது
மேன்மைகளைத் தருகின்ற 'தர்ணா' வோடும்

கச்சையணி மாதர்நலம் காணுந் தோறும்
கடவுள்விழாப் பண்டிகைகள் பலவும் கண்டோர்
கொச்சைதரும் மதச்சமயம் பகைமை இல்லை
கூடுவதே மக்களறி வூட்டும் செய்கை

பலமொழியும் பலகலையும் ஒன்றே கூறும்
பாரதமும் தமிழகமும் பண்பால் ஒன்றே
மலையருவி சுனைமலர்கள் மகிழா ருண்டோ ?
மாமன்னன் கலைபலவும் விளங்க வைத்தான்
சிலைபோல அவன்நின்றான் இமையாக் கண்கள்
சித்தம் சொல் செயலெல்லாம் அறமே ஆனார்
புலையரென ஒதுக்கியவர் யாரு மில்லை
புலவரெனச் சிலபேரை வணக்கம் செய்தார்,

சிவக்கொழுந்து புகழ்ந்துரைத்த சரபோசி மன்னர்
சிவம் பெருக்கும் பெருங் குலத்துச் சரபேந்திர
பவச் சேற்றை அறியாது பழகிய குற்றம் [மன்னர்
பலியாது போகிவிடப் பலநூறு பூசை
சிவன்கோயில் ; மால் கோயில் ; பள்ளி வாசல்
செய்திறத்தால் அறங்காட்டும் மாதா கோயில்
தவமாற்றும் அந்தணரும் புலவர் தாமும்
பொதுத்தொண்டு புரிகின்ற சரபோசி ஆட்சி !

கல்லெல்லாம் சிலை ஆகும் ; களிமண்ணே வடிவாகும்
சொல்லெல்லாம் வாய்மைமொழி ; தொழிலெல்லாம்
கலையாக்கும்
நல்லுணவு அறுசுவையே நண்பரெலாம் பெருங்குழுவே
மல்லாடல், கவியரங்கம் உரையரங்கம் மகிழ்வூட்ட,
மக்கள் நலம் இன்பநலம் சமயநலம் காண்பார்

புகழ்பூத்த மன்னனவர் புகழாலே கோடி
இகழ்விகழ்ந்த சிறுசெயல்கள் இமைப் பொழுதில் மாறப்
புகழின்பம் பொருளின்பம் இன்ப ஊற்று
மகிழ்போதில் கொடைகோடி மகிழ்ந்து ஈவாம்
முல்லைமலர் துளசியோடு மகிழ்ந்து காண
மடந்தையரை அணிசெய்வான் கண்ணன் போலத்

திகழ் தஞ்சை மாநகரின் முதலோன் தூய
திருச்செயலை செயலாகச் செய்து வப்பார் !

வருவார்க்கு நல்விருந்து மகிழ்ந்து ஈவார்
வருவாரும் போவாரும் வணங்கிச் செல்வார்
ஒருகோடி நல்லின்பம் கண்ட வேந்தன்
பெருமையெலாம் ஒன்றாகக் கூடி வாழச்
சரசுவதி மகால், நூலகத்தைச்
சால்பில் செய்தார்
ஒருகோடிக் கல்விநலம் மக்கள் துய்க்க
ஓங்கியவோர் கலியாண மகாலும் கண்டார் !

உடன்கட்டை ஏறுதலும் உண்டு ; வீணில்
பதியிலார் நலங்காண மதியிலார் கூட்டம்
மடமைதனை நனிகாட்டப் பலரை மணம் புரிதல்
மக்கள் பேணாத செல்வர் கூட்டம்
திடமில்லா மனதாலே ஆட்சி மாற்றம்
தீயவரும் கூலியரும் ஆட்சிக் கட்டில்
படமுடியா தினித்துயரம் என்று கூறிப்
பண்பாளர் ஒதுங்கியது அந்தக் காலம் !

சரபோசி சிந்தித்தார் துணையும் கண்டார்
சான்றவரை மன்னவரை கலைஞர் தம்மை
அருளோடும் அன்போடும் அழைத்துக் கொண்டார்,
அவரவரின் தகுதிக்குப் பெருமை செய்தார் !

மருந்தென்ன ? மதியென்ன ? மகிழவழி என்ன ?
அருந்துபவர் அயலவரை ஏனோ காணார்
மருந்துயிரோ ? மகிழ்வுயிரோ அறமோ கூறீர் !
மக்களுயர் வெய்தஇந்தச் சுவடிச் சாலை.

பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழர் நாடு
பலவேறு இன்னல்களால் சிதைந்த துண்டு
மதிவல்ல சரபோசி நண்பாய் ஏற்றார்
தொண்டைமான் சேதுபதி ஆங்கிலேயர்

விதிமாற்றும் மேல் நாட்டார் பலரும் வந்தார்
விரித்தவலை தனில் வீழ்ந்தார் சுல்தான், நவாப்
சதிசெய்யப் பாளையங்கள் சமீன்தாரர்
சமயம் போல் பகைநட்பாய் மாறினார்கள்

கங்கையைக் கொண்டான் சோழன்மன்ன
காசியில் நின்றான் சரபோஜி வேந்தன்
பொங்குபல நல்லறிஞர் கூட்டத்தோடு
புதுமருந்தும் சுவடிகளும் சேர்த்து வந்தான்
தங்குதடை இல்லாது எங்கும் சுற்றிச்
சமாதானம் நிலைத்துயர அறிவு கண்டான் !
மங்காத புகழுடைய அறிவுச் செல்வம்
மலிவாகத் தந்துவந்தான் தஞ்சையர்க்கே

அன்பிற்கே உறைவிடமாம் அண்ணல் வேந்தன்
ஆருயிர்கட் கின்பூட்டும் கலையின் மன்னன்
மன்றுள்ளோன் திருவடியே மனதிற் கொண்டோன்
மாமன்னன் புரியாத செயல்கள் யாவும்
தொன்றுதொட்டு வந்த இசைத் திறனால் இங்கே
தொன்னயமும் நன்னயமும் தனதாய்க்
தென்தமிழர் உறவோடு ஆங்கிலேயர் [கொண்டோன்
தெளிவுரையும் தாம்கொண்டே சிறக்க
வாழ்ந்தோன்.

பாவலரேறு ச. பாலசுந்தரனார் பாடியவை

தமிழ் வாழ்த்து : எண்ணும் எழுத்தும் .... நற்றமிழே

சரபோசி :

கரும்புமலி செந்நெலொடு கலிக்கும் தஞ்சைக்
காவலனாய்ப் பாவலனாய்க்கலை எட்டெட்டும்
விரும்பிநனி பயின்று கலை மாமகட்கோர்
வியன்கோயில் அமைத்தறிவுச் சுடர்எண்திக்கும்
அரும்பநறும் பணிபுரிந்திவ் வுலகம் போற்ற
அன்பறிவு நீதியருட் செங்கோல் ஏந்திப்
பெரும்புகழோ டாண்ட சரபோசி மன்னர்
பெய்கழல்சேர் திருமலர்த்தாள் போற்றுகின்றேன்

தலைவர் :

செல்லா நல்லிசைச் செந்தமிழ் தேர்ந்த
நல்லா சிரியர் என்னாசிரியர்
பாடுபெறு பைந்தமிழ் மேடை நாடகம்
பீடுகொள வரைந்தும் பெட்புறு சிறுகதை
கட்டுரை யொடுநறுங் கவிதை நூல்பல
மட்டென வரைந்தும் மாணவர்க்கருளியும்
ஏத்துறு பணி கமழ் மாத்தமிழ்ப் புலவர்
பல்கலைக் கழகப் பதிப்புத் துறையின்
மதிப்பினை உயர்த்தி மாண்வினை இயற்றும்
பதிப்புச் செல்வர் சிலம்பினை இசைத்தோன்
அரும்பெயர் தாங்கும் பெருந்தகை அரங்கத்
தலைமை ஏற்றிருக்கும் தலைமகற் கன்புசால்
வணக்கமிவ் அரங்கம் மணக்கப் போந்துள
அவையோர் செவிக்கு நவைதீர் தமிழ்த்தேன்
வார்த்திட இருக்கும் கீர்த்தி சால் கவிஞர்
பெருமக்கட்கும் பொருவிலாச் செம்மல்
சத்திரபதி சரபேந் திரபூ பாலர்
வழிவந்த மர்ந்துள இளவரசர்க்கும் என்
அன்பு வணக்கம், இன்பொளி படரும்
நூலக விளக்கைக் காலப் பேரவை
கவின்கொளத் தூண்டித் தலைசிறும் நற்பணி
செவ்விதின் புரிந்து செந்தமிழ் வளர்க்கும்
பன்மொழி யறிஞர் இன்மொழி முகத்தர்
என்றும் சிவமெனும் இயற்பெயர் தாங்கும்
வென்றிகொள் இயக்குநர் வியன் பேராசான்
மு. ச. சிவமெனும் முதறிஞர்க்கும்
நூலகம் செழிக்க ஏலும்வழியெலாம்
நறும் பணியாற்றும் நல்லோர் தமக்கும்
பைந்தமிழ் பருக வந்து வீற்றிருக்கும்
இருபா லார்க்குமென் இருகரங் கூப்பி
வணக்கம் புரிந்து கணக்கிலாப் புகழ்கூர்
அரியேறாகிய சரபோசியரசர்

திருவார் புகழுள் சிறிதெடுத் திசைப்பேன்
குறையெனின் பொறுத்து நிறைநலங்கொளலே.

மன்னிய சீர்சால் தமிழ்நாட்டின் - தனி
மதிப்பிற் குரிய தஞ்சைக்குப்
பொன்னி நடந்தாற் புகழுண்டு - பல
புலவோர் பிறந்த பீடுண்டு
கலைபல வளர்த்த கனமுண்டு - கலைக்
கன்னல் செந்நெல் வளமுண்டு
புலிவளர் கொடியைத் திசைநான்கும்
போதிந்தோர் ஆண்ட புகழுண்டு
தஞ்சைப் பதியின் தலையாய - பெருந்
தகவிற்கு ஏதுஇரண் டுண்டு
ஒன்று : மஞ்சுப் பொதிசூழ் மேருவென - உயர்
மாப்பெரு உடையார் திருக்கோயில்
இரண்டு : கலைவாழ் நிலவாய் உலகெங்கும் - ஒளி
கமழும் கலைமா மகள்கூடம்
தலை அண்ணாக்கும் தனிக்கோயில் - ஒரு
சமயத்தார்க்கே உரித்தாகும்
கற்றார் பரவும் கலைமகள்மால் - நவி
கருதும்கல்விப் பசிநீங்க
உற்றார்க் கெல்லாம் உரித்தாகும் இதன்
உயர்விற் கதுவேஉரை கல்லாம்

திக்கெட்டும் தேனீயாய்ச் சென்றுதேடித்
தெள்ளுதமிழ்ச் சுவடியொடு தெலுங்கின் ஓலை
தக்கவட மொழிச்சுவடி பலகொணர்ந்து
தகுவமைபல் புலவரொடு சார்ந்தாராய்ந்து
மக்களுய்ய மாண்பமையிந் நூலகத்தை
மதிநலத்தால் சமைத்தசர போசிமன்னர்க்கு
ஒக்கஒரு மன்னரை நாம்காணப் போமோ
உலகமகா மேதையருள் ஒருவர் அன்னார்.
இசைக்கலையின் நுட்பமெலாம் எண்ணித்தேர்ந்தாங்கு
இலக்கியமும் படைத்தளித்த ஏந்தல் நாளும்
நசைவளரச் சித்தமருத்துவப் பாங்கெல்லாம்
நாட்டார்கள் பயன்கொள்ள நயந்துதந் தீங்கு

அசையாத புகழ்கொண்ட அரசர்செம்மல்
அற்புதங்கள் பலவிளைத்த அறிஞர், நோயின்
வசைதவிர்த்த மருத்துவ மாமன்னன் கீர்த்தி
வையமுள்ளளவரை நிமிர்ந்து வாழ்கமாதோ.

நாட்டிய நன்னூல் பலதேர்ந்து நாளும் பரதக்கலை
வளர்த்துத்
தீட்டிநல் லோவச் செழிப்பெல்லாம் சிந்தைக்கினிதாத்
தேக்கித்தமிழ்
நாட்டது தணலை உலகறிய நட்டமராட்டிய மாமன்னன்
ஏட்டமை நூல்பல அச்சேற்றி இயங்கச்செய்த
இணையில்லான்.

பல்கலை தேர்ந்த பார்த்திபன்வாழ் பன்மொழிபயின்ற
பண்டிதன்நம்
தலைமுறை செழிக்கமுத்த மிழைத் தகவுற வளர்த்த
தார்வேந்தன்
நிலவரை நீள்புகழ் அனைத்துந்தன் நித்திலக்குடைக்கீழ்
நிறைத்தவன் சீர்
வலமுற வாழ்த்தி மகிழ்ந்திடுவோம் வரலாறெழுதி
வழங்கிடுவோம்

நல்லிசை நாடகக் குறவஞ்சி நாயனாகப் புகழ்சான்ற
வல்லவன் இருலைப்புட் பெயரோன் மன்பதை வாழ
மனங்கொண்டோன்
செல்வமும் போகமும் தேடாமல் தெய்வப்பணி பல
செய்தோன் சீர்
சொல்லி மகிழ்ந்து சதித்திடுவோம் தொடர்ந்து நூலகத்
தினை வளர்த்திடுவோம்.

வாழி சரபேந்திர பூபாலன் வண்புகழே
வாழி யவன் தந்த வளர்புகழ் நூலகம் வாழி
வாழி அதன் தொண்டர் வாழி திருவருளால்
வாழி முத்தமிழ்க் கலைகள் வாழி என வாழ்த்துதுமே

வாழ்க வணக்கம் நன்றி

மனுவேல் எழுதிய
அதிரியர் அம்மானை

பதிப்பாசிரியர் : பேராசிரியர் சாம் தானியேல்

பக்கங்கள் : 39+21+59. பதிப்பு : 9—6—1986. விலை ரூ. 7-50.

அல்சீரியாவில் அமைந்துள்ள கான்சுதன்தயின் பல்கலைக் கழகப் பேராசிரியராகப் பணியாற்றிய சாம் தானியேல் அவர்களது முயற்சியால் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் 243-ஆவது பதிப்பு நூலாக வெளி வந்த "அதிரியர் அம்மானை" இரண்டாம் நூற்றாண்டில் உரோமாபுரியில் நடந்த நிகழ்ச்சியினை நவில்கிறது.

சிற்றிலக்கிய வளர்ச்சி :

"சிற்றிலக்கியச் செல்வங்கள்" பற்றிச் சிறப்பித்துச் சொல்லுகிறார் ந. வீ. செயராமன் அவர்கள் (1967). "தொல்காப்பியர் காலத்தில் இடப்பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் கோவையாகச் செடியாகி, எட்டாம் நூற் றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து, பதினோராம் நூற்றாண்டில் சதகமாகவும், பரணியாகவும் அரும்பி, பன்னிரண்டாம்

நூற்றாண்டில் பிள்ளைத் தமிழாக மொட்டாகி, பதினான் காம் நூற்றாண்டில் தூதாகப் பூத்து, பதினாறாம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்து, பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்து, சிற்றிலக்கியப் பெருமரத்தில் இன்று ஆயிரக்கணக்கான சுவைக் கனிகள் பழுத்து, தமிழ்த்தேன் மற்றும் வண்டுகளை வரவேற்கின்றன. -(ப. 31)

நாட்டுப்புறப் பாடல்கள் :

'வாய்மொழி இலக்கியம்' எனவும், 'நாட்டார் பாடல்' எனவும் வழங்கிவரும் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் கற்பனைக் களஞ்சியங்களாகவும், உணர்வுப் பிழம்பாகவும், சமுதாய உயிர்த்துடிப்புகளாகவும் அமைந்துள்ளன. 'முத்துப்பட்டன் கதை'யினைப் பதிப்பித்த பேராசிரியர் நா. வானமாமலை (1971) கூறுவது போன்று, "உழைக்கும் ஊரக மக்களின் பண்பாட்டை அறிந்துகொள்ள விரும்புவோர் நாட்டுப்புறப் பாடல்களைப்பற்றித் தெரிந்து கொள்வது தேவையாகும்". நாட்டுப்புறப் பாடல்களைப் புராணக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், சமூகக் கதைப் பாடல்கள் என மூன்றாகப் பகுப்பர். இவை ஏறத்தாழ முந்நூறு உள்ளன. இவற்றுள் அம்மானைக் கதைப்பாடல்கள் மட்டும் ஐம்பது கிடைத்துள்ளன.

அம்மானைக் கதையும், விளையாட்டும் :

சங்க இலக்கிய மகளிர் ஆடல் பாடல்களுள் குரவை, துணங்கு, ஊசல், பந்து, கழங்கு ஆகியவை இசை கலந்த ஆட்டங்கள் எனவும் பாவை, புனலாடல், அலவனாட்டுதல், அம்பாவாடல், சிற்றிலிழைத்தல் ஆகியவை இசையிலா ஆட்டங்கள் எனவும் இருகூறாகும். சங்க இலக்கியம் விளம்பும் கழங்காட்டமே இன்றைய அம்மானை எனலாம். தமிழகத்தில் சமுதாய வேறுபாடுகளால் இவ்வாட்டம் ஏழங்காய் ஆட்டம், கல்லங்காய் ஆட்டம், அம்மானைப்

பண்ணாங்கல், கழற்சி ஆட்டம் எனப் பல்வேறு பெயர்களுடன் வழங்கப்படுகிறது. அம்மானைக் கதையும் அம்மானை விளையாட்டும் தொடர்புடையவை எனக் கூறும் த. இராசாராம் அவர்கள், அம்மானைப் பாட்டாக வளர்ந்த வரலாற்றை எடுத்தியம்புவர் (தமிழில் அம்மானைப் பாடல்கள், 1970).

அம்மானை என்னும் சொல்லுக்குச் சிலப்பதிகாரம் வாயிலாக நான்கு வகைப் பொருள்கள் புலனாகின்றன :

1. தாய் (10 : 135—137), 2. தலைவி (29 : 16), 3. அம்மானை ஆடுங்கருவி (29 : 17), 4. தீ (29 : 19) அம்மானை கலம்பக உறுப்பாகவும், பிள்ளைத்தமிழ் உறுப்பாகவும், வரிப்பாடல்களாகவும் இடம்பெற்றுள்ளது. 'அம்மானை' என்ற சொல் காலப்போக்கில் தோழியினையும் கொற்றவையினையும் குறித்து வரலாயிற்று. சிலப்பதிகாரம் தரும் அம்மானை வரி மகளிர் மூவர் வினவியும் விடைகூறியும் விளக்கம் வழங்கியும் பாடி மகிழ்வதைப் புலப்படுத்துகிறது (29 : 16). 'ஓங்கு அரணங்காத்த உரவோன் உயர்விசும்பில் தூங்கெயில் மூன்றெறிந்தசோழன்' எனத் தெளிவுறுத்துவர், பெண்பாற் பிள்ளைத் தமிழில் எட்டாம் பருவமாக அமைவது: தலைவியைத் தாயாரும் செவிலியரும் அம்மானை பாடத்தூண்டுவர்.

அம்மானை இலக்கியம் :

அம்மானை இலக்கியத்தை மூவகைப்படுத்துகிறார் பதிப்பாசிரியர் :

1. நூலின் பெயரிலும் அதனுள்ளும் அம்மானை என்னும் சொல் பெற்று வருபவை : (மாணிக்கவாசகர் அம்மானை, சிவகங்கை அம்மானை, புவனேந்திரன் அம்மானை)
2. நூலின் பெயரில்மட்டும் அம்மானை எனும் சொல் இடம்பெறுவது (வைகுந்த அம்மானை, இராமப்பையன் அம்மானை)

3. அம்மானை என்னும் சொல்லே பெறாது வருவது : (அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் கனவு மாலை).

கதைப் பாடலாகிய அம்மானை இலக்கியம் நாயக்கர் காலத்தில் பெரிதும் வளர்ச்சியுற்றது. மராட்டியக் கதைப் பாடலாகிய 'இலாவணி' மராட்டியர் தஞ்சையை ஆண்ட செய்தியைச் செப்புகிறது. அம்மானை இலக்கியச் செல்வாக்கு பல்வேறு சமயங்களிலும் இடம்பெற்றுள்ளது. சீரங்க அம்மானை, மாணிக்கவாசகர் அம்மானை, நபியவதார அம்மானை, கித்தேரியம்மாள் அம்மானை, பார்சுவ நாதர் அம்மானை என்றெல்லாம் பல்வேறு சமய அடிப்படையிலமைந்த அம்மானைகள் விளங்குகின்றன.

மேலைநாடுகளில் அம்மானைப் பாடல்கள் பாணர் அம்மானை (Ministral Ballad), வீதிவழி அம்மானை (Broadside Ballad). இலக்கிய அம்மானை (Literary Ballad) என மூவகையாம். இலக்கிய அம்மானை பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து வளர்ந்து வருகிறது என்கிறார் பதிப்பாசிரியர் சாம் தனியேல் (v : xxiii).

அதிரியர் அம்மானை அமைப்பு :

காயல்பதி நகரான் தாணுவெனும் அரசன் வேண்டத் தமிழறிந்த கிறித்தவராகிய மனுவேல் இயற்றிய அதிரியர் அம்மானை ஆயிரத்து நானூற்று அடிகள் கொண்டதாக 1913-ஆம் ஆண்டு மார்கழி மாதம் பதினாறாம் நாள் சனிக்கிழமை நிறைவுற்றதாகும். நூலில் ஆய்வுரை, கதைச் சுருக்கம், ஆங்கில அறிமுகத் திறனாய்வு, மூலபாடம் ஆகியவை அமைந்துள்ளன. உரோமை அரசன் மசுமியான் தன்னிடம் ஏவலாளரகப் பணிபுரிந்த அதிரியானையும் அவன் மனைவி நத்தாலியாளையும் கொடுமைப்படுத்தியதையும் அதிரியான் கொள்கைப் பிடிப்பும், இளமைத் துடிப்பும் நிறைந்தவராகத் தம்முயிரையே ஈந்ததையும், நங்கை

நத்தாலியாள் உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த உதவும் மனைவியாக மிளிர்ந்ததையும் எடுத்து மொழி கிறார். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை கலைக் காப்பியங்களாகும். வீரமாமுனிவர் எழுதிய கித்தேரி யம்மாள் அம்மானை, சுவீகார் எழுதிய முத்திவழி அம்மானை ஆகியவற்றைப்போன்று கிறித்தவ நாட்டுப்புறக் காப்பியமாகத் திகழ்வது அதிரியர் அம்மானை ஆகும். இந்நூலை அடியொற்றித் தஞ்சைப் பெரும்புலவர் தாமசு 'மூவர் அம்மானை'' யினைப் பாடியுள்ளார். '' தமிழும் அறுபாசையும் அறிந்தோன் மங்காப் பாவேந்தன் மனு வேல்'' அவர்கள் (26-27) '' சங்கை மிகுந்த தவ அதிரியான் கதை'' யினை (44) எளிமையாக எடுத்துக் கூறியுள்ளார்.

அதிரியானும் நத்தாலியாளும் :

அம்மானைப் பாட்டுடைத் தலைவன் அதிரியானும் அவர் மனைவி நத்தாலியாளும் அறிமுகமாகும் இடம் குறிப்பிடத்தக்கது :

"தாலத்தே வேந்தர் தனக்கேவ லாளனுமாய்
வேந்தர் மணிவாசலுக்கு மிக்க துரையாகி
போந்ததிரியானுவைப் புவியில் மகிழ்ந்திருந்தார்
ஆண்டு மூவேழாய் அவர்க்குகவும் காலமதில்
கூண்டறவை மண்ணிற் கொண்ட ஈட்டஞ் செய்துகொண்ட
நங்கை நற்றாலியள் நாமமும் பேரழகும்
சங்கையும் சொல்லச் சரியுவகை காணாதே" (210-216)

உரோமை அரசன் மசுமியானிடம் அரண்மனை அலுவலராக ஊழியம் புரிந்துவந்த அதிரியான் இருபத்தோராகவையில் நத்தாலியாளைத் திருமணம் செய்துகொண்டாராம், நத்தாலியாள் இறைவனிடம் மன்றாடும் பாங்கு கருதத் தக்கது :

"வானுலகு மண்ணு மலைகடலு மற்றுமுள்ள
ஏனையுயிரும் படைத்த ஏக பராபரனே
ஒப்பிலாநீதி ஒருவனே உத்தமனே
இப்புவியில் எம்மையெல்லாம் ஈடேற்ற நின்றோனே"
(293—296)

பொதுமை நோக்கில் தொடக்கத்தில் அமைந்திருந்தாலும், நூலினுள்ளே இயேசுவை ஈன்ற அன்னை மரியாளைத் தன்னிகரற்ற வகையில் போற்றிப் புகழ்கிறார் :

"ஆனாள் வயிற்றிலிருந்தாளை. அன்றேசுவுக்கீன தகுந்தாளை,
கோனார் மலையிலிருந்தாளை, குதலைமொழியைப்
பெறுந்தாளை
ஈனா வரம்பை யெரித்தாளை, யீறேஇனிமைப் பொறுத்தாளை
மானார் கரசியெனுந்தாளை, மரியைப் பணிய மறுவறுமே
மரியைப் பணிந்நார் மரியார் மெய்வானத் திருக்கும்
வளருநன்மை பிரியத்துடனே பணியாதார் பின்னாருதவி
பெறுவார்
சொல்லரிய கரியவரும் பொருளை ஆதிக்குகந்த அருஞ்சாதனை
உரியற்குரிய ஒருபொருளை உலகத்தளித்தாய் உதவுவாயே"
(483—490)

சுவக்கீமுக்குள் அன்னாளுக்கும் மகவாகப் பிறந்தவள் மரியாள். ஏவாளால் ஏற்றப்பட்ட பிறவிப்பிணியாம் துன்பம் துடைத்தவள் ; விண்ணரசி எனவும் 'இராக்கினி' எனவும் போற்றப்பெறுபவள் ; மரியாளைப் பணிந்தால் மாசுமறு வனைத்தும் நீங்குமாம். மரியாளின் மாண்புணர்ந்து வணங்கி வருவோர் மரணமிலாப் பெருவாழ்வு பெறுவாராம். இறைமகனாகிய இயேசுவை ஈன்று புறந்தந்த அன்னை மரியாள் என்றும் உதவும் ஏந்திழையாக இலங்குகிறாள். வீரமாமுனிவரின் அடைக்கலமாலையும், வேதநாயகரின் தேவமாதா அந்தாதியும் பாடிப் பரவிய அன்னை மரியாளின் மாண்பு எளிதாகவும் தெளிவாகவும் எடுத்தியம்பப்படுகின்றன.

"சேசுவைத் தொழல் ஆகாதோ, உங்கள்
பாசவினையெல்லாம் பறந்து போகாதோ ?"

என்பார் மயிலாடுதுறை நீதிபதி வேதநாயகர். நூலாசிரியர் மனுவேல் பாடும்போது, "மரியாளைப் பணிந்தால் ஒரு போதும் மரியாது - சாவாது - என்றும் புகழுடன் திகழ்வர் என எடுத்தியம்புகிறார்.

இயேசுவை இந்நாட்டில் மரபிற்கேற்ப வீரமா முனிவர் "சிவமலி தனிமுதலே" என்று தேம்பாவணி வாயி லாகப் போற்றியுள்ளார். இரட்சணிய யாத்திரிகம் வழி யாக என்று ஆல்பிரடு கிருட்டிணனாரும் இம்மரபினை ஏற்றுள்ளார். சிவபெருமானைக் குறிப்பிடும் "தம்பிரான்" என்னும் சொல் இயேசுபெருமானுக்கு வழங்கப்படும் மரபு பதினாறாம் நூற்றாண்டில் (1578) கொல்லத்தில் அச்சான முதற் புத்தகமாகிய 'தம்பிரான் வணக்கம்' புலப்படுத்து கிறது. இந்நூலாசிரியர்,

"தம்பிரான் தன்மறைக்காய் சாகத்துணிவுகொண்டு
நம்புவான் தேவி" -(556—557)

என்று நத்தாலியாள் பெருமிதம் கொள்கிறாள்.

அதிரியான் நத்தாலியாளிடம் பேசும் பாங்கு கலிங்கத்துப்பரணியின் கடைதிறப்பினை நினைவூட்டும் பாங்கு அமைந்துள்ளது.

"அன்பே எனதுயிரே ஆவிக்குடையவளே
இன்பான தேவியாரே என்தனக்கு வாசல்விடும்
தேனே என்அன்பே தெவிட்டாத தெள்ளமுதே
மானே மதுரிதமே வஞ்சியே வாசல்விடும்
என்கண் ணொளியே எனக்கரிய ஆதரவே
உன்கண்ணில் நான்விழிக்க ஒண்ணுதலே வாசல்விடும்"
-(576—581)

நத்தாலியாள் தன் கணவன் உயிரையும் பொருட்படுத்நாது திருமறைப் பற்றுறுதியுடன் திகழ்வதாக அறிந்து புகழத் தொடங்குகிறாள் :

"கோமான் துரைமார் குலவிளக்காய் வந்துதித்த
பூமானே, என்னுடைய புண்ணியத்தின் ஆதரவே"
-(592—593)

அதிரியான் அல்லலுற்ற செய்தியினை உளமுருகச் சொல்லு கிறார் மனுவேல் ;

"விற்புத்தியாக விரோதம் விளைத்ததுவும்
கட்டியடித்ததையும் காலை முறித்ததையும்
முட்டவதைத்தையும் மோசமறச் சொல்லுகிறேன்"
-(628-630)

புறச்சமயப் பழிப்புரை :

காலத்தின் சூழ்நிலையினையும் சமுதாய வாழ்வியலையும் எடுத்துக்காட்டும் இந்நூலுள்,

"உன்னுடைய வேதத்தொழுங்கும் நடையும்
இன்னிலத்தோர் கேட்க இயம்புகிறேன்" -(677-678)

எனத்தொடங்கி ஏறத்தாழ எழுபது அடிகள் சைவ-வைணவ சமயப் பழங்கதைகளைப் பழித்துரைக்கின்றன (667-747).

இயேசு பெருமானின் அருளாசீரை விரித்துரைச்கும்போது,

"குற்றமற்ற மின்னார் குலராச கன்னிமகன்
எல்லார்க்கும் கர்த்தன் எமைப்படைத்த தேவபிரான்"
-(745-746)

என்றெல்லாம் எடுத்தியம்புகிறார்.

அதிரியான் உரோமை வேந்தன் மகுமியானால் கொல்லப்பட்டபிறகு, நெருப்பால் சுட்டும் வேகாத அவனது உடலினைக் கான்சுதாந்திநோபிலுக்குக் கொண்டு

செல்கின்றனர். நத்தாலியாளை மற்றொரு துரை மணக்க முனைந்தபோது மறுத்துரைக்கும் நத்தாலியாள் கான்சு தாந்திநோபிலுக்கு விரைந்து செல்கிறாள். மாறுவேடம் பூண்ட நத்தாலியாளின் நவகோலத்தினைப் பதினாறு அடிகளில் (862—877) விளம்புகிறார் நூலாசிரியர் மனுவேல். அதிரியான் என்னும் "நாதன் தனக்கேற்ற நத்தாலியாளின் பெருமையினையும் இந்நூல் கூறுவதால் "அதிரியர் அம்மானை" எனப் பெயரிட்டுள்ளனர். வேதபராபரனைப் புகழ்ந்தவாறே நத்தாலியாள் வானகம் ஏகியதாக நூல் நிறைவு பெறுகிறது.

சிற்சில குறிப்புகள் :

இந்நூல் ஆய்வுக் குறிப்புகளுடன் சிறப்பாக அமைந்துள்ளது. எனினும் அச்சுப்பிழை, சந்திப்பிழை ஆகியவற்றைப் பெரிதும் கருத்தூன்றிப் பதிப்பிப்பது வேண்டற்பாலது. மூல பாடத்தின் அடியில் திருத்தக்குறிப்புகளைத் தருவதும் விரும்பத்தக்கதாகும். அம்மானை இலக்கிய வரலாற்றில் அதிரியர் அம்மானை குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது.

முனைவர் **பா. வளன் அரசு,**
தமிழ்ப் பேராசிரியர்,
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை.

AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library.' It is open to you to share the honour of Serfoji, ni your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

DIRECTOR,
Sarasvati Mahal Library, Thanjavur

வாதரோக சிகிச்சை

பதிப்பாசிரியர் : எஸ். வாசுதேவ சாஸ்திரி B. A.,

பக்கங்கள் : 55+173+8+7. (31—1—79) விலை : ரூ. 30/-

சரபேந்திர வைத்திய முறைகள் என்னும் சரபேந்திர மருத்துவ முறைகள் பற்றிய இந்நூல் எண்பது வகை வாதங்கள் பற்றிய முழுவிவரமும், அவற்றைத் தணிக்கும் மருத்துவமும் பற்றி விளம்புகிறது. நகம் பிளத்தல் முதலாக உள்ளம் ஓரிடம் நிலையாதிருத்தல் முடிவாக வாத நோய்கள் எண்பது எனத் தொகுத்துக்கூறி, நலம் தரும் மருத்துவ முறைகள் நூற்று எழுபத்தாறுபற்றி எடுத்தியம்புவது இந்நூலின் இயல்பாகும்.

யூகிமுனி மருத்துவச் சிந்தாமணியில் உள்ள வாத நிதானம் எழுநூற்று எண்பத்து நான்கடிகள் கொண்டது. அந்திவாதம் முதல் குதிங்கால் வாதம் முடிய நாற்பது வாதங்களின் இயல்புகள் முறைகளோடு எடுத்து மொழியப் பட்டுள்ளன. அமுத சஞ்சீவித்தைலம் முதல் சீரதைலம் முடிய எழுபத்தேழு தைலங்கள் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளன. கல்கம், கசாயம், மாத்திரை, ஒத்தடம், நெய், பத்து, சூரணம், பணியாரம், இலேகியம் எனப் பல்வேறு மருத்துவங்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

பா நடையில் அமைந்த இந்நூலில் அடிக்குறிப்பாக விளக்கமும், மருந்து செய்முறையும், பயன்பாடும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அமுதசஞ்சீவித் தைலமும் (75), சீர தைலமும் (76), அனைத்து வாதங்களையும் போக்கும் ஆற்றல் மிக்கவை என்பர். மகாவாதத்துக்கு அரப்பொடி

எண்ணெயும், பெருங்கால் வாதத்துக்கு ஆமணக்கெண்ணெயும், முடக்கு வாதத்துக்கு ஆயில்பட்டை எண்ணெயும் பயன் தருவதாக (*167*) விளக்கமாக எடுத்துரைப்பர், அண்ட வாதத்துக்குச் சாறணைவேர் எண்ணெயும் (*158*) பயன் தரும், எரிவாதத்துக்குத் தாளியிலைத் தைலமும் (*100*), திருபேரிடித்தைலமும் (*101*) நலம் செய்யும் என்பர். திமிர் வாதத்துக்குப் பலாவில்வாதித்தைலமும் (*109*), புளியிலைத் தைலமும் (*110*) நலம் தருபவையாம். வாதக்கட்டுக்கு வேப்பெண்ணெய் மருந்து பயன்தருவதை விரித்துரைப்பர் (*118*).

வடமொழிச் சொற்களை எளிய தமிழ்ச்சொல்லாக்க விளக்கத்துடன் வழங்குவது வேண்டற்பாலது. வாத, பித்த, கபங்கள் பற்றிய விளக்கம் தொடக்கத்தில் உள்ள முன்னுரையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பாட்டு அடிகள் வேறு எழுத்து வடிவத்திலும், விளக்கமுறைகளை மற்றோர் எழுத்து வடிவத்திலும் அச்சிட்டால் படிப்பதற்கு எளிதாகவும், தெளிவாகவும் பயன் நிறைவாகவும் அமையும். நூலின் தொடக்கத்தில் பொருளடக்கம் தருவது இன்றியமையாததாகும். அது மருந்து அகராதியாக இறுதியில் இடம் பெற்றுள்ளது.

முனைவர் **பா. வளன் அரசு,**
தமிழ்ப் பேராசிரியர்,
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை.

எண்ணெய் வாகடம்

பதிப்பாசிரியர் : மருத்துவர் ச. அரங்கராசன், B. I. M.,
அம்மாப்பேட்டை.

(பக்கங்கள் : iv+220. 11—9—89. விலை : ரூ. 30/-)

தேரையரின் தைல வருக்கச் சுருக்கம், தன்வந்திரியின் தைலம் ஐந்நூறு ஆகியவை பாடல்களால் அமைந்த நூல்களாகும். எண்ணெய் வாகடம் என்ற இந்நூல் (சுவடி 154, படி 1218) உரைநடையாக எழுதப்பட்டுள்ளது.

வாகடம் என்னும் சொல் மருத்துவத்தைக் குறித்தாலும் உயிரிமருத்துவம் என்று நுட்பமாகக் கூறப்படுகிறது ! தம் நோயை விளக்கமாகக் கூறவியலாத குழந்தையர்க்குரிய மருத்துவமும் பால வாகடம் ஆயிற்று என்பர்.

நோய் நீக்கி நலமாக்கும் நூற்று எழுபத்து மூன்று எண்ணெய் வகைகளைப் பற்றிய தொகுப்பாக விளங்கும் இந்நூலில் சிறப்பியல், பொதுவியல் என இரு பகுதிகள் உள்ளன, முதற்பகுதியில் சரக்கு செய்முறை, பயன் என்று ஒவ்வொரு வகை எண்ணெய் பற்றியும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில் தைலத்தின் பன்னிருவகையான பிறப்பு (கொதித்தல், வருக்கல், புடமிடுதல் போன்றவை), ஐவகைத் தைலங்கள் (குடி, பிடி, சீலை, துளைப்பண்டுவம், முடி), மருந்துப் பொருட்களின் செய்கை ஆகியவை இடம்பெற்றுள்ளன. சித்த மருந்தகங்களில் பயன்படுத்தப்படும் எண்ணெய்கள் நாற்பத்துமூன்று பற்றியும், அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் குறிப்புகள்

தரப்பட்டுள்ளன. பின்னிணைப்பாகத் தேரையர் நூலில் உள்ள ஸ்தலங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. மருந்து செய்முறை பற்றிய சொல்லடைவு (பக்கம் 189 முதல் 212 முடிய) இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

அச்சுப்பிழையும், பதிப்புக் குறையும் களையப்பட வேண்டும். பொருளடக்கம் நூலின் தொடக்கத்தில் இடம் பெற வேண்டும். பதிப்பு முறையில் செய்தி அமைப்பு ஒழுங்கு பெரிதும் கருத்திலிருத்தப்படவேண்டும். அரங்கராசன் என்ற பெயர் அகரம் நீங்கியும் நீக்காமலும் இருவகையாக இடம்பெறுவது வருந்தத்தக்கது. மருத்துவ நூற்பதிப்பில் தேவைப்படும் அளவைகள் இடம்பெற்றிருப்பது (பக். 109—110) பாராட்டத்தக்கது.

வாதம் எண்பதும் போக்கும் எண்ணெய் முதல் பிள்ளைத்தோடம் போக்கும் எண்ணெய்வரை அனைத்தையும் எல்லோரும் புரிந்துகொள்ளவும், பயன்படுத்தவும் இந்நூல் பெரிதும் உதவுகிறது.

முனைவர் **பா. வளன் அரசு,**
தமிழ்ப் பேராசிரியர்,
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை.

வண்ணத் திரட்டு

பதிப்பாசிரியர் : வித்துவான் தி. வி. கோபாலன்.

பக்கங்கள் : 98 + xi. விலை : ரூ. 14/-

பரந்துபட்டுச் செல்வதோர் ஓசைத் தொகுதியாகிய பாவினை ஆசிரியம், வெண்பா, வஞ்சி, கலி, மருட்பா, பரிபாடல் என ஆறு வகையாக விளம்பும் தொல்காப்பியம் அவற்றின் இலக்கணத்தையும் எடுத்தியம்பும் தொல்காப்பியச் செய்யுளியலில் கூறப்படும் உறுப்பு முப்பத்து நான்கனுள் இறுதியில் வருவது வண்ணம் ஆகும். ஓசைகள் பலவாய் அமைவனவற்றை நுட்பமாக அறிந்து நிரல்படுத்தி அவை தவிர வேறு ஓசை வேறுபாடு வாராது என்பர் ஒல்காப்புகழ்த் தொல்காப்பியர். சந்த வேறுபாடுகளாகிய வண்ணங்களும் பிற்காலத்தில் பெருகிவரலாயின. பதினைந்தாம் நூற்றாண்டில் வில்லிபுத்தூராரும், அருணகிரியாரும் சந்தப்பாக்களை வீறுபெறப் பாடி வழங்கியுள்ளனர்.

சரசுவதி மகால் நூலகச் சுவடிகள் மூன்றில் உள்ள இருபத்திரண்டு வண்ணப் பாடல்களைத் திரட்டித்தருவது இந்நூல். சடையப்பன் வண்ணம் முதல் செண்டலங்காரர் வண்ணம் முடிய அனைத்தையும் விளம்பும் இந்நூலில் சிவபெருமான், திருமால் ஆகியோர் பற்றிய வருணனைகள் சிறப்பாக அமைந்துள்ளன. வீரப்ப நாயக்கனது கொடை முதலாய பண்புகளை விளம்புவது வீரப்ப நாயக்கன் வண்ணம் ஆகும்.

பிற்சேர்க்கையில் புராண இதிகாச வரலாறுகளுள் இன்றியமையாத சிற்சில குறிப்புகள் தரப்பெற்றுள்ளன. இறுதியில் அமைந்த அருஞ்சொற்பொருள் விளக்கம் பல நுட்பச் செய்திகளை விளம்புகிறது. அகரம் என்பது பார்ப்பனச்சேரியைக் குறிப்பது என்பர். அனந்தன் ஆதி சேடனைக் குறிப்பதாகும். கழுக்காணி என்ற சொல் உலக்கையினையும், சோம்பேறியினையும் குறித்து வருவதாகும். வேது என்பது ஒத்தடமாம். விலாசர் என்றால் விளையாட்டுடையவரைக் குறிக்கும்.

அநாதசுவாமி வண்ணம் சிவபெருமான் அடியவர் அறுபத்து நால்வருக்கு அருள்புரிந்ததாகத் தெரிவிக்கிறது. நெல்லைநாதர் வண்ணம் பருவுருவும், சிற்றுருவும் ஒரே நேரத்தில் கொண்ட சிவபெருமானின் சிறப்பினைச் செப்புகிறது. தியாகராசர் வண்ணம் சோமாசிமாறர்க்கு அருள் செய்த சிவபெருமான் சுந்தரர்தம் பாடலுகந்து ஆடல் மறந்ததாக விரித்துரைக்கிறது. சொக்கநாதசுவாமி வண்ணம் சந்த இன்பத்துடன் விளங்குகிறது. வேளாண் குடிச்சிறப்பு இவ்வண்ணங்களில் இழைந்தோடும் எண்ணப் பெருமை எனலாம். தஞ்சைநாயகம் என்ற செண்டலங்கார வள்ளல் போன்றோர் கற்றறிந்த சான்றோர் போற்றிய சால்புமிக்கவராவர் என்பர். கலை மலிந்த இந்நூல் நவில்தோறும் நயம் பயப்பது.

முனைவர் **பா. வளன் அரசு,**
தமிழ்ப் பேராசிரியர்.
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை,